
குர்ஆனின் குரல்
المُحَرَّم - ١٤٤٦
ஜூலை - 2024
₹25/-

999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# இவ்வுலகம் வெறும் அலங்காரமே!

زُيِّنَ لِلَّذِينَ كَفَرُوا الْحَيَوٰةُ الدُّنْيَا وَيَسْخَرُونَ مِنَ الَّذِينَ آمَنُوا ۘ وَالَّذِينَ
اتَّقَوْا فَوْقَهُمْ يَوْمَ الْقِيَامَةِ ۗ وَاللَّهُ يَرْزُقُ مَن يَشَاءُ بِغَيْرِ حِسَابٍ ﴿٢١٢﴾

“(ஓரிறை) நிராகரிப்பாளர்களுக்கு இவ்வுலக வாழ்வு அலங்காரமாக(க் காணுமாறு) ஆக்கப்பட்டிருக்கிறது; அதனால் (ஓரிறை) நம்பிக்கை கொண்டவர்களை அவர்கள் பரிகாசிக்கின்றனர் – (ஆனால் அல்லாஹ்வை) அஞ்சியொழுகுபவர்கள் மறுமை நாளில் அவர்களுக்கு மேலாக (உயர்ந்த நிலையில்) இருப்பார்கள் – அல்லாஹ் தான் நாடியவருக்குக் கணக்கின்றி வழங்குவான்” அல்குர்ஆன்(2:212)

நிலையற்ற, நிரப்பமற்ற, பிறரை ஏமாற்றக்கூடிய பகட்டான, பகையை உண்டு பண்ணக்கூடிய, பாவங்களுக்கு வழிவகுக்கக் கூடிய இவ்வுலகை இறை நிராகரிப்போருக்காக, இணை வைப்போருக்காக அலங்காரமாக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகை அல்லாஹ் படைத்ததிலிருந்து சந்தோஷ பார்வையுடன் மீண்டும் திரும்பிப் பார்த்ததில்லை. “அல்லாஹ்விடம் இவ்வுலகிற்கு மதிப்பு இருந்திருப்பின் தன்னை நிராகரிப்பவர்களுக்கும், இணை வைப்பவர்களுக்கும் ஒரு சிரங்கை தண்ணீர் கூட அல்லாஹ் கொடுத்திருக்க மாட்டான்” என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

“இப்படி சபிக்கப்பட்ட உலகை ஏற்றுக் கொண்ட காபிர்கள், ஈமான் கொண்டு வாழும் ஏழை முஸ்லிம்களைப் பார்த்து பரிகாசம் செய்கிறார்கள். ஆனால் ஈமான்தாரிகளுக்கு மறுஉலகில் மிக மேலான அந்தஸ்து உள்ளது. உலகின் வசதி வாய்ப்பு என்பது விதியில் எழுதப்பட்டது. அதை வைத்து அவர் அல்லாஹ்விடம் உயர் அந்தஸ்துள்ளவர் என எண்ணி விடக்கூடாது என்ற கருத்தை மேற்கூறப்பட்ட வசனம் நமக்கு போதிக்கிறது.

இவ்வுலகம் மறுஉலகின் விளைநிலம். இங்கு நன்மையை விதைத்தால் மறுமையில் அறுவடை செய்து கொள்ளலாம். தண்ணீருக்கு மேலே செல்லும் கப்பலைப்போலவே, இவ்வுலகை நாம் கையாள வேண்டும். தண்ணீர் கப்பலின் அடியில் இருக்கும் காலமெல்லாம் கப்பல் கரை சேரும் வாய்ப்புண்டு. அதே தண்ணீர் கப்பலுக்குள் வந்து விட்டால் கப்பலை மூழ்கடித்துவிடும். அவ்வாறே இவ்வுலகம், உலகின் சுகபோகங்கள் உள்ளத்திற்கு வெளியில் இருக்க வேண்டும். உள்ளத்தில் அல்லாஹ் இருக்க வேண்டும். உலக ஆசைகள் உள்ளத்தில் ஊடுருவினால் உள்ளம் கெட்டு ஈமானை இழக்க நேரிடும்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலி பாஜில் பாகவி

# ஓதுவோம்! நரகிலிருந்து பாதுகாப்பு பெறுவோம்!

عَنْ مُسْلِمِ بْنِ الْحَارِثِ التَّمِيمِيِّ عَنْ رَسُولِ اللهِ أَنَّهُ أَسَرَّ إِلَيْهِ فَقَالَ: إِذَا انْصَرَفْتَ مِنْ صَلَاةِ الْمَغْرِبِ فَقُلْ: اَللّٰهُمَّ أَجِرْنِي مِنَ النَّارِ سَبْعَ مَرَّاتٍ، فَإِنَّكَ إِذَا قُلْتَ ذٰلِكَ ثُمَّ مُتَّ فِي لَيْلَتِكَ كُتِبَ لَكَ جِوَارٌ مِنْهَا، وَإِذَا صَلَّيْتَ الصُّبْحَ فَقُلْ كَذٰلِكَ فَإِنَّكَ إِنْ مُتَّ فِي يَوْمِكَ كُتِبَ لَكَ جِوَارٌ مِنْهَا رواه ابوداؤد

**“நீர் மஃரிப் தொழுகைக்குப் பின் (اَللّٰهُمَّ أَجِرْنِي مِنَ النَّارِ) ‘யா அல்லாஹ்! என்னை நரகிலிருந்து காப்பாயாக’ என்று ஏழு முறை ஓதி வருவீராக! அன்று இரவே நீர் மரணித்துவிட்டால் நரகிலிருந்து பாதுகாக்கப்படுவீர்! அதே போல் இந்த துஆவை சுபுஹுக்குப் பின்னும் ஏழுமுறை ஓதி வருவீராக. அன்றைய பகலில் நீர் மரணித்துவிட்டால் நரகத்தை விட்டும் பாதுகாக்கப்படுவீர்” என்று நபி (ஸல்) அவர்கள் தன்னிடம் இரகசியமாகக் கூறியதாக ஹள்ரத் முஸ்லிமிப்னு ஹாரிஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.** (நூல் : அபூதாவூது)

---

மார்க்கத்தின் நல்லுபதேசங்களை அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ்களின் வாயிலாக போதித்துக் கொண்டிருக்கும் குர்ஆனின் குரல், இதுபோன்ற இன்னும் பல இஸ்லாமிய புத்தாண்டுகளில் அடியெடுத்து வைக்க அல்லாஹ் அருள்புரிவானாக!

# செய்யது சகோதரர்கள்

## நாகூர்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 67 ★ எதிரொலி – 7
முஹர்ரம் 1446 ஜூலை – 2024

## சங்கிகளின் திட்டத்தில் மண்ணை போட்ட இந்திய மக்கள்!

இந்திய ஜனநாயகத் தேர்தல் திருவிழா நிறைவு பெற்று விட்டது. நாங்கள் நானூறிலிருந்து நானூற்றி ஐம்பது இடங்கள் வரை வெற்றி பெறுவோம் என்று கூறிவந்த பாரதீய ஜனதா, அதில் பாதியளவுதான் திணறித் திணறி வெற்றி பெற்றுள்ளது.

பாரதீய ஜனதா என்னும் ஒற்றைக் கட்சி; மோடி என்னும் ஒற்றை மனிதரின் அதிகாரம் மட்டுமே செல்லுபடியாகும் என்று கட்டமைக்கப்பட்ட கற்பிதத்துக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றன.

தேர்தல் முடிவிற்குப்பின் பாரதீய ஜனதாவினரின் கூட்டத்தில் கலந்து கொண்ட மோடி, ராமர் பெயரை உச்சரிக்கவில்லை. பாரதீய ஜனதாவின் எல்லாக் கூட்டங்களிலும் எழுப்பப்பட்ட 'ஜெய் ஸ்ரீராம்' முழக்கமும் இந்த முறை ஒலிக்கவில்லை. மாறாக, ஒடிஷாவிலுள்ள பூரி ஜெகன்னாதர் ஆலயத்தை நினைவுபடுத்தும் வகையில், 'ஜெய் ஜெகன்னாத்' என்று மோடி முழங்கினார். ஒடிஷாவில் பாரதீய ஜனதாவிற்கு கிடைத்திருக்கும் வெற்றிதான் இதற்குக் காரணம்! ராமர் கோவில் தொடர்பான வெற்றி முழக்கங்கள் கை கொடுக்காதது இன்னொரு காரணம்!

முகலாயர்கள், முஸ்லிம்கள், தாலி, மட்டன், மீன், முஜ்ரா நடனம், எருமை என்றே பெருமளவில் சங்கிகளால் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சாரம் பாரதீய ஜனதாவுக்கு கைகொடுக்கவில்லை. மத வெறுப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்திய நவ்நீத் ராணா, மாதவி லதா போன்ற பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர்களுக்குக் கிடைத்த படுதோல்வியும் முக்கியமானது.

மோடியால் திறக்கப்பட்ட ராமர் கோவில் அமைந்திருக்கும் அயோத்தியாவை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியில் பாரதீய ஜனதாவுக்கு கிடைத்திருக்கும் தோல்வி, ஆன்மிகத்தை

அரசியல் ஆயுதமாகக் கொள்வோருக்கு உணர்த்தப்பட்டிருக்கும் பாடம் என்றே சொல்ல வேண்டும்.

ஃபைஸாபாத் தொகுதியில் சமாஜ்வாதி கட்சியின் அவ்தேஷ் பிரசாத், பாரதீய ஜனதாவின் லல்லு சிங்கை வீழ்த்தியிருக்கிறார். இண்டியா கூட்டணி வென்றால், ராமர் கோவிலுக்கு "பாபர் பூட்டு" போடப்படும். ராம் லல்லா சிலை மீண்டும் கொட்டகையின்கீழ் வைக்கப்படும் என்றெல்லாம் மோடி பேசினார். ராமர் கோவில் திறப்பு விழாவைப் புறக்கணித்ததாக காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சிகளைச் சாடினார்.

ஆனால், அயோத்தியா மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை பாரதீய ஜனதா கண்டுகொள்ளவில்லை. ராமர் கோவில் புனரமைப்புப் பணிகளைக் காரணம் காட்டி, அந்தப் பகுதியில் வசித்து வந்த பலர் துரத்தியடிக்கப்பட்டனர். பக்தர்களின் வருகையைக் காரணம் காட்டி மேற்கொள்ளப்பட்ட சாலை அமைப்புப் பணிகள் உள்ளிட்டவற்றால் உள்ளூர் மக்களின் வீடுகள் இடிக்கப்பட்டன.

முஸ்லிம்களைக் குறி வைத்து வெளிப்பாடாகவே பிரச்சாரத்தை முன்னெடுத்த பாரதீய ஜனதா, கூடவே இண்டியா கூட்டணிக் கட்சிகள் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும், ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கு எதிராகவும் செயல் திட்டத்தை வைத்திருப்பதாகப் பேசி வந்தது.

அதை மிகக் கவனமாக எதிர்கொண்ட காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகள் முஸ்லிம்களின் ஆதரவைத் திரட்டிக் கொண்டதுடன், இந்துக்களின் கணிசமான ஆதரவையும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

அக்னிபாத் திட்டத்தின் மூலம் இராணுவக் கனவிலிருக்கும் கோடிக்கணக்கான இளைஞர்கள் ஏமாற்றமடைந்திருந்தனர். நான்கே ஆண்டுகள்தான் இராணுவப் பணி. 25% பேர்தான் அடுத்த சில ஆண்டுகளுக்குப் பணியில் தொடர முடியும். முன்னாள் இராணுவத்தினருக்கு இதற்குமுன் இயல்பாகக் கிடைத்து வந்த சலுகைகள் கிடையாது என்றெல்லாம் நிபந்தனைகளைக் கொண்ட இத்திட்டத்தின் எதிர்மறை அம்சங்களை காங்கிரஸ், சமாஜ்வாதி, ராஷ்டிரிய ஜனதா தளம் போன்ற கட்சிகள் பெரிய அளவில் இளம் வாக்காளர்களிடம் கொண்டு சேர்த்திருக்கின்றன.

கூட்டணிக் கட்சிகளின் துணையுடன் ஆட்சி நடத்தவிருக்கும் பாரதீய ஜனதா, முன்பைப் போல அவ்வளவு எளிதில் தனியார் மயமாக்கல், பொதுத் துறை நிறுவனங்களை தனியார்வசம் ஒப்படைத்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்க முடியாது. வலுவடைந்திருக்கும் எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, அருகிலுள்ள கூட்டணிக் கட்சிகளும் மனது வைத்தால்தான் இனி எதுவும் பாரதீய ஜனதாவால் செய்ய முடியும்.

மாநிலங்களவையில் பாரதீய ஜனதாவின் நிலையும் கவனத்திற்குரியது. தற்போது பாரதீய ஜனதா கூட்டணியைச் சேர்ந்த 117 உறுப்பினர்கள் மாநிலங்களவையில் உள்ளனர். 121 பேர் இருந்தால்தான் பெரும்பான்மை என்னும் சூழலில் கூட்டணி கட்சிகளை இன்னும் சில மாதங்களுக்கு அதிகமாகவே சார்ந்திருக்க வேண்டியிருக்கும்.

2014ஆம் ஆண்டிற்கு பிறகு மோடியையே தேர்தல் வெற்றிக்கான வெற்றிமுகமாக முன்னிறுத்தி வந்த பாரதீய ஜனதா இனியும் அதே சூத்திரத்தை மட்டும் நம்பிச் செயல்படுமா என்பது தேசிய அரசியலின் அடுத்தடுத்த நகர்வுகளில் தெரிந்துவிடும்!

வடமாநிலங்களில் தேர்தல் விதிகளையும் மீறி பிரச்சாரங்களில் ராமர் கோவில் பற்றியே அதிகமாகப் பேசினார்கள் பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள். "காங்கிரஸும், சமாஜ்வாதியும் பாபரின் பெயரைச் சொல்லி, ராமர் கோவிலுக்குப் பூட்டுப் போடுவார்கள். புல்டோசர் கொண்டு ராமர் கோவிலை இடிப்பார்கள்" என்றெல்லாம் பிரதமர் மோடியே பேசினார்.

ஆனால், அயோத்தி ராமர் கோவில் அமைந்திருக்கும் ஃபைஸாபாத் தொகுதியிலேயே மண்ணைக் கவ்வியிருக்கிறது பாரதீய ஜனதா! அங்கு பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர் லல்லு சிங்கை 54,567 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியிருக்கிறார் சமாஜ்வாதி கட்சி வேட்பாளர் அவ்தேஷ் பிரசாத்.

"ராமர் கோவிலைக் கொண்டு அரசியல் செய்த பாரதீய ஜனதா கட்சியை ராமர் பழிவாங்கிவிட்டார்" என்கின்றனர் சமாஜ்வாதி கட்சியினர்.

சங்கிகளுக்கு கசப்பான அதிர்ச்சி வைத்தியம் தந்த மாநிலம் உத்தரபிரதேசம்! மொத்தமுள்ள 80 தொகுதிகளில் இண்டியா கூட்டணி மட்டும் 45 தொகுதிகளில் வெற்றிபெற, பாரதீய ஜனதாவுக்கு வெறும் 33 தொகுதிகளே கிடைத்துள்ளது.

ஆனால், 2019ஆம் ஆண்டு தேர்தலில் உத்தரபிரதேசத்தில் பாரதீய ஜனதா 62 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.

பாரதீய ஜனதாவின் பிரதமர் வேட்பாளரான மோடியே வாரணாசி தொகுதியில் முதல் மூன்று சுற்றுகளின் போது காங்கிரஸ் வேட்பாளரைவிட பின்தங்கியிருந்தார். அத்துடன் 2019ஆம் ஆண்டில் நாலரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற மோடி, இந்த முறை வெறும் ஒன்றரை இலட்சம் வாக்கு வித்தியாசத்திலேயே வென்றிருக்கிறார்.

இது இந்திய மக்கள் மத்தியில் பிரதமரின் ஆளுமை சரிந்திருப்பதற்கு வெளிப்படையான சான்று!

அடுத்ததாக, ராகுலை கடந்த முறை அமேதி தொகுதியில் ஸ்மிருதி ராணி வென்றார். இம்முறையும் அதே தொகுதியில் போட்டியிட்ட ஸ்மிருதி, தேர்தலில் ஆரம்பக்கட்டம் முதலே சர்ச்சை யாகப் பேசி வந்தார். அமேதி தொகுதியில் போட்டியிடாத ராகுலை, சீண்டி சீண்டி சர்ச்சைக்கு இழுத்தார். கேரளா வயநாடு தொகுதியில் ராகுல் வேட்பு மனு தாக்கல் செய்ததும், "அமேதி தொகுதியைப் போலவே, வயநாடு தொகுதியிலிருந்தும் அத்தொகுதி மக்கள் விரட்டுவர்" எனப் பேசினார்.

மாறாக, அமேதி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் கோல்ஷர்மா 1 இலட்சத்து 67 ஆயிரம் வாக்குகள் ஸ்மிருதியை விட அதிகமாகப் பெற்று ஸ்மிருதி ராணியைத் தோல்வியைத் தழுவச் செய்துள்ளார்.

"நடந்து முடிந்த தேர்தலின்போது நாங்கள் நானூறிலிருந்து நானூற்றி ஐம்பது இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்போம். அதன்பின் பாகிஸ்தானிலுள்ள கஷ்மீரை இந்தியாவோடு இணைப்போம். பொது சிவில் சட்டத்தை இந்தியாவில் கொண்டு வருவோம். முஸ்லிம்களை இந்தியாவை விட்டே விரட்டுவோம்" என பாரதீய ஜனதா கட்சியினர் தேர்தலின்போது கூவிக் கொண்டிருந்தனர்.

அவர்களின் திட்டத்தில் இந்திய மக்கள் மண்ணை அள்ளி மொத்தமாக போட்டு விட்டனர்.

கடைசியாக, இரு சங்கிகள் பேசிக் கொண்டதிலிருந்து :

"நம்மகட்சி 400–450 சீட்டை நோக்கி நல்லாத்தான் போய்க்கிட்டு இருந்துச்சு. மோடி, நான் மனித பிறவி இல்லை. தெய்வப் பிறவின்னு சொன்னதுல இருந்து பிடிச்சுருச்சு சனியன்!"

குழந்தை பிறந்தவுடன் அதன் வலது காதில் பாங்கும், இடது காதில் இகாமத்தும் வழமையாக சொல்லப்பட்டு வருவதை எல்லா இடங்களிலும் நாம் பார்க்கிறோம். ஆனால், சில சகோதரர்கள் அப்படி சொல்லப்படுவதை அவசியமற்றது என்றும், ஹதீஸுக்கு அப்பாற்பட்டது என்றும் கூறுகிறார்கள். மார்க்கம் என்ன சொல்கிறது?

**பணங்காட்டூரிலிருந்து**
**ஜெ.முஹம்மது யூசுப்**

ஹள்ரத் ஹுசைன் (ரளி) அவர்கள் பிறந்தபோது நபி (ஸல்) அவர்கள், அவர்களின் காதில் பாங்கு சொன்னதாக திர்மிதீ எனும் ஹதீஸ் கிதாபில் பதிவு செய்துள்ள இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள், அந்த ஹதீஸை ஸஹீஹான ஹதீஸ் என்று கூறி, உறுதிப்படுத்துகிறார்கள். இந்த ஹதீஸின் அடிப்படையில் நமது இமாம்கள் குழந்தை பிறந்தவுடன் வலது காதில் பாங்கும், இடது காதில் இகாமத்தும் சொல்வது முஸ்தஹப்பு என்று சொல்கிறார்கள். எனவே, பாங்கும், இகாமத்தும் சொல்பவர்கள், அந்தக் குழந்தைக்கும், தங்களுக்கும் நன்மையை தேடிக் கொண்டார்கள். அதை விட்டவர்கள் தவறு செய்தவர்களாக ஆகமாட்டார்கள். ஏனெனில், பாங்கு சொல்லும் இடத்திலிருந்து ஷைத்தான் விரட்டப்படுவதாக நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளதை இந்த இடத்தில் நாம் நினைவில் வைத்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம்.

குர்ஆனின் குரல் மாத இதழில் ஒரு கட்டுரையில், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மேடை இல்லை என்றும், அதே இதழில் இன்னொரு கட்டுரையில், மக்கள் மூத்தா போரில் மோதிக் கொண்டபோது அருமை நாயகம் (ஸல்) அவர்கள், சொற்பொழிவு மேடையில் அமர்ந்து மக்களின் போர்க்களத்தை நோட்டமிட்டபோது சிரியாவில் நடைபெறும் காட்சிகளை அல்லாஹ் அவர்களுக்குத் தெளிவுபடுத்திக் காட்டினான் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மேடை இருந்ததா?

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

என்பது பற்றிய தெளிவான விளக்கம் தேவை.

**கம்பத்திலிருந்து**
**முஹம்மது சௌக்கத் அலி**

முதல் கட்டுரையில் மேடை என்பதன் பொருள் : இப்பொழுது வழமையில் பேச்சாளர்கள் பேசுவதற்காக போடப்படக்கூடிய மேடையாகும்.

இண்டாவது கட்டுரையில் மேடை என்பதன் பொருள் : நபி (ஸல்) அவர்கள் குத்பா பிரசங்கம் செய்வதற்காக தயாரித்து வைக்கப்பட்டிருந்த மிம்பர்படி என்று சொல்லப்படக்கூடிய சொற்பொழிவு மேடையாகும்.

அறம் சார்ந்த வாழ்க்கை என்பது தற்போது பொருள் சார்ந்த வாழ்க்கையாக மாறி விட்டது. இந்த மாற்றத்திற்கு விஞ்ஞான அறிவியல் காரணமா? அல்லது இறையச்சம் இல்லாமை காரணமா? விளக்கம் கூறுங்கள்.

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

உலகில் நீதியும், நேர்மையும் தவறி அநியாயமும், குற்றங்களும், பாவங்களும் அதிகரிப்பதற்கு அடிப்படை காரணம் : இறையச்சத்தில் ஏற்பட்ட குறைவுதான் என்பதில் அணுவளவும் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. மற்ற சிறு சிறு காரணங்களும் இடையிடையே இருக்கலாம். ஆனால், இறையச்சத்தில் ஏற்பட்ட குறைபாடுதான் அடிப்படை காரணமாகும். இந்த இறையச்சம் வளர ஆரம்பித்து விட்டால், உலகத்தில் இன்ஷா அல்லாஹ் குற்றங்கள் குறைய ஆரம்பித்து விடும்.

சில இளம் வயதினர் விபத்தில் சிக்கி திடீர் மரணம் ஏற்பட்டு இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு ஆசைகள் நிறைய இருக்கும். அவர்கள் இறந்த பின்பும் உலகில்தான் இருப்பார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா?

**கர்நாடகாவிலிருந்து**
**கே.எம்.லியாகத் அலி**

உண்மையல்ல. உலகத்தில் மரணித்துவிட்ட எந்த மனிதரும், எந்தக் காரணத்தைக் கொண்டும் உலகத்திலே அவர்கள் வாழ்வது கிடையாது. அப்படி சொல்வதற்கு ஷரீஅத் ரீதியாக எந்த ஆதாரமும் கிடையாது. யாரும் அப்படி சொன்னால் நம்பவும் வேண்டாம். அப்படி நம்புவது மார்க்கத்திற்கு முரணான செயலாகும்.

ஏனெனில், உலகிற்கும், மறுவுலகிற்கும் இடையில் "ஆலமுல் பர்ஜக்" எனும் ஓர் உலகம் உண்டு. உலகில் மரணமடைந்துவிட்ட அனைவரும் அங்குதான் மறுமை நாள்வரை வாழ்வார்கள்.

திருமணமாகி 30 ஆண்டுகளை கடந்து விட்ட ஒருவர், தான் கட்டிய மனைவியை விட்டு விட்டு, வெளிநாட்டிற்குச் சென்று அங்குள்ள ஒரு பணிப்

87 வருட பாரம்பரியம்

## ஆடைகளும் கலாச்சாரமும்

# நான்கு தலைமுறைகளாய்



மனசெல்லாம் மஹாராஜா... ®

**மஹாராஜா**

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர் : காந்திஜி ரோடு

தஞ்சாவூர் : நியூ ஹவுசிங் யூனிட்

இராமநாதபுரம்

பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார். அந்தப் பெண் நிறைய தான தர்மங்கள் செய்வதாக பெருமையாகவும் பேசிக் கொள்கிறார். அவர் செய்யக் கூடிய தான தர்மங்களின் நன்மைகள் யாரைச் சென்றடையும்?

✍ யாருடைய ஹலாலான வருமானத்திலிருந்து தர்மம் செய்யப்படுகிறதோ அவருக்கு அந்த நன்மைகள் போய்ச்சேரும். அவர் வேறு வகையான குற்றங்களில்ஈடுபட்டிருந்தாலும்சரியே. தர்மத்தின் நன்மைகள் வீணாகாது. ஆனால், அந்த குற்றங்கள் இந்த நன்மைகளை விட அதிகமாகி விட்டால் அவர் நரகிற்கு சென்று விடலாம். நஊதுபில்லாஹ்!

☛ அல்குர்ஆனுடைய கடைசி துஆவில் ஃமுனிசா என்ற வார்த்தை வருகின்றது. அதன் விளக்கம் என்ன?

**தஞ்சாவூரிலிருந்து**
**எஸ்.ஹஸீனா**

✍ அல்குர்ஆன் ஓதி முடித்தவுடன் அந்த குர்ஆனின் பரக்கத்தால் எங்களுக்கு இம்மை - மறுமை இரண்டிலும் நன்மைகளை தந்தருள்வாயாக என்று கேட்கும் வரிசையில் அந்த குர்ஆனை கப்ரிலே எங்களுக்கு அரவணைப்பாக ஆக்கி அருள்வாயாக என்பதுதான் அதன் பொருளாகும். அதாவது, மனிதன்கப்ரில் அடக்கம் செய்யப் பட்ட பிறகு அங்கு யாருடைய துணையும் இல்லாமல் பயந்து, நடுங்கிக் கொண்டிருக்கும் போது, உலகில் அவன் ஓதிய அருள்மறை அல்குர்ஆன் அவனுக்கு அங்கு வந்து ஆறுதலாகவும், அரவணைப்பாகவும் நின்று அவனை பார்த்துக் கொள்ளும். அந்த அரவணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவே இப்படியொரு துஆவை அதிலே இணைக்கப்பட்டுள்ளது.

☛ ஜும்ஆவுடைய பாங்கு சொல்லப்பட்டுவிட்டால் வியாபாரங்களை விட்டு விடுமாறு அல்லாஹ் தன் திருமறையில் குறிப்பிடுகிறானே! அதன் நோக்கம்என்ன?

**பல்லடத்திலிருந்து**
**ஷைஃபுத்தீன்**

✍ ஜும்ஆ தொழுகைக்காக சொல்லப்படக்கூடிய முதல் பாங்குதான் அதன் நோக்கமாகும். எனவே, அந்த பாங்கு சொல்லப்பட்டவுடன் அந்த வியாபாரங்களை உடனடியாக முடித்துக் கொண்டு, தொழுவதற்காக விரைந்து செல்ல வேண்டும். முதல் பாங்கிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பாங்கு சொல்லட்டும்என்று எதிர் பார்த்து, காலத்தை வீணாக்கி, இபாதத்துகளை ஓரங்கட்டுவது நம் முஸ்லிம் சகோதரர்களுக்கு சரியானதல்ல. ஏனெனில், குத்பாவும், தொழுகையும் இரண்டு ரக்அத்தின் அந்தஸ்தில் நிற்கக் கூடியதாகும். அசட்டை செய்வது ஜும்ஆவின் நன்மையையே இழக்கச் செய்து விடுவதாகும்.

எனது வயது முதிர்வின் காரணமாக, நான் என்னால் முடிந்தளவு நஃபிலான தொழுகைகளை தொழுது வருகிறேன். வழமையாக மஃரிபு தொழுகைக்கு பிறகு சுன்னத்தை முடித்து விட்டு, இரண்டு ரக்அத் நஃபில் தொழுகிறேன். அதில் ஈமானின் உறுதிப்பாட்டை நிய்யத் செய்தவனாக, "குல்ஹுவல்லாஹ்" சூராவை ஒவ்வொரு ரக்அத்திலும் 6 - 6 தடவைகள் ஓதி தொழுகையை முடித்து, நான் ஈமானோடு வாழ்ந்து, அதே ஈமானோடு அல்லாஹ்விடம் சென்றுவிட வேண்டி துஆ செய்து வருகிறேன். நான் செய்வது சரிதானா?

**திருச்சியிலிருந்து**
**எம்.அப்துல் சத்தார்**

உங்களுடைய இந்த செயல்பாட்டில் தவறு எதுவுமில்லை. தொடர்ந்து செய்து வாருங்கள். தங்களுடைய ஈமானில் அல்லாஹ் உறுதிப்பாட்டையும், பரக்கத்தையும் தந்தருள் புரிவானாக.

எப்போதும் நிரந்தரமாக ஒளுவுடன் இருப்பது அவசியமா?

**திண்டுக்கலிலிருந்து**
**ஏ.எஸ்.முஹம்மது**

எப்போதும் ஒளுவுடன் இருப்பது முஸ்தஹப்பான விஷயமாகும். அதிகம் ஒளுவுடன் இருப்பவர் கியாமத் நாளன்று பிரகாசமான உறுப்புகளுடன் அடையாளம் காணப்படுவார். ஒளுவுடன் இருப்பவரிடமிருந்து ஷைத்தானும், பேய், பிசாசுகளும் கொஞ்சம் விலகி நிற்பார்கள். இப்படி இன்னும் ஏராளமான நன்மைகள் இருக்கின்றன.

ஒரு மனிதருக்கு பலவிதமான சம்பாத்தியங்கள் இருக்கலாமா?

**வேடசந்தூரிலிருந்து**
**ஷேக் முஹம்மது**

ஹலாலான எத்துணை வியாபாரங்களை செய்வதற்கும் மார்க்கம் அனுமதிக்கிறது.

வெள்ளிக்கிழமையன்று ஏழைகளுக்கு உணவு தருவதாக நினைத்திருந்தேன். அந்த உணவுடைய பணத்தை அநாதை இல்லத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு கொடுத்து விடலாமா? அல்லது அந்தப் பணத்தைக் கொண்டு அந்த அநாதை இல்லத்திற்கு கழிவறை கட்டிக் கொடுத்தால் என்னுடைய அந்த நிய்யத் சரியாகிவிடுமா?

**திருச்சியிலிருந்து**
**நூரா**

வெறும் நினைப்பதால் மட்டும் எதுவும் கட்டாயமாகி விடாது. எனவே, நீங்கள் அந்தப் பணத்தை அநாதை இல்லத்தி லுள்ள குழந்தைகளுக்கு கொடுக்கலாம். அல்லது நீங்கள் விரும்பினால் வேறு வழிகளிலும் செலவு செய்து கொள்ளலாம். ஆனால், மனதிலே நிய்யத் செய்து அதை நாவிலே மொழிந்து நேர்ச்சை செய்து

கொண்டால் நீங்கள் நினைத்ததைப் போன்று ஏழைகளுக்கு வெள்ளிக்கிழமை மட்டுமின்றி உங்களுக்கு தோதுவான மற்ற கிழமைகளிலும் உணவளித்துக் கொள்ளலாம். அல்லது ஸதகாவைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியான நபர்களிடத்திலே அந்தப் பணத்தை கொடுத்துவிடலாம்.

இதன்றி, நேர்ச்சை பணத்தைக் கொண்டு கழிவறை கட்டிக் கொடுப்பது அல்லது அந்தப் பணத்தை பொதுவாக மஸ்ஜித், மதரஸா, எதீம்கானாக்கள் போன்றவற்றின் பொது செலவீனங்களுக்கு பயன்படுத்துவது ஆகுமானது அல்ல.

எங்கள் வீட்டில் எலி தொல்லை அதிகமாக இருப்பதால் அதற்குரிய கட்டையைக் கொண்டு எலியை பிடித்து விடுகிறோம். சிலசமயங்களில் அதற்குரிய மருந்தை சாப்பிட்டு அது தானாகவே இறந்து விடுகிறது. சில சமயங்களில் அதை அடித்து கொல்ல வேண்டியிருக்கிறது. இதனால் நம்மீது குற்றம் ஏதும் வருமா?

**ஆக்கூரிலிருந்து**
**ஜாபர்**

எலியை அடிப்பதால், அதைக் கொல்லுவதால் நிச்சயம் பாவம் எதுவும் நம்மீது சுமத்தப்படாது. அதுபோன்ற விஷப்பிராணிகளை அடிக்க வேண்டும் என்று மார்க்கம் நமக்கு கட்டளையிடுகின்றது.

போராட முடியாத ஒரு முஸ்லிமுக்கு கிடைக்க வேண்டிய சொத்துகளை அவரின் உறவினர்கள் வஞ்சகமாக அபகரித்துக் கொண்டு விட்டார்கள். மறுமையில் அவர்களை அல்லாஹ் தண்டிப்பானா?

**நீடூரிலிருந்து**
**முஹம்மது கனி**

நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை மிகக்கடுமையானது. அதுபோன்ற ஒரு தண்டனையை உலகில் யாரும் பார்த்திருக்கவும் முடியாது. யாரும் கொடுக்கவும் முடியாது. அதிலும் குறிப்பாக, அடுத்தவர்களின் சொத்தை அநியாயமாக எடுத்தவர்களுக்கு தண்டனையை பற்றி சொல்ல வேண்டிய அவசியமில்லை. மிகக் கடுமையான எச்சரிக்கைகளை நபி (ஸல்) அவர்கள் நம் சமுதாயத்திற்கு கூறிச் சென்றுள்ளார்கள். "ஒரேயொரு முழம் அடுத்தவரின் இடத்தை அபகரித்தவர் நாளை கியாமத் நாளில் அந்த ஒரு பூமியைப் போன்ற ஏழு பூமிகளைக் கொண்டு அல்லாஹ் அவனுக்கு மாலையிட்ட நிலையில், நாளை மறுமையில் வருவர்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள். இது போன்ற எச்சரிக்கை கள் மோசடியாளரின் விஷயத்தில் நிறையவே சொல்லப்பட்டுள்ளது. இவ்வுலகில் வேண்டுமானால், அடுத்தவரின் சொத்தைக் கொண்டு யாரும் சுகம் பெறலாம்.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

அதுவும் சில நாட்களுக்கு மட்டுமே! அவன் அபகரித்த சொத்துகளின் மூலமாகவே அவனுக்கு இம்மையிலும் - மறுமையிலும் தாங்க முடியாத கேவலங்களும், வேதனை களும் வந்து சேரும். அவனும், அவனின் சந்ததிகளும் பாதிக்கப்பட்டவருடைய சாபங்களுக்கு ஆளாகி அவன் அபகரித்ததை விட பல மடங்கு சொத்துகளையும், மானங்களையும், மரியாதைகளையும் நிச்சயமாக இழக்கக் கூடும். உஷார்!

ஒரு மனிதர் பஜ்ர் தொழுகைக்காக வரும்போது, ஜமாஅத் நடந்து கொண்டிருக்கிறது. அவர் முன் சுன்னத் தொழாமல் ஜமாஅத்தில் சேர்ந்து விட்டு, இஷ்ராக் நேரத்திற்கு பின்பு அந்த விடுபட்ட சுன்னத்தைத் தொழுது கொள்ளலாமா?

**கோவையிலிருந்து**
**ஷையுத்தீன்**

அவர் பள்ளிவாசலுக்கு வரும்போது, தன் சுன்னத்தான தொழுகையை தனியாக தொழுதுவிட்டு, ஜமாஅத்துடன் சேர்ந்தால் ஜமாஅத் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை இருந்தால் சுன்னத்தை முடிந்தளவு சுருக்கமாக தொழுது விட்டு, ஜமாஅத்தில் சேர்ந்துவிட வேண்டும். அப்படி முடியாது என்றால் இமாம் ஜமாஅத்தில் சேர்ந்து ஃபர்ளை மட்டும் தொழுதுவிட வேண்டும். பின்பு அதே இடத்தில் அமர்ந்து குர்ஆன் மற்றும் திக்ருகளை ஓதி விட்டு, இஷ்ராக் நேரம் வந்ததற்குபின்பு அந்த விடுபட்ட சுன்னத்தை தொழுது கொள்ளலாம்.

எங்கள் தாய், தந்தை இருவரும் ஹயாத்தாக உள்ளனர். நாங்கள் மூன்று ஆண் மக்களும், இரண்டு பெண் பிள்ளைகளும் உள்ளோம். அனைவருக்கும்திருமணமாகி குழந்தைகளுடன் உள்ளோம். இப்போது இரண்டாவது சகோதரர் மரணித்துவிட்டார். பெற்றோர்களின் சொத்திலிருந்து அவரின் பிள்ளைகளுக்கு பங்கு கிடைக்குமா? பாகங்களை எவ்வாறு பிரித்துக் கொள்வது?

**ஓமலூரிலிருந்து**
**எஸ். இப்ராஹீம்**

பெற்றோர்கள் தங்களின் பெயரிலுள்ள சொத்துகளை தங்கள் ஹயாத்திலேயே பிரித்து கொடுக்க நினைத்தால் தாங்கள் விரும்பியவாறு மனிதாபிமான அடிப்படையில், நியாயமான முறையில் பிரித்து கொடுத்து விடலாம். ஏனெனில், எந்த நிலையிலும் ஒரு மனிதன் உயிரோடு உள்ளபோது அவனின் சொத்துகளின் பங்கீடு விஷயத்தில் மார்க்கம் எதையும் வலியுறுத்தவில்லை. அவர்கள் இறந்து விட்டால், அதன்பின்புதான்

யாருக்கு எவ்வளவு பாகம் என்பதை திருகுர்ஆன் வரையறை செய்கிறது. ஆண்களுக்கு இரண்டு பாகங்கள் என்றும், பெண் பிள்ளைக்கு ஒரு பாகம் என்றும் குறிப்பிடப்படுவது பெற்றோர்களின் இறப்பிற்கு பின்பு தான். எனவே, அவர்களாகவே பிரித்து கொடுத்துவிட்டால் அது அவர்களின் இஷ்டம். அந்த சமயத்தில் இறந்து விட்ட தங்கள் மகனின் பிள்ளைகளுக்கும் ஏதாவது பங்கை கொடுத்து, அவர்களையும் திருப்திபடுத்துவது சிறந்த விஷயமாகும்.

மேலும், அவர்களாக சொத்துகளை பிரித்து கொடுக்காத பட்சத்தில், அவர்களிடத்தில் போய் எந்த சூழ்நிலையிலும் அவர்களை நச்சரித்து, சிரமப்படுத்தி சொத்துகளை பிரித்து வாங்குவதை மார்க்கம் விரும்பவில்லை.

☛ நவீன உலகத்தில் பாவ சூழ்நிலைகளும், உலகாதாய மோகமும் நம் சமுதாய மக்களின் உள்ளங்களில் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து, நம் ஈமானிய உணர்வையும், மார்க்கப் பற்றையும் சீரழித்து வருகின்றன. இதிலிருந்துவிடுபட்டு, நம்மைநாமே பாதுகாத்துக் கொள்ள ஏதாவது வழிகள் இருக்கின்றனவா?

**விழுப்புரத்திலிருந்து**
**முஹம்மது அன்வர்**

✍ இந்த நவீன காலத்திலும் ஹயாத்தோடுவாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அல்லாஹ்வுடைய இறைநேசர்களிடத்தில் அவரவர்களுக்கு தகுந்தவாறு தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் காட்டக்கூடிய சரியான வழியின் படி நம்முடைய தீனுடைய வழிகளை முறையாக அமைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லி தரக்கூடிய அமல்களை பேணுதலாகவும், தொடர்படியாகவும் செய்து நம் இருண்ட உள்ளங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும். இந்த வழி மட்டுமே நம்மை தற்காலத்தின் ஃபித்னாக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த வழியாக அறிகிறோம். அல்லாஹ் நம் சமுதாய மக்களுக்கு முழுமையான ஹிதாயத்தையும், நல்ல சிந்தனைகளையும் தந்தருள்வானாக!

☛ சென்ற சில மாதங்களுக்கு முன்பு வந்திருந்த "பதில்கள்" பகுதியில் ஹவ்ளு பற்றிய விளக்கத்தில் 10 x 10 என்பதற்கு 225 அடி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால், அதன் ஆழம் **3 ¾** அடி இருக்க வேண்டியது அவசியமா?

**சென்னையிலிருந்து**
**எஸ்.பஹ்மிதா**

✍ ஷரீஅத் ரீதியாக ஓர் அடி என்பது ஒரு முழத்திற்கு சொல்லப்படும். ஒரு முழம் என்பது (18 இன்ச்) 1½ அடி

யாகும். இதன்படி 10 முழம் என்பது 15 அடிக்கு சமமாகும். நாலாப்பக்கமும் சேர்ந்து அந்த நீரின் பரப்பளவு 15 x 15 = 225 சதுர அடிகள் இருக்க வேண்டும்.

ஆழத்தைப் பற்றி பிரச்சனை இல்லை. தண்ணீரை கையில் அள்ளும்போது, தரை தெரியாத அளவிற்கு ஆழம் இருந்தாலே போதுமானது.

எனவே, ஹவ்ளின் மொத்த பரப் பளவு 225 சதுர அடிகள் என்பது தான் சரியான விஷயமாகும்.

☛ நாங்கள் பல வருடங்களாக ஒரே வீட்டில் ஒத்திக்கு பணம் கொடுத்து, வாடகைஎதுவுமில்லா மல் இருந்து வருகிறோம். நம் ஷரீஅத்படி அப்படி வாடகை இல்லாமல் இருப்பது கூடாது என்று ஆலிம்கள் சொல்வதை நிறைய கேள்விப்படுகிறோம். இப்போது நாங்கள் இந்த பாவமான காரியத்திலிருந்து வெளியேற நினைக்கிறோம். என்ன செய்வது?

**புதுக்கோட்டையிலிருந்து**
**முஹம்மது இப்ராஹீம்**

✍ அல்லாஹ்வின் வழியில் யார் முயற்சிப்பார்களோ நிச்சயமாக அல்லாஹ் அதற்குரிய வழியை அவர்களுக்கு இலேசாக்கி தருவான் என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. எனவே, உங்களின் மேற்படி நிய்யத்தை உறுதிமிக்கதாக ஆக்குங்கள். அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான்.

நீங்கள் எவ்வளவு காலம் அவர் களின் வீட்டில் இருந்தீர்களோ அந்தக் காலத்தை கணக்கிட்டு, அதற்குரிய வாடகையை உங் களின் பணத்திலிருந்து அவர் களுக்கு கழித்துவிட வேண்டும். அல்லது வாடகை அந்த அசல் பணத்தைவிடவும் அதிகமாகு மானால், வீட்டை காலி செய்து கொண்டு அந்த அதிகப்படியான பணத்தை அவர்களிடத்தில் பேசி, அவர்களாகவே அந்த அதிகப் படியான தொகையை கழித்துக் கொள்வதற்கு சம்மதித்தால் அல்லாஹ் அதை மன்னித்து விடுவான். அப்படியில்லையா னால், அதை கொஞ்சம் கொஞ்ச மாக அவர்களிடத்திலே கொடுத்து நீங்கள் முழுமையாக அதிலிருந்து விடுதலை பெற வேண்டும். ஏதாவது ஒன்றுக்கு முயற்சி செய்யுங்கள். உங்களின் முயற்சிக்கு அல்லாஹ் சிறந்த கூலியை வழங்குவான்.

---

## திருத்தம்

சென்ற இதழில் "பதில்கள்" பகுதியில் முதல் கேள்வியில் "துல்ஹஜ் பிறை 9 பஜ்ர் முதல் பிறை 13 அஸர் வரை தக்பீர் சொல்ல வேண்டும்" என்று திருத்தி வாசிக்க வேண்டுகிறோம். அச்சுப்பிழைக்கு வருந்துகிறோம்.

– ஆ – ர்.

# செல்லப்பிராணிகள்

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

"(நபியே) வேட்டையாடும் பிராணிகளில் எவற்றுக்கு நீங்கள் பயிற்சி அளித்து அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத் தந்த வற்றைக் கற்றுக் கொடுக்கின்றீர்களோ அவை (வேட்டையாடியவை) யும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன எனக் கூறுவீராக!"

- அல்குர்ஆன் (5 : 4)

மனிதர்கள் துணைக்காக, மகிழ்ச்சிக்காக, பயணத்திற்காக, உணவிற்காக என்று பிராணிகளைத் தங்களுடன் வைத்து வளர்க்கத் தொடங்கினர். இதில் துணைக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் வளர்க்கப்படும் பிராணிகளை செல்லப் பிராணிகள் என்கிறோம்.

நட்புடன் பழகும் நாய், பூனை, ஆடு, மாடு, கழுதை, ஒட்டகம், குதிரை போன்ற விலங்குகளை நாம் வீட்டில் வளர்த்து மகிழலாம். சிங்கம், புலி, கரடி போன்ற விலங்குகள் நட்புடன் பழகாது. இவை காட்டில் வளரும்.

## பூனைகள்

ஹள்ரத் கப்ஷா பின்த் கஅப் பின் மாலிக் (ரளி) அவர்கள் கூறியதாவது. "என் (மாமனார்) அபூகத்தாதா (ரளி) அவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் (உளூ எனும்) அங்கத் தூய்மை செய்வதற்கு நான் தண்ணீர் கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றினேன். அப்போது பூனை ஒன்று வந்து அந்தத் தண்ணீரைக் குடிக்கலாயிற்று. உடனே அபூகத்தாதா (ரளி) அவர்கள் அந்த பூனை குடித்து முடிக்கும் வரை அந்தப் பாத்திரத்தை சரியாக பிடித்தார்கள். நான் அதை (வியப்புடன்) உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட அபூகத்தாதா (ரளி) அவர்கள், "உளூச் செய்யும் தண்ணீரை குடிப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறாயா?" என்று கேட்டார்கள். நான், "ஆம்" என்றேன். அதற்கு அவர்கள், அருமை நாயகம் (ஸல்) அவர்கள் "பூனைகள் அசுத்தமான பிராணிகள் அல்ல. அவையெல்லாம் உங்களைச் சுற்றிச்சுற்றி வரக் கூடியவையாகும்" என்று கூறினார்கள் என்றார்கள்" (நூல்: திர்மிதீ-85, நஸாயீ-67)

மிகப் பிரபலமான நபித் தோழர் ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் எப்பொழுதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்

களுடன் தான் இருப்பார். அவர் தம்முடன் எப்போதும் ஒரு பை வைத்திருப்பார். அதற்குள் ஒரு ஆண் பூனைக்குட்டி இருக்கும். அந்த பூனை அவரைவிட்டும் எங்கும் செல்லாது. சென்றாலும் மீண்டும் அவரிடமே வந்து விடும். அந்தளவு அந்த பூனை யிடம் மிகுந்த பாசம் வைத்தி ருந்தார். அதற்கு தேவையான உணவும், தண்ணீரும் அவ்வப்போது வழங்குவார்.

அவரிடம் பூனைக்குட்டி எப்பொழுதும் இருப்பதால் நபி (ஸல்) அவர்கள், அவரை "அபூ ஹுரைரா" அதாவது "பூனையின் தந்தை" என்று புனைப்பெயர் வைத்து அழைத்தார்கள். அத னால் அவரின் அசல் பெயர் (அப்துல்லாஹ் என்பது) மறைந்து, இந்த புனைப்பெயரே இன்று நாள் வரை நிலைத்து விட்டது.

அரபு மொழியில் "ஹிர்ரா" என்றால் "ஆண் பூனை" என்று பொருள். "ஹுரைரா" என்றால் "ஆண் பூனைக்குட்டி" என்று பொருள்.

பூனையின் எச்சில் பட்ட தண்ணீர் அசுத்தமாகாது. பூனை உட்கார்ந்த இடத்தில் நாம் தொழ லாம். அந்த இடம் சுத்த மானதே! எனவேதான், பெரும் பாலான முஸ்லிம் வீடுகளில் பூனையை வளர்க்கிறார்கள்.

ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர் கள் கூறியதாவது : "நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நாய் மற்றும் பூனை விற்ற காசுக்கு தடை விதித்தார்கள்."

பூனை விற்ற காசு அனுமதிக்கப்பட்டதன்று என அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் அதற்கு அனுமதி உண்டு என்கின்றனர். இதுவே, இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்), இஸ்ஹாக் பின் ராஹவைஹி (ரஹ்) ஆகியோரின் கூற்றாகும்.

(நூல்: திர்மிதீ - 1200)

பூனை, அது ஒரு செல்லப் பிராணி ஆகும். பூனையை வளர்ப்பதில் தவறில்லை. எனவே, பூனையை அன்பளிப்பாகவோ, இலவசமாகவோ வழங்கலாமே தவிர, காசுக்கு விற்பது நல்ல தன்று. இந்தக் கருத்திலேயே பூனை விற்பனைக்குத் தடை வந்துள்ளது. எலிகளைப் பிடித் தல் போன்ற பயன்பாட்டிற்குப் பயன்படுவதாக இருந்தால், பூனைகளை விற்கலாம் என்று சில மார்க்க அறிஞர்கள் கூறு கின்றனர்.

(நூல்: அல்மின்ஹாஜ், துஹ்ஃபத்துல் அஹ்வதீ)

உலகிலுள்ள மற்ற பிராணி கள் கண்ட இடங்களில் மலம் கழித்துவிட்டு அப்படியே போய் விடும். ஆனால், பூனை மட்டும் முதலில் மலம் கழிக்க இடம் தேடும். பின்பு அதன் மலத்தை மண்ணால் மூடிவிட்டு சென்று விடும். மற்ற பிராணிகளுக்கு

இல்லாத ஒரு அறிவை இறைவன் பூனைக்கு மட்டும் கொடுத்திருக்கிறான்.

பூனை வளர்க்கப்படும் வீடுகளில் பல்லி, பூச்சி, எலி போன்றவற்றின் தொல்லைகள் இருப்பதில்லை.

## நாய்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**“பாத்திரத்தில் நாய் வாய் வைத்து விட்டால் ஏழு தடவை [தண்ணீரால்] கழுவிக் கொள்ளுங்கள். எட்டாவது தடவை மண்ணிட்டுக் கழுவுங்கள்.”**

அறிவிப்பாளர்: ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அல் முஙஃப்பல் (ரளி) அவர்கள் (நூல்: முஸ்லிம்-473, திர்மிதீ-84)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**“எவர் நாய் வைத்திருக்கிறாரோ அவரது நற்செயல்களில் இருந்து ஒவ்வொரு நாளும் ஒரு “கீராத்” அளவுக்கு [அவற்றின் நன்மை] குறைந்து போய்விடும்; விவசாய பண்ணையையோ கால்நடைகளையோ [திருடு போய் விடாமல்] பாதுகாப்பதற்காக வைத்திருக்கும் நாய்களைத் தவிர.”**

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள், (நூல்: புகாரீ-2322, (முஸ்லிம் - 3211)

ஒருமுறை கண்பார்வையற்ற அப்துல்லாஹ் பின் உம்மி மக்தூம் (ரளி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, “நாயகமே! நான் தொழுகைக்காகவும், வேறு தேவைகளுக்காகவும் வெளியே சென்று வருகிறேன். அப்போது பாதையில் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே, என்னிடம் ஒரு நாய் உள்ளது. அதை நான் துணைக்கு அழைத்துச் செல்கிறேன். இது போன்ற தேவைகளுக்காக நான் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமா?” என்று வினவினார். அப்போது நபியவர்கள் “அவ்வாறு பயன் படுத்தி கொள்ளலாம்” என அவருக்கு அனுமதியளித்தார்கள்.

ஹள்ரத் அபூ மஸ்ஊத் அல் அன்சாரி (ரளி) அவர்கள் கூறியதாவது. “அருமை நாயகம் (ஸல்) அவர்கள் நாய் விற்ற காசை தடை செய்தார்கள்”

(நூல் : புகாரீ - 2237, முஸ்லிம் -3191, அபூதாவூத், திர்மிதீ-1200)

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : “அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வேட்டை நாயைத் தவிர மற்ற நாய்களை விற்ற காசுக்கு தடை விதித்தார்கள்”

(நூல் : திர்மிதீ - 1202)

நாயை விற்பதும், நாய் விற்ற காசைப் பயன்படுத்துவதும் கூடாது. ஆனால், வீட்டுக்

காவல், தோட்டக் காவல், வேட்டையாடல்போன்ற பயன்பாடுகளுக்காக உள்ள நாய்களை விற்பதும், வாங்குவதும் செல்லும் என்றும், அவற்றை விற்ற காசு செல்லும் என்றும் சில மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள். ஏனெனில், மேற்சொன்ன நோக்கங்களுக்காக நாய்களைப் பயன்படுத்த அனுமதியுண்டு. எனவே, அவற்றை விற்பதும் செல்லும். இந்த நபிமொழியில் தடை செய்யப்பட்டிருப்பது வேறு நோக்கங்களுக்காக (அதாவது செல்லப்பிராணி, பொழுது போக்கு) பயன்படுத்தப்படும் நாய்களுக்கே பொருந்தும் என்பது இவர்களின் கருத்தாகும்.
(நூல் : அல்மின்ஹாஜ், தக்மிலா)

இஸ்லாத்தில் நாய் வளர்ப்பது (ஹராம் எனும்) தடுக்கப்பட்டதாகும் என்றாலும், கண் பார்வையற்றவர்கள் கூடவே வரக்கூடிய நாய்கள் அவர்களுக்கு சில நேரங்களில் சரியான வழியை அறிவிக்கிறது. இப்படியான சில நன்மைகளை கருதி நாய் வளர்ப்புச் சட்டங்களில் சிலருக்கு சலுகைகள் வழங்குகிறது இஸ்லாம்.

தோழமை நாய்கள், பாது காவல் நாய்கள், வேட்டை நாய்கள், பணி நாய்கள், துப்பறியும் நாய்கள் இவ்வாறு பல பயன்பாடுகள் உண்டு.

துப்பறிவதற்காகவும், வேட்டைக்காகவும், வீடு, தோட்டம், கால்நடைகள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காகவும், பணிகளுக்காகவும் (பனிப் பிரதேசங்களில் வண்டி இழுக்க நாய்கள் உதவுகின்றன) ஆகியவற்றுக்காக மட்டும் நாய்கள் வளர்க்கலாம்.

நாய்கள் மனிதர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றன. வெறுமனே ஒரு செல்லப்பிராணியாக வளர்க்காமல் பல்வேறு வகையான வேலைகளைச் செய்யப் பழக்கப்படுத்தப்பட்டதாய் இருக்க வேண்டும். காவல் துறை, துப்பறியும் துறை போன்றவற்றில் நாய்களின் பங்கு இன்றியமையாதது. “ஷெப்பர்ட்” இன நாய்கள் ஆடு மேய்க்கப் பயன்படுகின்றன. மோப்ப நாய்கள் குற்றவாளிகளை கண்டறிதல், வெடி பொருள்களைக் கண்டறிதல் போன்றவற்றிற்குப் பயன்படுகின்றன.

இவ்வாறு வளர்க்கும்போது அந்த நாய்களைத் தொட வேண்டிய நிலை அவசியம் ஏற்பட்டால் தொடுவது தவறல்ல. நாயின் எச்சில் கடுமையான அசுத்தம் என்று நபிமொழி எச்சரிக்கிறது. எனவே, அதனுடைய எச்சில் நம்மீது படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இது

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

CityAds BOOKS **www.cityadsbooks.com**

## இஸ்லாமிய புத்தகங்கள் விற்பனை

- தினமும் இஸ்லாமிய புத்தகங்களின் தகவல்களை Whatsapp-ல் நாங்கள் அனுப்புகிறோம். உங்கள் Whatsapp No-ல் இருந்து Send Islamic Book Details என்று அனுப்பி நீங்களும் இணைந்து பயன் பெறுங்கள்.
- நல்ல நல்ல புத்தகங்களை உங்கள் உறவினர்களுக்கும்- நண்பர்களுக்கும் திருமண மற்றும் பெருநாள் பரிசாக அனுப்புங்கள். பணத்தை GPay மூலம் செலுத்தி விட்டால் பரிசு புத்தகங்களை தபால்-கூரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.
- புத்தகப்பட்டியலை Whatsapp & Telegram மூலம் நீங்கள் பெற்று கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களை நீங்களே தேர்வு செய்யலாம்.
- குர்ஆனின் குரல் மாத இதழை சந்தாவில் பெறவும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்யவும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை தமிழ், ஆங்கிலம் & பிற மொழி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்ய உங்கள் விளம்பர மேட்டரை 98410 16016 நம்பருக்கு Whatsapp செய்தால் விளம்பர புரூப், ஸ்கீம் & கட்டண விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

CityAds For More Details Call/Whatsapp: **98410 16016**

போன்ற தேவைகளின்றி செல்லப்பிராணியாக நாய்களை வளர்க்கக் கூடாது. நாயை செல்லப்பிராணியாக வளர்ப்பது பாவக்காரியாமாகும்.

அவசியத் தேவைகளுக்காக நாய் வளர்த்தாலும், நடு வீட்டில் வைத்து (அதாவது நமது படுக்கையறை வரை வரும் அளவுக்கு மிகுந்த செல்லம் கொடுத்து) வளர்க்கக் கூடாது. வீட்டின் ஒரு ஓரத்தில் அல்லது கொல்லைப்புறத்தில் வைத்து வளர்க்கலாம். அது நம்மை அல்லது நமது குழந்தைகளை தொடவோ, நக்கவோ அனுமதிக்கக்கூடாது. பாசத்திற்குரியவர்களை தள்ளிவைத்துவிட்டு செல்லப் பிராணிகளை பஞ்சணையில் பக்கத்தில் வைத்துக்கொள்ளும் பைத்தியங்கள் வாழும் காலமிது.

தம்மை அறிவு ஜீவிகள் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய மேலை நாட்டினில் சிலர் தமது செல்லப்பிராணிகளுக்கு தமது கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்களை எழுதி வைக்கிறார்கள். இது அந்த செல்லப் பிராணிகளுக்கு விளங்குமா?

நாய், பூனை, முயல், கிளி, புறா, கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகளைத் தொட்டுத் தூக்கும்போதும், அவற்றோடு விளையாடும் போதும் அலர்ஜி பொருட்கள் நேரடியாகவே நம் உடலில் பட்டு அலர்ஜிக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தும். வளர்ப்புப் பிராணிகளின் உடலிலிருந்து உதிரும் செல்கள், ரோமம், எச்சில், சிறுநீர், மலக்கழிவு ஆகியவை காற்றில் கலந்து நாசி, சரும அலர்ஜியை ஏற்படுத்தலாம். மேலும் நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகள் மூலம் ஆஸ்துமா நோய் ஏற்பட வாய்ப்புண்டு என்கிறது மருத்துவ உலகம்.

உயிர்களிடத்தில் ஜீவகாருண்யமும், மிருகங்கள் மீது பெரும் இரக்கமும் தங்களுக்கு மட்டுமே உண்டு என்று சிலர் கருதுகின்றனர். மேலும் நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற இஸ்லாத்தின் அணுகுமுறையை அவர்கள் வெறுக்கின்றனர்.

அண்மைக்காலத்தில் நாய் வளர்ப்பு தொடர்பாக மனிதர்களிடையே காணப்படும் அளவு கடந்த மோகத்தல் அதன் மூலம் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து அறியாமையில் இருக்கின்றனர்.

நாய்களை வளர்ப்பது மட்டுமல்ல, அவற்றை முத்தமிட்டு, அவற்றைத் தடவி, அவற்றுடன் விளையாடி, முதியவர்களும் சிறுவர்களும் தங்களுடைய

கைகளை நக்குமாறு அவற்றுக்குக் கொடுக்கும் அளவுக்குச் சென்றுவிட்டனர். அது மட்டுமல்ல; பல்வேறு சந்தர்ப்பங்களில் உணவுத் தட்டுகளில் மீதமிருக்கும் உணவுகளையும், பானங்களை யும் நக்குவதற்கும், அருந்து வதற்கும் நாய்களை அனுமதிக்கின்றனர்.

நாயின் வாயிலுள்ள கிருமி கள் பற்றி ஆய்வு செய்த லண்டன் ராணி மேரி பல்கலைக் கழகத்தின் நச்சுயிரியல் மற்றும் நுண்மவியல் (Virology and Bacteriology) பேராசிரியர் ஜான் ஆக்ஸ்போர்ட் கூறும்போது, நாய்கள், வாழ்க்கையின் பாதி நாட்களில் பல அசுத்தமான இடங்களை முகர்ந்து வருவ தால், அதன் வாய் முழுவதும் பல வகையான அசுத்தங் களும், கிருமிகளும் நிறைந்து காணப்படுகின்றன. நாய்களை முத்தமிடுவது, அவற்றின் நாக்கால் நம்மை நக்கவிடுவதன் மூலமும் பல கொடுமையான கிருமிகள் மனிதனை பாதிக்கின்றன.

"நாயைக் கொஞ்சினால் வாயை நக்கும்" என்பது சொல் வழக்கு.

நம்மூரில் வீட்டில் சிறு பிள்ளைகளைத் தனியே விட்டுச் செல்ல நேரிட்டால், யாரையாவது அழைத்து பிள்ளைகளின் துணைக்கு விட்டுச் செல்வது போல், அமெரிக்காவில் நாயைக் கவனித்து, பார்த்துக்கொள்ள மனிதர்களை அமர்த்திக் கொள் கிறார்கள். சில நாட்கள் வெளி யூருக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் இப்படி நடக்கும்.

அந்நாட்டில் பஸ்ஸில், பார்க்கில், பொது இடங்களில் சில காட்சிகள் மிக சகஜம். கால் மடக்கி தன் இயல்பான போஸில் அமர்ந்திருக்கும் அந்த ஜந்து. அப்பொழுது தான் தன் மல, ஜல துவாரங்களை நக்கிவிட்டு நிமிர்ந்திருக்கும். எவ்வித அருவருப்புமின்றி, "ஸோ க்யூட் வாட்ஸ் ஹர் நேம்" என்று அதன் உரிமையாள ரிடம் கேட்டுக்கொண்டே, அருகில் அமர்ந்திருப்பவர் அந்த நாயின் முகத்தை தம் முகத்துடன் வைத்து உரசி மகிழ்ந்து,லிப் கிஸ் ரேஞ்சிற்கு வாயுடன் வாய் உரசுவதைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்வு இருக்கிறதே, நமக்கு வாந்தியே வந்துவிடும்.

இறந்த உடல் (பிரேதப்) பரிசோதனைக் (Postmortem) கல்வியில் வல்லுநரான ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் நொய்லெர் (Dr.Noeller) கூறுவ தாவது : நாய் வளர்ப்பதும் நாயுடன் கொஞ்சி விளையாடு வதும் மனித உடல் நலத்திற்கும்,

உயிருக்கும் பெரும் கேடு விளைவிக்கும். இதன் மூலம் ஏற்படும் ஆபத்துக்கள் சாதாரணமானவை அல்ல. நாய்களிலிருந்து உருவாகும் ரேபிஸ் புழுக்கள் உடலில் தொற்றும் நாடாப் புழுக்களைப் போன்றவை. இவை "டேப் வார்ம்" (Tape Worm) என்று அழைக்கப்படும்.

இந்தப் புழுக்கள் நாய் களின் உடல்களில் தன்னிச்சையாகத் தன் வாழ்க்கையை சுழற்றி நடத்திக் கொண்டிருக்கும் போது இடை யில் நாயை கொஞ்சம் மனி தனிடமும் பரவிவிடுகிறது.

தொற்றும் இந்தப் புழுக்கள் மனிதனுடைய நுரையீரலில் ஆரம்பித்து சுவாசக்குழாய், தசைகள், மண்டை ஓடு, மண்ணீரல், நுரையீரல், மூளை ஆகியவற்றை வெகுவாக பாதிக்கின்றன.

அதிக அளவில் இவ்வகை புழுக்களுடைய தாக்குதலுக்கு ஆளானோர் தாழ்வான வடக்கு பிரதேசங்களில் வசிக்கும் மக்கள்தான். யூகோஸ்லோவியா வில் டல்மாசியா, ரஷ்யாவில் கிரிமியா, ஹாலந்தில் ஃபிரீஸ்லாண்ட் முதலான பகுதிகளிலும், நாய்களை வாகனம் இழுக்க பயன்படுத்தும் நாடுகளிலும் நாடாப் புழுக் களுடைய தாக்குதலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 12% சதவீதத் திற்கும் குறையாமல் உள்ளது. ஐஸ்லாந்தில் மட்டும் 43% பேர் இந்த நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

ரேபிஸ் நோயினால் உலக அளவில் ஆண்டிற்கு 30,000 பேரும், இந்தியாவில் 20,000 பேரும், தமிழகத்தில் 350 முதல் 375 பேரும் இறக் கின்றனர் என்கிறது ஒரு புள்ளி விபரம்.

தெரு நாய், விலை அதிக முள்ள உயர் ஜாதி நாய் என எது கடித்தாலும் ரேபிஸ் நோய் வர வாய்ப்புண்டு. நாய் நக்கி னாலும், பிராண்டினாலும், ரேபிஸ் நோய் தாக்கிய மனித னின் எச்சில் நம் மீது பட்டாலும் கூட ரேபிஸ் வர வாய்ப்பு உண்டு என்கின்றனர் மருத்துவர்கள்.

சுருங்கக் கூறின், வளர்ப்புப் பிராணிகளிடம் முத்தமிட்டு, கொஞ்சிக் குலாவி விளையாடு வது உடல் ஆரோக்கியத் திற்கு உகந்ததல்ல என்று விளங்க வேண்டும்.

நாய் போன்ற பிற உயிரினங் களை இஸ்லாம் கூறும் முறை யில் பராமரித்து இறை யருளைப் பெறுவோமாக!

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 565547**

# நிலையான நன்மைகள் பெற்றிட
# நல்ல வாய்ப்பு!

## ஜாமிஆ தக்வியத்துல் இஸ்லாம்

வேலூர் மாநகர் அரியூரில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறப்பான அரபிக் கல்லூரி ஆகும். இங்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முறையாக ஓத கற்றிருக்கிறார்கள். 50–க்கும் அதிகமானவர்கள் குர்ஆனை முழுவதும் மனனம் செய்து ஹாஃபிழ்களாகவும், 25க்கும் மேற் பட்டவர்கள் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறிய ஆலிம்களாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய மத்ரஸா தற்போது இட நெருக்கடியில் சிரமப்பட்டு வருவதால் மத்ரஸாவிற்காக இடம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. **14400**சதுர அடி கொண்ட இடம் ஒருகோடியே நாற்பது இலட்சம் **(1,40,00,000)** ரூபாய் என கிரயம் பேசப்பட்டுள்ளது. இந்தத் தொகை எதிர்வரும் புனித ரமளான் மாதத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். ஆகையால் நல்லுள்ளம் கொண்ட கணவான்கள் தங்கள் மனம் தி ற ந் து விசாலமான எண்ணத்துடன் மத்ரஸாவிற்காக உதவி செய்ய வேண்டுமாய் கோருகிறோம்.

தங்கள் பெயரில் அல்லது மரணித்துவிட்ட பெற்றோர்கள், உறவினர்களின் பெயரில் அல்லது வீட்டிலுள்ள உறவினர்களின் பெயரில் ஆளுக்கு ஒரு சதுர அடி என்ற ரீதியில் வாங்கி மத்ரஸாவிற்கு வக்ஃபு செய்து நிரந்தரமான நீடித்த நன்மையை பெற்றுக் கொள்வீர்களாக.

A/C Name : **AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

Bank Name : INDIAN BANK Branch : ARIYUR

A/C No. : **6845938157**

IFSC Code : IDIB000A198

+91 9080005537

+91 9080005537@akbizaxis

**மேலும் விபரங்களுக்கு :**

**மவ்லானா மவ்லவீ உபைதுல்லாஹ் காஸிமி, நிறுவனர் & முதல்வர்,**

## ஜாமியா தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

**அஜீஸ் நகர், அரியூர், வேலூர் - 632055. தமிழ்நாடு.**

**செல் : 9443491834/9080005537**

# நூல்கள் அறிமுகம்

நூல்: அல்குர்ஆன் அறிவுரைகள்
ஆசிரியர் :
எம்.கே.எஸ்.பாவா சாஹிப்
பக்கங்கள்: 258; விலை : ரூ.300/-
வெளியீடு : மும்தாஜ் பதிப்பகம்,
28/23, ரஜாக் ரோடு, கோட்டாறு,
நாகர்கோவில் – 629002.
அலைபேசி : 9840998785

மனிதன் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய சட்டங்கள், பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள், பேண வேண்டிய வழிகாட்டல்கள், ஆற்ற வேண்டிய நற்செயல்கள், இம்மை – மறுமை குறித்த நினைவூட்டல்கள் ஆகியவற்றை பற்றிய குர்ஆன் ஆயத்துகளை நூலாசிரியர் அவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளின் மொழியாக்கங்களுடன் சேர்த்து தொகுத்து தந்துள்ளார்கள்.

பல தலைமுறைகளுக்கு பயன்படும் வகையில் கெட்டியான தரமான தாள்களில் அச்சிடப்பட்டுள்ளது. குர்ஆனில் கூறப்பட்டுள்ள தகவல்களை அறிய விரும்புவோருக்கு வழிகாட்டும் அற்புதமான நூல் இது.

* * * * * *

நூல் : முப்பெரும் பள்ளிவாசல்கள்
ஆசிரியர் : சோதுகுடி அல்ஹாஜ்
மு.முஹம்மது இஸ்மாயீல்
M.Com., M.Ed.,M.Phil.,
பக்கங்கள் : 48; விலை : ரூ. 60/-
வெளியீடு :
ரஹிமா பப்ளிகேஷன்ஸ்,
16/23D, பேராசிரியர் காலனி,
பாட்சா நகர், காந்திஜி ரோடு,
புதூர் – இளையான்குடி–630709.
சிவகங்கை மாவட்டம்.
அலைபேசி : 9486671468;
8754775494

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த மூன்று பள்ளிவாசல்களில் தொழுவது மிகுந்த நன்மையை பெற்றுத் தரும் என்று கூறினார்களோ அந்தப் பள்ளிவாசல்களைப் பற்றிய விஷயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. மஸ்ஜிதுல் ஹராமிலும், அதன் சுற்றுப் பகுதிகளிலும் உள்ள நினைவுச் சின்னங்களைப் பற்றிய செய்திகள் நெஞ்சில் பதியும் வண்ணம் நவிலப்பட்டுள்ளன.

மஸ்ஜிதுன் நபவியில் அமைந்துள்ள தூண்களின் சிறப்புகளும், மதீனாவைச் சுற்றியுள்ள பள்ளிவாசல்களைப் பற்றிய குறிப்புகளும் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

மஸ்ஜிதுல் அக்ஸா (பைத்துல் முகத்தஸ்) யார் யாருடைய காலத்தில் புதுப்பிக்கப்பட்டது? யார் யாருடைய பொறுப்பில் இருந்து வருகிறது? என்பதை நமக்கு எத்தி வைக்கும் ஏற்றமான நூல் இது!

ஆய்வு : பாவா

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தீ **அஹ்மதுல்லாஹ்** காஷிஃபீ காஸிமீ

**3. தூங்குவதற்கு முன்பு**

நபி (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் வீட்டிற்கு வந்ததும் (தூங்குவதற்கு முன்பு) மிஸ்வாக் செய்வார்கள்.

(அஹமத் 5979, 24795 பாகம் - 10, பக்கம் - 41)

**4. தூங்கி எழுந்த பின்பு**

நபி (ஸல்) அவர்கள் இரவில் தூங்குவதற்கு முன்பும், தூங்கி எழுந்த பின்பும் மிஸ்வாக் செய்வார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(நூல் : மஜ்மஉஜ்ஜவாயித் 2568)

**5. மல ஜலம் கழித்த பின்பு**

நபி (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் தூக்கத்திலிருந்து விழித்தவுடன் மலஜலம் கழித்தபின் மிஸ்வாக் செய்வார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்

(நூல் :அபூதாவூத் 58)

**6. தஹஜ்ஜுத் தொழுகையில் ஒவ்வொரு இரண்டு ரக்அத்திற்கு பின்பு**

நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையை இரண்டு இரண்டு ரக்அத்துகளாக தொழுவார்கள். ஒவ்வொரு இரண்டு ரக்அத்திற்கு பின்பும் மிஸ்வாக் செய்வார்கள்.

(நூல் : அத்தர்கீப் வத்தர்ஹீப் 327, பாகம் -1, பக்கம் - 31)

**7. பயண நேரத்திலும்**

நபி (ஸல்) அவர்கள் பயண நேரத்தில் தன்னுடன் மிஸ்வாக் குச்சியை வைத்துக் கொள்வார்கள். (அபூநயீம்)

“நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு உஹா மரக்குச்சிகளை பயணத்தில் மிஸ்வாக் செய்ய அன்பளிப்பாக வழங்கினார்கள்.”

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(நூல் : தப்ரானீ, மஜ்மஉஜ்ஜவாயித் 2575, பாகம் - 2)

**8. வீட்டிலிருந்து வெளியேறும்போது**

நபி (ஸல்) அவர்கள் மிஸ்வாக் செய்யாமல் எந்த தொழுகைக்காகவும் தமது வீட்டிலிருந்து வெளியேற மாட்டார்கள்.

(நூல் : அத்தர்கீப் வத்தர்ஹீப் 326, பாகம் -1)

**9. வீட்டிற்குள் நுழைந்த பின்**

நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்ததும் முதன் முதலில் என்ன செய்வார்கள் என ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, முதன் முதலில் மிஸ்வாக் செய்வார்கள் என பதிலளித்தார்கள். (நூல்: முஸ்லிம் 613, பாகம் - 1, பக்கம்-128)

**10. ஜும்ஆ நாளன்று**

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஜும்ஆ நாளன்று "முஸ்லிம்களே! அல்லாஹுதஆலா இன்றைய நாளை பெருநாளாக ஆக்கியுள்ளான். எனவே, இன்று குளித்து நறுமணம் இருந்தால் தடவிக் கொள்ளுங்கள். கண்டிப்பாக மிஸ்வாக் செய்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு ஸபாக் (ரளி) அவர்கள்
(நூல் : முஅத்தா இமாம் முஹம்மது 59, பாகம் - 1)

"எவர் ஜும்ஆ நாளில் குளித்து, மிஸ்வாக் செய்து, நறுமணம் தடவிக் கொண்டு அழகிய ஆடைகளை அணிந்து, பள்ளிவாசலுக்கு வந்து மக்களைத் தாண்டிச் செல்லாமல் தொழுவாரோ அவருடைய கடந்த ஒரு வாரத்தின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுகிறான்." அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
பாகம் - 1

"எவர் ஜும்ஆ நாளில் குளித்து, மிஸ்வாக் செய்து, நறுமணம் தடவிக் கொண்டு, அழகிய ஆடைகளை அணிந்து, பள்ளிவாசலுக்கு வந்து மக்களைத் தாண்டிச் செல்லாமல் தொழுவாரோ மேலும் இமாம் வரும் வரை அமைதி காத்திருப்பாரோ அவருடைய கடந்த ஒரு வாரத்தின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுகிறான்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : ஷரஹ்ம்ஆனில் ஆசார் 2004,
பாகம் - 1, பக்கம் - 185)

ஜும்ஆ நாளில் மூன்று காரியங்கள் எல்லா முஸ்லிம்களுக்கும் கடமையாக்கப்பட்டுள்ளன. 1. குளிப்பது 2. மிஸ்வாக் செய்வது. 3. வாசனை பூசுவது.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஸஹ்ல் இப்னு
ஹுனைப் (ரளி) அவர்கள்.
(தன்பீஹுல் ஃகாபிலீன், பக்கம் - 140
(முஸ்னத் அஹ்மத் 16444)

(தொடரும்)

# மவுத்தையே நீ மறந்து வாழலாகுமா?

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"மவுத்தையும், ஹயாத்தையும் உங்களில் சிறந்த அமல் செய்பவர் யார்? என்பதை சோதிக்கவே அல்லாஹ் படைத்தான்" - அல்குர்ஆன் (67 : 2)

"தவ்பாவை தீவிரப்படுத்துதல், போதுமென்ற மனம், வணக்கத்தில் உறுதியாக இருத்தல் இவை மரணத்தை நினைவுபடுத்தும். தவ்பாவை அலட்சியப் படுத்துதல், போதுமென்பதை மேற்கொள்ளாமலிருப்பது, வணக்கத்தில் சோம்பேறித்தனம் இவை மரணத்தை மறக்கச் செய்யும். மரணம் வரும் முன், மரணத்திற்கு தயாராகிக் கொள்"

- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்.

"எனது சந்திப்பை பிரியப் பட்டீர்களா?" என அல்லாஹ் கேட்கும்போது, "ஆம்" எனக்கூறுவர். "ஏன்?" என அல்லாஹ் கேட்க, "நீ எங்களை மன்னிப்பாய் என்பதால்" எனக் கூறுவர். "எனது மன்னிப்பு உங்களுக்கு வாஜிபாகி விட்டது" என்று அல்லாஹ் கூறுவான்.

- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் மஆதிப்னு ஜபல் (ரளி) அவர்கள்.

"அல்லாஹ் தன் அடியாருக்கு நன்மை செய்ய நாடி விட்டால் மவுத்துக்கு முன்பாக நல் அமல்கள் செய்ய உதவி செய்கிறான்."

- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்

"முஃமினின் அடையாளம், மரணத்தின்போது நெற்றியில் வியர்வை துளிர்க்கும்"

- நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் புரைதா (ரளி) அவர்கள்

"மய்யித்தின் அருகில் யாஸீன் ஓதுவதால் அல்லாஹ் மய்யித்துக்கு எல்லா இலேசுகளையும் வழங்குகிறான்."

- நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்

"மரணித்தவரின் நற்செயல்களை மட்டும் பேசுங்கள்; மலக்குகள் ஆமீன் சொல்வார்கள்."

- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் ஷத்தாதிப்னு அவ்ஸ் (ரளி) அவர்கள்

"ஸக்ராத் வரை அல்லாஹ் அடியானின் தவ்பாவை ஏற்றுக் கொள்கிறான்."
- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
(இப்னுமாஜா)

"தன்னை குளிப்பாட்டுபவர் யார்? கபனிடுபவர் யார்? சுமந்து செல்பவர்கள் யார்? என்பதை மய்யித் அறிந்து கொள்ளும்."
-ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபீ சயீதினில்குத்ரீ (ரளி) அவர்கள்

"பத்ரில் இறந்தவர்களை பெயர் கூறி நபி (ஸல்) அவர்கள் அழைக்க, "எப்படி இறந்தவர்களிடம் பேசுகிறீர்கள்?" என ஸஹாபிகள் கேட்டபோது, "அவர்கள் புரிந்து கொள்ள வைக்கப் படுவர்; ஆனால், பதில்கூற அவர்களால் இயலாது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்

"ஜனாஸா தூக்கிச் செல்லப் படும்போது, ஸாலிஹானமய்யித், விரைந்து செல்லுங்கள் என்று கூறும். ஸாலிஹல்லாத மய்யித் கைசேதமேஎங்கேசெல்கிறீர்கள்? என்று புலம்பும். இப்புலம்பலை மனிதர்களைத் தவிர எல்லா உயிரினங்களும் செவியுறும். மனிதன் செவியுற்றால் திடுக்குற்று மயங்கி விடுவான்."
- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபீ சயீதினில்குத்ரீ (ரளி) அவர்கள்

"வானத்துக்கு இரு வாயில்கள். ஒன்று : மனிதனின் அமல்கள் கொண்டு செல்லப்படும் வழி; மற்றொன்று மனிதனுக்கு ரிஜ்க் கொண்டு வரப்படும் வழி. முஃமின் இறந்து விட்டால் இரு வாயில்களும் அழுகின்றன."
- நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்

"மரணத்தை மனிதன் அதிருப்தியாக கருதுகிறான். ஆனால் மரணம் பல சோதனைகளை விட சிறந்தது. ஏழ்மையை விரும்புவதில்லை. ஆனால் ஏழ்மை குறைந்த கேள்விக்கு உதவியாயிருக்கும்"
-ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் மஹ்மூதிப்னு லுபைத் (ரளி) அவர்கள்

"இறந்தவரை தாமதப் படுத்தாமல் கப்ருக்கு கொண்டு செல்லுங்கள். தலைமாட்டில் நின்று பாத்திஹா சூராவும், கால்மாட்டில் நின்று பகரா சூராவும் ஓதுங்கள்."
-ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள்.

"சிறுநீர் கழித்து சுத்தம் செய்வதில் குறையிருப்பின் கப்ரு நெருக்கும்"
-ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் உமய்யா இப்னு அப்துல்லாஹ் (ரளி) அவர்கள்.

கப்ரில் அடக்கப்பட்டு, மக்கள் சென்ற பிறகு இரு மலக்குகள் வந்து, இவனை உட்கார வைத்து கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதிலை சொன்ன பிறகு உன் தங்கு மிடத்தை பார் என்று மலக்குகள் கூற, அற்புத சுவனம் தென்படு கிறது. கப்ரு அறுபது முழம் விஸ்தீரணம் செய்யப்படுகிறது. இன்னும் அது பசுமையாக ஆக்கப்படுகிறது. காஃபிரும், முனாஃபிக்கும் சரியான பதில் கூறாததால் இரும்புச் சம்மட்டி யால் அடிக்கப்படுவர். அவனது சப்தத்தை அடுத்து இருக்கும் உயிரினங்கள் செவியுறும். ஜின், மனிதர்களால் கேட்க முடியாது."

– ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்.

மண்ணறையில் முன்கர், நகீர் மற்றும் நாகூர் என்ற மலக்கும், இம்மூவருக்கும் தலைவராக ரூமான் என்ற மலக்கும் இருப்பர்.

அனுதினமும் அழகிய அற்புத குர்ஆனை ஓதி வந்தால் மலக்குகள் செவியேற்கிறார்கள். ஷைத்தான்கள் விரண்டோடு கின்றன. மரணம்வந்துவிட்டால் குர்ஆன் வந்து நின்று கொள் கிறது. குளிப்பாட்டும்போது விலாப்பக்கம் நிற்கும் குர்ஆன், கஃபனிடும்போது நெஞ்சரு கில் நிற்கிறது. மண்ணறையில் மலக்குகள் வந்ததும், இவனுக் கும், மலக்குகளுக்கும் இடை யில் நின்றவாறு சுவனத்தில் நுழைவிக்காமல் செல்ல மாட்டேன் என்கிறது குர்ஆன்.

– ஃபளாயிலுல் குர்ஆன்

கப்ருக்கு அருகில் சென்றால் தாடி நனைகிற வரை அழுவார் கள் ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள். சுவனம் நரகம் பற்றி பேசப்படும் போதெல்லாம் இப்படி அழுததில்லையே என ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர் களிடம் கேட்கப்பட்டபோது, மறுமையை அடைவதற்கு முன் கப்ரு தான் முதல் சோதனை கட்டம். இதில் வெற்றி பெற்றால் இதன்பின் எல்லாமே இலேசா னதுதான். இதில் வெற்றி பெற வில்லையானால் இதன்பின் எல்லாமே கஷ்டம்தான் என நபிமணி (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்களே என்றார்கள் ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள். (இப்னுமாஜா)

"கப்ரின் வேதனை உண்மையே. இறைவா! கப்ரின் வேதனையிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்."

– ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா(ரளி) அவர்கள்.

"பனுன் நஜ்ஜாருடைய பேரீத்தம்பழத் தோட்டத்தில் நுழைந்த நபி (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யத்தில் இறந்த

பனுன் நஜ்ஜார்கள் வேதனை செய்யப்படும் சப்தத்தை செவியுற்று, திடுக்குற்றவர்களாக, தோட்டத்திலிருந்து வெளியேறி கப்ரின் வேதனையிலிருந்து பாதுகாப்புத் தேடுங்கள்" என ஸஹாபிகளிடம் கூறினார்கள்.
- ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்

"மைமூனாவே! கப்ரின் வேதனையிலிருந்து பாதுகாப்புத் தேடிக் கொள். சிறுநீர் கழித்து விட்டு சரியாக சுத்தம் செய்யாமலிருப்பதும், புறம் பேசுவதும் கப்ரின் வேதனைக்கு காரணமாகும்"
- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் மைமூனா (ரளி) அவர்கள்.

"மண்ணறைக்குச் சென்றால், கப்ருவாசி, வந்திருப்பது யார் என்பதை அறிந்து கொள்கிறார். ஸலாம் சொன்னால் பதில் சொல்கிறார்."
அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா(ரளி) அவர்கள்.

ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட அன்று, மயக்கமுற்று பிறகு விழித்த நிலையில் நான் நபிமணி (ஸல்) அவர்களை கனவில் கண்டேன். தம்மிடத்தில் வந்து நோன்புதிற என நபிமணி (ஸல்) அவர்கள் கூறியதாகச் சொன்ன ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் நோன்பாளியாக ஷஹீதாக்கப்பட்டார்கள்."
- ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள்.

"மரணித்தவர்களை திட்டாதீர்கள். அவர்கள் சுவனவாசிகளாக இருக்கலாம்."
- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்.

"மரணித்தவர்களுக்காக குர்ஆன், யாஸீன், குல்ஹுவல்லாஹ் போன்றவற்றை ஓதினால் அல்லாஹ் இலேசாக்குகிறான். சூரா பாத்திஹா, ஃபலக், நாஸ், குல்ஹுவல்லாஹ் ஓதி துஆ செய்யுங்கள்."
- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்
அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்.

## தொழுகைக்கு விரைந்து வாருங்கள்!

"(தொழுகைக்கு அதன்) ஆரம்ப நேரத்தில் விரைந்து செல்வதில் உள்ள (நன்மை)தனை மக்கள் அறிந்தால், அதற்கு முந்திக் கொள்வார்கள். இஷா தொழுகையிலும், சுப்ஹு தொழுகையிலும் உள்ள (நன்மை)தனை அவர்கள் அறிந்தால், அவற்றுக்காக (தரையில்) தவழ்ந்தேனும் வந்து சேர்ந்துவிடுவார்கள்." என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள். (ஸஹீஹுல் புகாரி)

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஜியாரத்து செய்யும் வழிமுறை

மவ்லவி **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மூலை முடுக்குகளிலிருந்தும் மக்கள் ஹஜ்ஜுக்கு வருவது போல் நபி (ஸல்) அவர்களையும் ஜியாரத் – சந்திக்க வருவது, உலகின் ஒவ்வொரு பகுதிக்கும், மூலை முடுக்கிற்கும் நபி (ஸல்) அவர்கள் குறித்த நற்செய்திகள் சென்றடைந்திருக்கின்றன என்பதையே காட்டுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறித்த செய்தி, அனைத்து மக்களிடமும் சென்றடைந்தது போல் வேறு எந்த மனிதர் குறித்தும் சென்றடைந்ததாக வரலாறு இல்லை.

நீங்கள் சொல்லலாம். ஜீசஸ் குறித்த செய்தியும் உலகம் முழுவதும் சென்றடைந்து இருக்கிறதே என்று.

நாம் பேசிக் கொண்டிருப்பது மனிதர்கள் குறித்து. ஜீசஸ் தான் கிறிஸ்தவர்களால் கடவுளாக மதிக்கப்படுகிறாரே!

மாரிஸ் புகைல் போன்ற இஸ்லாத்தைப் பின்பற்றாத பல்வேறு மொழி மற்றும் நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வானளாவப் புகழ்கிறார்கள்.

குற்றப்பின்னணி கொண்ட மக்களையும், நல்லது இன்னது எனத் தெரியாமல் வாழ்ந்த மக்களையும், பகலில் வாழ்ந்தாலும் மனதளவில் இருட்டிலேயே இருந்த அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

“இறைவனுக்கு நிகராக எவரும் இல்லை; மனிதரில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிகராக எவரும் இல்லை” என்று ஹள்ரத் ஷிப்லி நுஃமானீ (ரஹ்) அவர்கள் கூறுவது போல் ஈடு இணையற்ற, இறுதி இறைத்தூதரை எவ்வாறு ஜியாரத் செய்வது என்பது குறித்து பார்ப்போம் வாருங்கள்.

## ஜியாரத்தின் ஒழுக்கம்

நபி (ஸல்) அவர்களை ஜியாரத்து செய்வோர் மிகவும் ஒழுக்கத்துடன் ஜியாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

“ஒருவரின் மீது நீ வைத்திருக்கும் அன்பே உனக்கு ஒழுக்கத்தை கற்பிக்கும்” என ஒரு கவிஞர் கூறுகிறார்.

நபி (ஸல்) அவர்கள் மீது நாம் அளவின்றி வைத்திருக்கும் அன்பே நாம் அவர்களை ஜியாரத்து செய்யும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்பதை கற்பிக்கும்.

நபி (ஸல்) அவர்களை ஜியாரத்து செய்ய செல்வோர் நபி (ஸல்) அவர்களுக்கு அதிகமாக ஸலவாத்துகளை ஓதிக் கொண்டே செல்ல வேண்டும்.

அப்துல் கைஸ் கூட்டத்தாரின் தூதுக் குழுவினர் நபி (ஸல்) அவர்களைக் காண வந்திருந்த போது அவர்கள் நபி (ஸல்) அவர்களை தூரத்திலிருந்து பார்த்ததும் தம் ஒட்டகங்களிலிருந்து கீழே குதித்தனர். தமது ஒட்டகங்களை அப்படியே விட்டு விட்டு நபி (ஸல்) அவர்களை நோக்கி ஓடி வந்து சபையில் அமர்ந்தனர்.

ஆனால், அவர்களில் ஹள்ரத் முன்திர் பின் ஆயிது (ரளி) (இவரை ஷேக் அப்துல் கைஸ் – ரளி என்றும் அழைக்கப்படும்) அவர்கள் தம் ஒட்டகங்களையும், தம் கூட்டத்தினருடைய ஒட்டகங்களையும் இழுத்துச் சென்று அவற்றை கட்டிப் போட வேண்டிய இடத்தில் கட்டி வைத்தார்கள். பின்னர் தன் சாமான்களையும், உடன் வந்திருந்தவர்களின் சாமான்களையும் இறக்கி ஒன்று சேர்த்து அவற்றை வைக்க வேண்டிய இடத்தில் அடுக்கி வைத்தார்கள்.

பிறகு ஒரு தோட்டத்திற்குச் சென்று குளித்தார்கள். புத்தாடை அணிந்தார்கள். பின்னர் மிக மரியாதையுடன் மெதுவாக நடந்துவந்துமஸ்ஜிதுந் நபவியில் இரண்டு ரக்அத்துகள் தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுது துஆச் செய்தார்கள்.

பின்னர் நபி (ஸல்) அவர்களின் சபைக்கு வந்து ஸலாம் கூறினார்கள். அவர்களுடைய செயலைக் கண்டு மிகவும் மகிழ்ந்து, “உங்களில் இரு நற்குண நல்லொழுக்கங்கள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ்வும் பிரியப்படுகின்றான். ஒன்று : சகிப்புத்தன்மை, மற்றொன்று : கம்பீரம்” எனக் கூறினார்கள். (நூல் : திர்மிதீ, முஸ்னது அஹ்மது)

பாபுஸ்ஸலாம் வழியாக நபி (ஸல்) அவர்களின்சன்னிதானத்திற்குள் நுழையும்போது, மாபெரும் அரசவைக்குள் செல்லும்போது அச்சமும், மரியாதையும் கலந்து மிகைத்திருப்பது போல் அங்கு நடந்து செல்ல வேண்டும்.

பொதுவாகவே ஜியாரத் செய்யச் செல்பவர்கள் அடக்கம் செய்யப்பட்டு இருப்பவரின்கால் மாட்டில் நின்று அவர்களை ஜியாரத்து செய்ய வேண்டும். அப்படி செய்யும்போது அவர்களுக்கு பார்க்கும் சக்தியை அல்லாஹ் வழங்கினால் நம்மை அவர்கள் பார்ப்பார்கள். அதனால் கால்மாட்டில் நின்று ஜியாரத் செய்வதே சரியான ஒழுங்கு முறையாகும்.

(நூல்: ஃபத்ஹுல் கதீர்)

நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கும்போது எந்த வகையில் மரியாதை செய்வோமோ அவ்வாறு இன்றும் கண்ணியம் அளிக்கப்படவேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் கப்ரில் உயிரோடுதான் இருக்கிறார்கள்.

(நூல் : ஷரஹ் மவாஹிப்)

அல்லாமா முல்லா அலீகாரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "சில அறிவீனர்கள் செய்வது போன்று நாம் செய்யக் கூடாது. வெளித்தோற்றத்தில் பெரும் இறைநேசரை போன்று அவர்கள் காணப்பட்டாலும் அவர்கள் செய்கிற தவறான செயல்களை நாம் செய்யக்கூடாது.

கப்ருகளுக்கு முன்னால் தலைவணங்குதல், கப்ரை முத்தமிடுதல், அப்பகுதியில் உள்ள தரையை முத்தமிடுதல், சுவர்களை முத்தமிடுதல், கப்ரை முன்னோக்கி தொழுதல் ஆகியன அறவே கூடாது.

எவரேனும் கப்ரை கண்ணியப் படுத்தும் எண்ணத்துடன் அதனை முன்னோக்கி தொழுதால் அவரை காஃபிர் என்றே சொல்ல வேண்டும்.

உலகத்தில் ஒரு கல்லை முத்தமிடுவதற்கு அனுமதி இருக்கிறது என்றால் அது "ஹஜருல் அஸ்வத்" மட்டும் தான்."

(நூல் : ஷரஹ் லுபாப் அல் மனாசிக்)

நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்ய சென்றிருக்கும் போது நாம் கடந்த காலங்களில் செய்த பாவங்களை வெட்கப் பட்டும், வருந்தியும் அல்லாஹ் விடம் தவ்பா செய்த நிலையிலும் செல்ல வேண்டும்.

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

குர்ஆனின் குரலின் பாசமிகு சந்தாதாரர்கள், விளம்பர தாரர்கள், விற்பனை முகவர்கள், சிறப்புப் பிரதிநிதிகள், குர்ஆனின் குரலின் ஒலி உலகெங்கும் ஒலித்திட துஆ செய்து வரும் வாசக நேயர்கள் அனைவருக்கும் எங்களின் இதயங்கனிந்த "ஹிஜ்ரி 1446 இஸ்லாமிய புத்தாண்டு" நல்வாழ்த்தினை உரித்தாக்குவதில் பெருமகிழ்வெய்துகிறோம்.

அல்ஹம்து லில்லாஹ்!

– குர்ஆனின் குரல் குழுமம்.

# ஜியாரத்தும் நபி (ஸல்) அவர்கள்

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"என்னை ஜியாரத் செய்வதற்கென்றே யார் வருவாரோ அவர் மறுமை நாளில் எனக்கு அருகில் இருப்பார்.

மேலும், மதீனாவில் தங்கியிருக்கும் போது அங்குள்ள கஷ்டங்களையும், சிரமங்களையும் யார் சகித்துக் கொள்வாரோ அவருக்கு நான் மறுமை நாளில் சாட்சியாகவும், பரிந்துரை செய்யக் கூடியவராகவும் இருப்பேன்.

மேலும், ஒருவர் மக்காவின் ஹரமிலோ அல்லது மதீனாவின் ஹரமிலோ மரணமடைந்து விட்டால், அவர் மறுமை நாளில் பாதுகாப்பு பெற்றவர்களின் கூட்டத்தில் எழுப்பப்படுவார்"

(நூல் : பைஹகீ, மிஷ்காத்)

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"என்னுடைய கப்ரை யார் ஜியாரத் செய்தாரோ அவருக்கு எனது ஷஃபாஅத் கடமையாகி விட்டது"

(நூல் : அபூதாவூத், முஸ்னது அஹ்மத்)

நபி (ஸல்) அவர்களின் ஷஃபாஅத்தை யார்தான் வேண்டாம் என்று சொல்ல முடியும்?

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"எவர் என் மரணத்திற்குப் பிறகு என்னை ஜியாரத் செய்கிறாரோ அவர், என் வாழ்நாளில் என்னை சந்தித்தவர் போல் ஆவார்"**

(நூல் : தப்ரானீ, தாரகுத்னீ)

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"ஹஜ் செய்த பின்னர் யார் என்னை ஜியாரத் செய்ய வரவில்லையோ அவர், எனக்கு அநியாயம் செய்தவர் ஆவார்"

(நூல் : பைஹகீ, இப்னு அபீதுன்யா)

"யார் சக்தியும், வசதியும் இருந்தும் நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்யவில்லையோ அவர் பெரும் அநியாயக்காரர் ஆவார்" என அல்லாமா கிஸ்தலானி (ரஹ்) அவர்கள் மவாஹிபு லதுன்னியா எனும் நூலில் கூறுகிறார்கள்.

அல்லாமா முல்லா அலீ காரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

"நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்வது வாஜிப்

# குர்ஆனை பொருளுணர்ந்து கற்க
## (ஆன்லைன் மூலம்)
# ஓர் அரிய வாய்ப்பு!

**கால அளவு : ஒரு வருடம் ★ வாரத்திற்கு நான்கு வகுப்புகள்**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க :

**K.S. SABIRA ANWARIYA,**
Afzalul Ulama, M.A.,M.Phil., Arabic Pandit,
**Ph : 7708623061, 9677830877**

# SABEELUL FALAH ISLAMIC LEARNING CENTRE

**121, CLASSIC PARK, MAHARAJA COLONY ROAD, KUNIYAMUTHUR, COIMBATORE - 641008.**

---

## தமிழக மதரஸாக்களுக்கான
# அரிய வாய்ப்பு!

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாசுல் குப்ரா, ஜன்ஜானீ ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் **"சொல்லிலக்கணம்"** என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம் பாகவி ஹஜ்ரத்** அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

## மிக பயனுள்ள நூல்!

**பக்கங்கள் : 800; விலை ரூ. 500/-** (தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் :** **குர்ஆனின் குரல்** மதுரை 9486729192

ஆகும். ஜியாரத் செய்ய சக்தியிருந்தும் யார் ஜியாரத் செய்யாமல் இருக்கிறாரோ அவர் குற்றவாளியும், நன்றி கெட்டவரும் ஆவார்."

"நபி (ஸல்) அவர்கள் இந்த சமுதாயத்தினருக்கு செய்த உதவிகளை நினைத்துப் பார்த்தும், நமது மரணத்திற்குப் பிறகு மறுமையில் நபிகளார் நமக்கு செய்யும் ஷஃபாஅத் - பரிந்துரை மற்றும ஷஹாதத் - சாட்சி சொல்லும் நிலையை மனதில் கொண்டும் அவர்களை ஜியாரத் செய்வதை நாமாக கடமையாக்கிக் கொள்ள வேண்டும்" என அல்லாமா ஷாமீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

மாலிகி மத்ஹபை சேர்ந்த அல்லாமா காழி இயாழ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள :

"நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்வது அனைத்து மத்ஹபினராலும் ஒருமித்து ஏற்றுக் கொள்ளப் பட்ட சுன்னத்தான செயல்.

மஸ்ஜிதுன் நபவி பள்ளி வாசலுக்கு செல்வதாகவும், இஃதிகாஃப் இருப்பதற்காக செல்வதாகவும், நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்வதற்காக செல்வதாகவும் என மூன்று காரணங்களில் எதை நிய்யத் செய்து சென்றாலும் அது ஆகுமானதே!

"முதன் முதலில் மஸ்ஜிதுந் நபவி பள்ளிவாசலுக்கு செல்கிறவர், நபிகளாரை ஜியாரத் செய்வதற்காகவே செல்வதாக நிய்யத் செய்வது சிறந்தது" என இமாம் இப்னு ஹமாம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

"முல்லா ஜாமி (ரஹ் ) அவர்கள் ஒரு முறை நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்வதற்காக மட்டுமே வெகு தொலைவில் இருந்து பயணத்தை மேற்கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் அதில் ஹஜ் மற்றும் வேறு எந்த நோக்கத்தையும் கலக்கவில்லை.

இவ்வாறு ஜியாரத்தை மட்டுமே விரும்பி செய்ததன் மூலம் அவர்களின் அன்பின் ஆழம் என்ன என்று புரிந்து கொள்ள முடிகிறது" என ஷாமீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹஜ்ஜுக்காக செல்கிற ஒருவர் முதலில் ஹஜ் செய்ய வேண்டுமா? அல்லது நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்ய வேண்டுமா?

இரண்டு அமல்களையும் நிதானமாக செய்து முடிக்க வேண்டும். அந்த வகையில் எதை முதலில் செய்ய வேண்டும் என அவருக்கு சூழ்நிலை அமைந்திருக்கிறதோ அதையே அவர் முதலில் செய்ய வேண்டும்.

ஹஜ்ஜுக்கான காலம் நெருங்கியிருக்கும் பொழுது அவர் ஜியாரத் செய்வதை விட

ஹஜ்ஜை முதலில் செய்வது தான் முறையாகும். அதே நேரம் ஹஜ்ஜுக்கான கால இடைவெளி அதிகமாக இருந்தால், அவர் முதலில் ஜியாரத்தை முடித்துக் கொண்டு ஹஜ்ஜு செய்யலாம்.

"ஹஜ்ஜுக்கு செல்கிற ஒருவர் மதீனாவை கடந்து தான் போக வேண்டும் எனும் நிலையில் இருந்தால், அவர் கண்டிப்பாக நபி (ஸல்) அவர்களின் அடக்கத்தலத்தை சந்தித்து ஸலாம் சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு செல்வது தான் முறையாகும். அதை அவர் செய்யத் தவறினால் குற்றம் பிடிக்கப்படுவார்" என முல்லா அலீ காரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

"நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்வதற்காக வேண்டி மட்டுமே நான் மதீனாவிற்கு செல்கிறேன்" என ஒருவர் நிய்யத் செய்து செல்லும்போது அவர் "நபி (ஸல்) அவர்களை மிகவும் கண்ணியப்படுத்திய தாக கருதப்படும்" என இப்னு ஹுமாம் (ரஹ்) அவர்கள் ஃபத்ஹுல் கதீர் எனும் நூலில் கூறுகிறார்கள்.

## நபிகளாருக்கு ஸலாம் சொல்லுதல்

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"எனது அடக்கத்தலத்திற்கு அருகில் நின்று எவர் எனக்கு ஸலாம் சொன்னாலும் அவருடைய ஸலாமுக்கு நான் பதில் கூறுகிறேன்"

(நூல் : முஸ்னது அஹ்மத்)

நபி(ஸல்) அவர்களை ஜியாரத் செய்வதற்காக பாபுஸ் ஸலாம் வழியாக செல்லும்போது நாம் கடந்த காலங்களில் செய்த பாவங்களை எண்ணி வெட்கப் பட்டும், வருந்தியும், அல்லாஹ் விடம் தவ்பா செய்த நிலை யிலும் செல்ல வேண்டும்.

மேலும் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்ய செல்லும் வழியில், நபிகளாரை சுற்றியிருந்து நபிகளாரின் பரக்கத்துகளை யும், அவர்களின் இனிய உபதேசங்களையும் கேட்டுக் கொண்டிருந்த ஸஹாபாக்களை யும், அந்த நாட்களையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

தனக்கு நபி (ஸல்) அவர்களையும், ஸஹாபாக்களையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்க வில்லையே என எண்ணி வருத்தமும், கவலையும், துக்கமும் கொள்ள வேண்டும்.

உலகத்தில்தான் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போனது. மறுமை நாளில் என்னவாகுமோ தெரியாது! நபி (ஸல்) அவர்களின் தரிசனம் மகிழ்வுடன் கிடைக்குமோ?

அல்லது வெறுத்த நிலையில் கிடைக்குமோ? நபி (ஸல்) அவர்களின் சமூகத்திலிருந்து விரட்டப்படுவோமோ? நம் தீய செயல்கள் நபிகளாரின் தரிசனத்திற்கு திரையாக வந்து தடையாக ஆகிவிடக் கூடாதே என அஞ்ச வேண்டும்.

ஏனெனில், ஹதீஸில், “மறுமை நாளில் சில மனிதர்கள் என்னை விட்டும் தூரமாக்கப் படுவார்கள் , “இவர்கள் என் உம்மத்தினராயிற்றே” என நான் கூறுவேன். “உங்களுக்குப் பின்னால் இவர்கள் என்ன செய்தார்கள் என்று உங்களுக்குத் தெரியாது'' என பதிலளிக்கப்படும்.

(நூல்:இஹ்யாஉ உலூமித்தீன்)

நபி(ஸல்) அவர்களின் சன்னிதானத்தில் நின்று கொண்டு அல்லாஹ்வை போற்றிப் புகழ வேண்டும். பிறகு அல்லாஹ் நமக்கு வழங்கிய நற்பாக்கியங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். பின்னர் அன்பு பொங்க நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓத வேண்டும்.

நபி (ஸல்) அவர்களுக்கு முறையாக ஸலாம் சொன்ன பிறகு நபிகளாரிடம் வஸீலா - உலகம் மற்றும் மறுமை தேவைக்காக உதவிகள் கேட்க வேண்டும். மேலும் ஷஃபாஅத் - மறுமையில் தமக்காக பரிந்துரை செய்யும்படியும் துஆ செய்ய வேண்டும்.

மறுமை நாளில் பெரும்பாலான நபிமார்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து வஸீலா - உதவி கேட்பார்கள் என்கிற நபிமொழி ஆதாரப்பூர்வமான கிரந்தங்களில் பதிவு செய்யப் பட்டிருப்பதை தாங்கள் அறிவீர்கள்.

பின்னர் நபி (ஸல்) அவர்களின் வஸீலாவை அல்லாஹ்விடம் தனக்காகவும், தன் பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர்கள், குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், நாம் அறிந்த அனைவருக்காகவும் துஆ செய்ய வேண்டும்.

நம்மிடம் துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டவர்களுக்காகவும், நம் குடும்பத்தில் காலம் சென்றவர்களுக்காகவும் அங்கே நின்று துஆ செய்ய வேண்டும்.

மேலும் மதீனாவிற்கு செல்கிறவரிடம் யாரேனும் நபி(ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்லுமாறு சொல்லி அனுப்பினால், அதை அவர் சொல்வதாக ஒப்புக் கொண்டால், அவர் அந்த ஸலாமை எத்தி வைப்பது அவர் மீது வாஜிப் ஆகிறது.

உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது மதீனாவிற்கு செல்வோரிடமும் மற்றும் அரசு அலுவல் சார்ந்த பணிகளுக்கு செல்லும் அதிகாரிகளிடமும் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்லுமாறு

## பலவீனமானவர்களை விரட்ட வேண்டாம்!

“நீங்கள் பலவீனமானவர்களிலே என்னைத் தேடுங்கள். ஏனென்றால், நீங்கள் உதவி செய்யப்படுவதும், உணவளிக்கப்படுவதும் உங்களிலுள்ள பலவீனமானவர்களை கொண்டுதான்” என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூது)


வாழ்த்துக்களுடன்....

ARM

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்
ஓர் உறுதியான இணைப்பு

30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு

சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்
கம்பி | கெமிக்கல்ஸ்

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

சொல்லி அனுப்பும் வழக்கம் உடையவர்களாக இருந்தார்கள்.

இவ்வாறே பல இறை நேசர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்லும்படி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

ஹிஜ்ரி 555 – இல் நபி (ஸல்) அவர்களிடம் முஸாஃபஹா செய்தவர் :

அல்லாமா சையித் அஹ்மத் ரிஃபாயி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 555 – இல் ஹஜ்ஜை நிறைவேற்றிவிட்டு ஜியாரத்திற்காக மதீனா வந்திருந்தார்கள். கப்ரு ஷரீஃபிற்கு முன்பு நின்று .....

தூரத்தில் இருக்கும் போது என் ஆன்மாவை தங்களின் சமூகத்திற்கு சேவைக்காக அனுப்பி வைத்தேன்.

அது என் தூதராக வந்து, தங்களின் முபாரக்கான கப்ரு ஷரீஃபை முத்தமிட்டுக் கொண்டிருந்தது.

இப்பொழுது உடல்கள் சந்திக்கும் நேரம் வந்திருக்கிறது.

எனவே, தங்களின் திருக்கரத்தை நீட்டினால் என் உதடுகள் அதனை முத்தமிடும்."

இவ்வாறு அவர்கள் கூறியதும், கப்ரு ஷரீஃபிலிருந்து நபிகளாரின் பரிசுத்த கரங்கள் வெளிப்பட்டன. அவர்கள் அவற்றை முத்தமிட்டார்கள்.

அச்சமயம் தொண்ணூறாயிரம் பேர் மஸ்ஜிதுந் நபவி பள்ளியில் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் இக்காட்சியைப் பார்த்து நபி (ஸல்) அவர்களுடைய திருக்கரங்களை ஜியாரத்தும் செய்தனர்.

அக்கூட்டத்தில் ஹள்ரத் மஹ்பூபே சுப்ஹானி, ஷேக் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களும் இருந்தார்கள்.

(நூல் : அல் ஹாவிலில் ஃபதாவா, அல் பயானுல் மஷ்ஹறத்)

## மஸ்ஜிதுந் நபவி பள்ளிவாசல்

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"மூன்று மஸ்ஜிதுகள் அல்லாமல் வேறு எதற்கும் நீங்கள் பயணம் செய்யாதீர். ஒன்று : மஸ்ஜிதுல் ஹராம். இரண்டு : மஸ்ஜிதுல் அக்ஸா. மூன்று : என்னுடைய இந்த மஸ்ஜித்."

(நூல் : புகாரி, முஸ்லிம்)

மேலும் "மஸ்ஜிதுல் குபா பள்ளிவாசலுக்கு சென்று இரண்டு ரக்அத்துகள் தொழுதால் ஒரு உம்ரா செய்த நன்மை கிடைக்கும்" என நபி (ஸல்) அவர்கள் சொல்லியிருப்பதால் இந்த நான்கு பள்ளிவாசல்களுக்கு என பயணப்படுவது நன்மையை தரக்கூடியதாகும்.

அதே நேரம் நபி (ஸல்) அவர்களை ஜியாரத் செய்வ

தற்காக வேண்டி மட்டும் வெளியூர்களிலிருந்து மதீனாவிற்கு பயணித்து வருவதும், அதேபோல் நபிமார்களுடைய கப்ரை ஜியாரத் செய்வதற்காக வேண்டி மட்டும் வேறு நகரங்களுக்கு செல்வதும், அதேபோல் வலிமார்களுடைய கப்ருகளை ஜியாரத்து செய்வதற்காக செல்வதும் மார்க்கத்தில் ஆகுமானதே! என மவாஹிபுல் லதுன்னியா எனும் நூலில் அல்லாமா கிஸ்தலானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஷேக் வலியுத்தீன் இராகீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

என் தந்தை ஜைன் இராகீ (ரஹ்) அவர்களும், ஹள்ரத் ஷேக் அப்துர் ரஹ்மான் பின் ரஜப்ஹன்பலி (ரஹ்) ஆகிய இருவரும் சேர்ந்து நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்ய பாலஸ்தீனில் உள்ள ஜிப்ரான் நகரத்திற்கு சென்றார்கள்.

நகருக்கு அருகில் சென்றதும் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் "நான் ஹள்ரத் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மஸ்ஜிதில் தொழ வேண்டுமென நிய்யத் செய்து கொண்டேன். ஏனெனில் ஜியாரத்தினுடைய நிய்யத் இருக்கக்கூடாது என்பதற்காக" எனக் கூறினார்கள்.

உடனே ஹள்ரத் ஜைன் இராகீ (ரஹ்) அவர்கள், "தாங்கள் நபி (ஸல்) அவர்களின் சொல்லுக்கு மாற்றம் செய்கிறீர்கள்.

நபி (ஸல்) அவர்கள் மூன்று மஸ்ஜிதுகளுக்கு அல்லாமல் வேறு பள்ளிவாசல்களுக்கு பயணம் செய்யக்கூடாது எனச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீங்களோ நான்காவதாக ஒரு பள்ளிவாசலில் தொழப் போவதாக நிய்யத் செய்திருக்கிறீர்கள்.

நபி (ஸல்) அவர்கள் கப்ருகளை ஜியாரத்து செய்யுங்கள் எனச் சொல்லியிருப்பதால் அந்த ஹதீஸின் அடிப்படையில் நான் இப்ராஹீம் (அலை) அவர்களின் கப்ரை ஜியாரத்து செய்ய வந்திருக்கிறேன்; எனவே நான் நபி (ஸல்) அவர்களுக்கு மாற்றம் செய்யவில்லை" என்று கூறினார்கள்.

## மதீனா நகரமும் மதீனா வாசிகளும்:

ஹள்ரத் சையது பின் அஸ்லம் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது :

நபி (ஸல்) அவர்கள், "இறைவா! மதீனாவாசிகள் மீது யார் தவறான எண்ணம் கொள்கிறாரோ அவரை, உலோகம் நெருப்பிலும், உப்பு தண்ணீரிலும், கொழுப்பு வெயிலிலும் உருகுவது போல் உருக்கிடுவாயாக" என துஆ செய்திருக்கிறார்கள்.

(நூல் : கன்ஜுல் உம்மால்)

எனவே மதீனாவாசிகளிடம் வியாபாரம் செய்யும் போதும், பேசும்போதும், மற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போதும் அவர்களை கண்ணிய குறைவாகவோ, ஏமாற்றும் வித மாகவோ நடத்தி விடக்கூடாது என்பதை ஹாஜிகள் கவனத் தில் கொள்ள வேண்டும்.

சிலர் மக்காவிலோ மதீனா விலோ தங்கிவிடலாம் என எண்ணுகிறார்கள்.

அவ்வாறு நினைப்பவர்கள் மக்காவில் தங்குவதை விட மதீனாவில் தங்குவது ஆகச் சிறந்தது என மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர் கள், "மதீனா அல்லாத ஊரைச் சார்ந்தவர்கள் மதீனாவில் அதிகமாக தங்குவதையும், அடிக்கடி ரவ்ளாவிற்கு செல் வதையும் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் அடிக்கடி ரவ்ளா விற்கு செல்லும்போது கவனக் குறைவும், மனச்சிதறலும் உண்டாகலாம்; அதனால் அது நபி (ஸல்) அவர்களை குறைத்து மதிப்பிட்டதாக ஆகி விடுமோ என நான் அஞ்சு கிறேன்" எனக் கூறுகிறார்கள்.

தவறான சிந்தனைகள் உருவாகாதவர்கள் அங்கே எவ்வளவு காலம் வேண்டு மானாலும் தங்கலாம். நபி (ஸல்) அவர்கள் மீது அளவு கடந்த இஷ்க் - பேரன்பு வைத்திருப்பவர்கள் விதிவிலக்கானவர்கள் ஆவர்.

(நூல் : மனாஸிக் நவவி)

## ஜன்னத்துல் பகீஉ

ஜன்னத்துல் பகீஉ சென்று கப்ருகளை ஜியாரத் செய்வது அவசியமாகும். அங்கே ஹள்ரத் உஸ்மான் (ரளி), ஹள்ரத் அப்பாஸ் (ரளி), ஹள்ரத் ஹசன் (ரளி), ஹள்ரத் இப்ராஹீம் (ரளி) மற்றும் நபி (ஸல்) அவர்களின் துணைவியர், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஸஹாபாக்கள் அடக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். எனவே ஜன்னத்துல் பகீஉவை ஜியாரத் செய்வது அவசியமாகும்.

நபி (ஸல்) அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் ஒவ் வொரு வியாழக்கிழமையும் காலையில் உஹது மலைக்குச் சென்று, உஹது ஸஹாபாக் களை ஜியாரத் செய்து வந்தார் கள். அன்றைய தினத்தில்தான் உஹது யுத்தம் நடந்ததாக வரலாறு.

மதீனாவில் தங்கியிருக்கும் காலத்தில் மஸ்ஜித் குபாவிற்கு சென்று இரண்டு ரக்அத்துகள் தொழுது வர வேண்டும்.

மேலும் மதீனாவில் ஏழு கிணறுகள், சில தோட்டங்கள், ஸஹாபாக்களின் வீடுகளாக இருந்து பள்ளிவாசல்களாக மாறிய மஸ்ஜிதுகள் மற்றும் சில நினைவிடங்கள் என

# மணமகன் தேவை

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் இராவுத்தர், வயது 34; உயரம் 5'5"; B.Sc.(I.T.M.) படித்த, மாநிறம் கொண்ட ஹாஜியானி மணமகளுக்கு, (8 வயதுடைய ஆண் மகன் இருக்கிறார்) மறுமணம் முடிக்க, டிகிரி முடித்த, சுமார் 37வயதுடைய சொந்த தொழில் செய்து வரும் ஸாலிஹான **மணமகன் தேவை.**

தொடர்புக்கு : **9442807860**

---

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://**oxfordenglishschool.info**

முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களை ஜியாரத் செய்வது முஸ்தஹப் என இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

## வேட்டையாடுதல் :

ஹரம்ஃபியாக்களிடத்தில் மக்காவில் வேட்டையாடியதற்கும், மதீனாவில் வேட்டையாடியதற்கும் சட்டம் வெவ்வேறாகும்.

மக்கா ஹரம் எல்லையில் வேட்டையாடுவது, செடி கொடிகளை வெட்டுவது போன்ற செயல்களை எவரேனும் தெரிந்தோ தெரியாமலோ செய்து விட்டால் அதற்கான பரிகாரம் செய்வது அவர் மீது வாஜிப் - கடமையாகும்.

ஆனால் மதீனாவின் ஹரம் எல்லைக்குள் அவ்வாறு எவரேனும் குற்றம் செய்து விட்டால் அது குற்றமாக கருதப்படுமே தவிர பரிகாரம் - நஷ்டஈடு செய்ய வேண்டிய வாஜிப் - அவசியம் இல்லை.

## மிம்பர் படி

நபி (ஸல்) அவர்கள் ஜும்ஆ உடைய நாளில் ஒரு மிம்பா படி மீது ஏறி நின்று உரை நிகழ்த்துவார்கள்.

பின்னர் உயர்தரமான மரத்தில் புதிய மிம்பர் படி தயார் செய்யப்பட்டு வந்ததும் பழைய மிம்பர்படி ஓரம் கட்டப்பட்டது.

இந்நிலையில் நபி (ஸல்) அவர்கள் புதிய மிம்பர் படி மீது ஏறி உரை நிகழ்த்தத் தொடங்கியதும் பழைய மிம்பர் படி அழத்தொடங்கியது.

அங்கே கூடியிருந்த அனைத்து நபித்தோழர்களும் அதன் அழுகுரலை கேட்டார்கள். பேரீத்தம் மரத்தினால் செய்யப்பட்ட பழைய மிம்பர் படி தேம்பித் தேம்பி அழுதது.

நபி (ஸல்) அவர்கள் கீழே இறங்கி வந்து அதன் மீது கைகளை வைத்து தடவிக் கொடுத்த பிறகு அது அழுவதை நிறுத்திக் கொண்டது.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் அதனை பள்ளிவாசலுக்கு உள்புறத்திலேயே புதைத்து விடும்படி கூறினார்கள். அது அங்கேயே புதைக்கப்பட்டது.

ஹள்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

**“மனிதர்களே! நபி (ஸல்) அவர்கள் மீது ஒரு பேரீத்த மரக் கட்டை இவ்வளவு அன்பு வைத்திருக்கிறது என்றால், நீங்கள் இதைவிட அதிகமான அன்பு வைத்திருக்க கடமைப் பட்டவர்கள் இல்லையா?”**

(நூல் : அஷ்ஷிஃபா)

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேரருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்®

LALPET

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 08-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 23-08-2024 | வெள்ளி | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

உம்ரா விசா, தனிநபர் மற்றும் குரூப் விசா, விசிட்டிங் விசா, துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் விமான டிக்கெட் எடுத்து தரப்படும். பஸ், ட்ரெயின் டிக்கெட் மற்றும் தூதரக சேவைகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு செல்: 9994254304

# வரலாற்றில் ஓர் நாள்

வரலாற்றில் ஒரு நாள்

'தாதுர் ரிகாஃ' என்ற இடத்தில் நபி (ஸல்) அவர்களுடன் தோழர்கள் இருந்தார்கள். ஒரு நிழல் தரும் மரத்தை நபி (ஸல்) அவர்களுக்காக ஒதுக்கிவிட்டு தோழர்கள் வேறிடம் சென்றார் கள். அப்போது இணை வைப்போரில் ஒருவன் அங்கே வந்தான்.

நபி (ஸல்) அவர்களின் வாள் மரத்தில் தொங்க விடப்பட்டிருந்தது. அதை அவன் எடுத்துக் கொண்டான்.

"என்ன நீர் பயப்படுகின்றீரா?" என்று அவன் கேட்க,

"இல்லை!" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"என்னிடமிருந்து உம்மைக் காப்பாற்றுவது யார்?" என்று அவன் கேட்க,

"அல்லாஹ்!" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

அவன் கையிலிருந்து வாள் நழுவி கீழே விழுந்து விட்டது. உடனே நபி (ஸல்) அவர்கள் அந்த வாளை எடுத்தார்கள்.

"என்னிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவது யார்?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்க,

"கையில் (வாளை) எடுத்தவரில் சிறந்தவராக இருந்து கொள்ளும்" என்று அவன் கூறினான்.

"அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. நான் இறைத்தூதர் என்று சாட்சி கூறு" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

"முடியாது. எனினும் உம்மிடம் போர் புரியமாட்டேன். உம்மிடம் போர் புரிவோர்களுடன் சேரமாட்டேன் என உறுதி கூறுகிறேன்" என்று அவன் கூறினான்.

அவன் வழியில் செல்ல நபி (ஸல்) அவர்கள் அவனை அனுமதித்தார்கள்.

அவன் தன் தோழர்களிடம் வந்து, "மனிதர்களில் சிறந்தவரிடமிருந்து உங்களிடம் வந்துள்ளேன்" என்றான்.

ஆதாரம் : ரியாளுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் எண் - 78
முஸ்லிம் - 843

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# நாமும், நாயும்

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

இறைவனின் படைப்பில், நாயும் இடம் பெற்றுள்ளது. நாய் பற்றிய சில செய்திகள் திரு குர்ஆனிலும், நபி மொழி களிலும் காணப்படுகின்றன. அண்மையில் நாய் பற்றிய செய்திகள் நாளிதழ்களில் வெளிவந்து கொண்டிருந்தன. 2 வளர்ப்பு நாய்கள், ஒரு 5 வயது சிறுமியை கடித்துக் குதறிய செய்தியே அது.

மனிதர்களை அண்டி வாழும் பிராணிகளில் நாயும் ஒன்று. அதைப் பராமரிப்பவர் களிடம் அன்பு காட்டும். நன்றி உணர்வை வெளிப்படுத்தும்.

5000 ஆண்டுகளுக்கு முன்னரே ஓவியங்களில் இடம் பெற்றுள்ளது.

முற்காலத்தில் பல நாய் இனங்கள் இருந்த போதிலும், இப்போது 225 இனங்கள் இருப்ப தாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

அளவு, வடிவம், உரோமம், நிறம் ஆகியவற்றில் வேறுபடும். 'ஐரிஷ் உல்ஃப்' என்ற வகை 1 மீட்டர் உயரம்; 'இம்பீரியல் ஷியன்' என்ற வகை 10 செ.மீ உயரமுள்ள குட்டையானவை; 'மெக்சிகோவின் ஹாட்டாக்' வகையில் உடம்பில் உரோமம் இருக்காது. 'கிளை டெஸ்டேல்' வகை 30 செ.மீ நீளம், உரோமம் கொண்டவை; துருவப்பகுதி நாய்கள் வண்டி இழுக்கும். 'செயின்டு பெர்னார்டு' வகை 140 கிலோ எடை கொண்டவை.

அறிவும், மோப்பத் திறனும் கொண்டது நாய். ஆகவே, ஆறு மாதக் குட்டியாக இருக்கும்போதே பயிற்சி அளித்து காவல்துறைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

நாய்கள் 4 முதல் 22 குட்டி கள் வரை ஈன்றெடுக்கும். சீனாவில் ஒரு வகை நாய் தாவர உணவை மட்டுமே உண்ணுகிறதாம்.

நாயின் நன்றி உணர்வைக் கருத்தில் கொண்டு, பழகப் பழக நாயினை அதிகமாக நேசிக்கிறேன் என்கிறார் ஓர் அறிஞர். மோப்ப உணர்வினால், எதிரிகள் வருகையை எளிதில் அறிய, நாயானது படுப்பதற்கு முன்னர் சுற்றி வந்து, காற்று வரும் திசையை அறிந்து அதற்

கெதிராகத் தன் முகத்தினை வைத்துப்படுக்கும்.

## நாய் பற்றித் திருமறையும் நபிமொழியும்

நாயின் குணம் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

**"நீங்கள் அதனைத் துரத்தினாலும் நாக்கை தொங்க விட்டுக் கொள்கிறது. அதனைத் துரத்தாது விட்டு விட்டாலும் நாக்கைத் தொங்க விட்டுக் கொள்கிறது."**

-அல்குர்ஆன் (7 : 176)

குகைத் தோழர்களுடன் இருந்த நாய் பற்றி **"அவர்களின் நாய் [குகை] வாயிலில் தன் முன்னங்கால்கள் இரண்டையும் விரித்[துக் கொண்டு அமர்ந்]திருந்தது."**

- அல்குர்ஆன் (18 : 18)

அல் கஹ்ஃபு - குகை (18 வது அத்தியாயம்) குகைத் தோழர்களுடன் ஒரு நாயும் இருந்துள்ள வரலாற்றை கூறுகிறது.

இத்திருவசனம் பற்றி விளக்கமளித்த ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள், "அந்தக் குகை வாயிலில் அவர்களைக் காவல் காப்பது போல் மண்டியிட்டு அமர்வது நாயின் பழக்கமாகவும் வாடிக்கையாகவும் இருந்தது. இருப்பினும் அது வாயிலுக்கு வெளிப்பகுதியில் தான் அமர்ந்திருந்தது. ஏனெனில் நாய் இருக்கின்ற வீட்டில் வானவர்கள் நுழைவதில்லை." என்று கூறினர்.

குகைவாசிகளுக்குக் கிடைத்து வந்த அந்த இறையருள், அவர்களுடன் இருந்த நாய்க்கும் சேர்த்து கிடைத்தது. இது நல்லோர்களின் சகவாசத்தின் பலன் எனலாம். ஆம், வரலாற்றில் இடம் பெறுகின்ற தகுதியை அந்த நாயும் பெற்று விட்டது. இந்த நாய் குகைவாசிகளில் ஒருவருடைய வேட்டை நாயாகும் என்று சொல்லப்படுகிறது. அரசனுடைய சமையல்காரரின் நாய்தான் அது என்றும், சமையல்காரரும் குகைவாசிகளில் ஒருவராக இருந்ததால் அவரோடு சேர்ந்து அந்த நாயும் வந்துவிட்டது என்றும் கூறுகிறார்கள். அல்லாஹ்வே நன்கறிவான்.

(தஃப்சீர் இப்னு கஸீர் பாகம் 5 பக்கம் 401)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"நாயும் [உயிரினங்களின் சிலைகள் அல்லது] உருவப்படங்களும் உள்ள வீட்டினுள் [இறைவனின் கருணையைக் கொண்டு வரும்] வானவர்கள் நுழைய மாட்டார்கள்."**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதல்ஹா (ரளி) அவர்கள்
ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி - 3225)

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

# N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

---

சுப முகூர்த்தப் பட்டுகளுக்கு...

SILK MARK

மக்களின் பாராட்டில் ... மயிலாடுதுறை சீமாட்டி ...

# சீமாட்டி

பட்டு - ஜவுளி - ரெடிமேட்ஸ்

மயிலாடுதுறை. ☎: 222587

: seemattiali@gmail.com
: +91 80564 02677

1445 ஆண்டுகளுக்கு முன்னரே, நபி (ஸல்) அவர்கள் நாயினால் விளையும் தீமைகளைப் பற்றி எச்சரித்துள்ளார்கள்.

நாயின் உமிழ் நீரிலிருந்து, நோய்கள் பரவலாம். அது அசுத்தமானது (நஜீஸ்).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"நாய் வாய் வைத்து விட்ட உங்களது பாத்திரத்தைச் சுத்தம் செய்யும் முறை யாதெனில், அதை ஏழு தடவை தண்ணீரால் கழுவுவதாகும். முதல் தடவை மண்ணிட்டுக் கழுவ வேண்டும்."**

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள், (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம் - 471).

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அல்முகஃப்பல் ரளி) அவர்கள் கூறியதாவது:

**"அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் (ஆரம்பத்தில்) நாய்களைக் கொல்லுமாறு உத்தரவிட்டார்கள். பின்னர் மக்களுக்கும், நாய்களுக்கும் என்ன நேர்ந்தது (அவர்கள் நாய்களை ஏன் கொல்ல வேண்டும்?) என்று கேட்டார்கள். பின்னர் வேட்டை நாய்களுக்கும், கால்நடைகளின் பாதுகாப்பிற்காக வைத்திருக்கும் நாய்களுக்கும் அனுமதியளித்தார்கள். மேலும் பாத்திரத்தில் நாய் வாய் வைத்துவிட்டால் ஏழு தடவை (தண்ணீரால்) கழுவிக் கொள்ளுங்கள். எட்டாவது தடவை மண்ணிட்டுக் கழுவுங்கள் என்று கூறினார்கள்."**

(ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம் - 473)

ஹள்ரத் யஹ்யா பின் சயீத் (ரளி) அவர்கள் கூறினர்; "கால்நடைகளின் பாதுகாப்பிற்காக, வேட்டையாடுவதற்காக, விவசாயப் பண்ணைகளைப் பாதுகாப்பதற்காக வைத்திருக்கும் நாய்களுக்கு அனுமதியளித்தார்கள்."

(ஸஹீஹ் முஸ்லிம்)

## சிறுமியை நாய்கள் கடித்தன

சென்னை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை 4வது லேன் பகுதியில், மாநகராட்சிப் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த ஐந்து வயது சிறுமி சுரக்ஷாவை இரண்டு நாய்கள் கடித்து குதறி விட்டன. இச்செய்தி அனைவரையும், அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. ரகு என்பவர், பூங்காவின் காவலாளி. பராமரிப்புப்பணியையும் செய்து வருகிறார். இவர், தமது மனைவி சோனியா, மகள் சுரக்ஷாவுடன் பூங்காவில் ஒரு சிறிய அறையில் தங்கியுள்ளார். இவர் மே 5ஆம் தேதி, சொந்த ஊரான விழுப்புரத்திற்கு சென்றிருந்தார். அப்பொழுது, பூங்கா அருகில் வசித்து வரும் புகழேந்தி என்பவரின் இரண்டு

வளர்ப்பு நாய்கள், பூங்காவிற்குள் நுழைந்து, அங்கு விளையாடிக் கொண்டிருந்த சுரக்ஷாவை கடித்து குதறி விட்டன. கை, கால், உடல் முழுவதும் கடித்துவிட்டன. இரத்தம் கொட்டும் சிறுமியின் அலறல் கேட்டு, குழந்தையைக் காப்பாற்ற வந்த தாய் சோனியாவையும் வெறி நாய்கள் தாக்கி, காயப்படுத்தின. இருவரின் அலறல் சப்தம் கேட்டு, அப்பகுதி மக்கள் வந்து நாய்களை விரட்டினர். சிறுமி சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். ஆயிரம் விளக்குப் பகுதியில் தனியார் மருத்துவமனையில் சுரக்ஷா சிகிச்சை பெற்று வருகிறார். தகவல் அறிந்து, சம்பவ இடத்திற்கு வந்த போலீஸார் நாய்களின் உரிமையாளர் புகழேந்தியை விசாரித்தனர். பின்னர், அவர் மீதும், மனைவி தனலட்சுமி, மகன் டாக்டர் வெங்கடேஷன் ஆகிய மூன்று பேர் மீதும் வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்பட்டனர்.

இது பற்றி போலீஸார் தரப்பில் கூறும்போது, புகழேந்தியின் வீட்டு மெயின் கதவு திறந்திருந்ததால் வீட்டிலிருந்து வெளியேறிய நாய்கள் அருகிலிருந்த பூங்காவுக்குள் நுழைந்து, விளையாடிக் கொண்டிருந்த சிறுமியைக் கடித்துள்ளதாகவிளக்கம் அளித்துள்ளனர். இதற்கிடையில் கைது செய்யப்பட்டவர்கள் மூவரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். சிறுமி உடல் நலம் தேறும்வரை, உரிய செலவைக் கொடுப்பதாக, போலீஸாரிடம் புகழேந்தி உறுதி அளித்துள்ளார். சிறுமியைக் கடித்த நாய்களைப் பிடித்து செல்லுவதற்கு மாநகராட்சிக்கு போலீஸார் பரிந்துரை செய்துள்ளனர்.

சிறுமியைக் கடித்த, 2 நாய்களும், ஜெர்மனியைச் சேர்ந்த 'ராட்வைலர்' என்ற வகை நாய்களாகும். இவற்றை வீட்டில் வளர்ப்பது கடினம். முறையாகப் பயிற்றுவிக்க வேண்டும். ராட்வைலர் உள்ளிட்ட 23 நாய் வகைகளை இந்தியாவில் வளர்க்கத் தடை செய்யப்பட்டுள்ளது.

வீட்டிற்கு வருவோரையோ, வெளியிலோ யாரைக் கடித்தாலும் நாயின் உரிமையாளரே பொறுப்பு. அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்படும். 6 மாதம் வரை சிறை தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கச் சட்டத்தில் இடம் உள்ளது.

மதுரை மாநகராட்சியில், நாய்களை வளர்க்க ஆண்டு தோறும் உரிமம் (லைசென்ஸ்) பெற வேண்டும். மாடுகள் – ரூ100; கன்றுகள் ரூ50; குதிரை – ரூ150; கழுதை-ரூ150; நாய்கள் –ரூ100; பன்றி-ரூ100; செலுத்தி உரிமம் பெற வேண்டும் என்று தீர்மானம்

நிறைவேற்றப்பட்டுள்ளது. மிக விரைவில் இத்தீர்மானம் நடைமுறைபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரேபிஸ் (Rabies)

இக்கடுமையான நோய் விலங்குகள் குறிப்பாக நாய்கள் கடிப்பதன் மூலம், அவற்றின் உமிழ் நீரிலிருந்து நோய்க் கிருமிகள் மனிதனுக்குப் பரவுகின்றன. 'லிஸ்ஸா வைரஸ் டைப்1' (Lyssa Virus Type 1) என்ற வைரஸ் கிருமிகள் ரேபிஸ் நோயை தோற்றுவிக்கின்றன. இந்த வைரஸ் கிருமிகள் 'Single Stranded RNA Virus' என்று அழைக்கப்படுகின்றன.

இந்நோய் இந்தியாவிலும், ஆப்ரிக்க நாடுகளிலும் அதிகம் (80% சதவிகிதம்) காணப்படுகிறது.

இந்தியாவில், இலட்சத்தீவு, அந்தமான், நிக்கோபார் ஆகிய பகுதிகளில் இந்நோய் அறவே காணப்படுவதில்லை. மாலத்தீவிலும் இந்நோய் காணப்படுவதில்லை.

குரங்கு, குதிரை, நரி, பசு, எருமை, கழுதை, பன்றி, ஆடு, ஒட்டகம், யானை, கரடி முதலிய விலங்குகளிலிருந்து நோய் வைரஸ் பரவலாம். ரேபிஸ் தாக்கப்பட்டுள்ள நாய் கடிக்கும் போது, வைரஸ் நோய்க்கிருமிகள், நாயின் உமிழ் நீரிலிருந்து, கடிக்கப்பட்டவர் உடலினுள் சென்று விடுகின்றன. அவ்விடத்தில் கிருமிகளின் பெருக்கம் ஏற்படும். அவ்விடத்திலிருந்து நரம்புகள் மூலம் வைரஸ் கிருமிகள் மூளையைச் சென்றடைந்து விடுகின்றன.

இப்பொழுது மூளையும், முதுகுத்தண்டுவடமும் பாதிக்கப்பட்டு வீங்கி விடுகின்றஆபத்தானநிலை (Encephalornyelitis) தோன்றி விடுகிறது.

மூளையிலிருந்து வைரஸ் கிருமிகள் உமிழ் நீர் சுரப்பிகள், உடல்தசைகள், அட்ரினல்சுரப்புகள், சருமம்முதலிய உடலுறுப்புகளை வந்தடைகின்றன. நோய்க் குறிகள் 3 முதல் 6 வாரத்திற்குள் தோன்றும். அவை :

காய்ச்சல், மனநிலை பாதிப்பு, கண் பார்வை, தலைவலி, (Pupil) விரிதல், அதிகமாக உமிழ்நீர் சுரத்தல், அதிக வியர்வை, கண்ணீர் வடிதல், உடல் வலி, நாய் கடித்த இடத்தில் ஊசி குத்தும் உணர்வு, (Tingling) தண்ணீரைக் கண்டாலும், காற்று உடலில் பட்டாலும், (Hydrophobia, மற்றும் Aerophobia) பயம்தோன்றும்.

இவை இந்நோயின் முக்கிய அறிகுறிகள்; இது மனிதனிடம் மட்டும் தான் காணப்படும். ரேபிஸ் தாக்கப்பட்ட பிராணிகளில் தோன்றுவதில்லை.

தண்ணீர் அருந்தினாலும், காற்று வீசும் போதும், நோய் அறிகுறிகள் மிகைக்கத் தொடங்கும். நோய் தொடங்கி

72 மணி நேரத்தில் மரணம் ஏற்பட்டு விடும்.

ரேபிஸ் நோய் தாக்கப்பட்ட நாய் 10 நாட்களுக்குள் இறந்து விடும்.

### நோய்த்தடுப்பு முறை

வளர்ப்பு நாய் மற்றும் ரேபிஸ் தாக்கப்பட்ட நாய் (வெறிநாய்) கடித்தவுடன், நோய்த்தடுப்பு மருந்தை ஊசி மூலம், உடலில் செலுத்திக் கொள்வது அவசியம்.

**மருந்து :-**

(HDCV - 1ml. (Human Diploid Cell Vaccine - 1 ml)

ஊசி செலுத்தப்படும் இடம், தோள் பட்டையின் புறப் பகுதி. டெல்டாய்டு தசை (Deltoid) ஏனெனில், இவ்விடத்தில் மருந்து விரைவில் உறிஞ்சப்படும்.

இடுப்பை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவ்விடத்தில் மருந்து உறிஞ்சப்படுவது தாமதமாகும்.

ஐந்து முறை ஊசி மூலம் மருந்துசெலுத்தப்பட வேண்டும்.

முதல் நாள்; 3ஆம் நாள்; 7ஆம் நாள்; 14ஆம் நாள்; 28ஆம் நாள்; 90ஆம் நாள் ஊசி, மருந்தின் திறனை அதிகரிக்கச் செய்யும். (Booster Dose).

இம்மருந்து 1960ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்


மக்களின் சேவையில் 18 ஆண்டுகள் !
நம்பிக்கையோடு வாருங்கள் !!
இன்ஷா அல்லாஹ் சுகம் பெறுவீர்கள் !!!

Rx

சன் மெடிக்கல்ஸ்

SUN MEDICALS

1/180-A, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில்,
திருப்பூர் ரோடு, **மங்கலம் - 641663.** திருப்பூர் மாவட்டம்.

9865261670

டது. நாய் கடியால் உயிரிழந்த முதல் மனிதர் 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

இந்தியாவில் வெள்ளையர்களின் வருகைக்குப் பின்பு தான், வீட்டில் நாய் வளர்க்கும் பழக்கம் தோன்றியது.

மண்ணில் புரள்வதும், தான் கக்கியதை தானே உண்பதும், நாயிடம் காணப்படுன்ற அசுத்த மான பழக்கங்களாகும். 'நாயே' என்று திட்டுவதன் மூலம் நாயின் இழிந்தநிலை தெரிகிறது!

இமாம் அபூ யஜீதுல் புஸ்தாமீ (ரஹ்) அவர்கள், தமது மாணவர்களுடன் தெருவில் செல்லும் போது, ஒரு நாய் அவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றது.

இமாம் அவர்கள், மாணவர்களிடம் கூறினார்கள் : "இந்த நாய் என்ன சொல்கிறது என்று தெரியுமா?" "ஓ மனிதனே! உன்னை அல்லாஹ் மனிதனாகப் படைத்துள்ளான். என்னை நாயாகப் படைத்துள்ளான். அவ்வளவே! ஆகவே, உன்னை நீ உயர்வாக எண்ணிக் கொள்ளாதே" என்று கூறுகிறது!

## துணை நூற்கள்


1. சங்கைமிகு குர்ஆன், சிறப்புமிகு தமிழாக்கம் - அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி ஹஜ்ரத் அவர்கள். தாருல்ஹுதா வெளியீடு, சென்னை-1
2. திருகுர்ஆன் விரிவுரை தஃப்சீர் இப்னு கஸீர், தமிழாக்கம். வெளியீடு - ரஹ்மத் பதிப்பகம், ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம், மைலாப்பூர், சென்னை-4
3. அல் அஃலா- மிக்க மேலானவன் - பேரா.கா. அப்துல் கஃபூர் சாஹிபு (ரஹ்) அவர்கள், பொன்மொழி பதிப்பகம், 14-69, மேட்டுக்கடை, தக்கலை. குமரி மாவட்டம் - 629175.
4. (Rabies, - SRB's Manual of Surgery, Dr. Sri Ram Bhat, Published by Jaypee Publishers, Manipal, Karnataka.
5. வெறி நாய்களை என்ன செய்வது? - பழ.அதியமான், இந்து தமிழ் திசை, மதுரை 20.5.2024.


## "இஸ்திக்ஃபார்"

"எவருடைய பட்டோலையில் அதிகமாக இஸ்திக்ஃபார் இடம்பெற்றுள்ளதோ அவருக்கு (சுபசோபனம் ) நற்செய்தி உண்டாவதாக" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் புஸ்ர் (ரளி) அவர்கள்

(நூல் : இப்னு மாஜா – 3818)

# மார்க்கக் கலாசாலையின் கட்டம் உருவாக நிதியுதவி செய்யுங்கள்!

"அஸ்அதுல்மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலி ஹள்ரத் (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்ட "அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" அரபு கல்லூரி தென் தமிழகத்தின் மார்க்கக் கலாசாலையின் மணி மகுடமாக திகழ்ந்து, கடந்த 40 வருடங்களாக மார்க்கக் கல்வி சேவையில் தனி முத்திரை பதித்து வருகிறது. நம் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆலிம்களும், ஹாஃபிழ் களும் உலகெங்கும் பரவி தீன் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், இறையருளால் நம் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை துவங்கியுள்ளோம். நம் கல்லூரி கட்டடம் முழுமை பெற **சுமார் 4½ கோடி செலவாகும்** என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. எனவே, தீன் பயிர் தழைத்தோங்க ஆணிவேராக உள்ள நம் கல்லூரியின் கட்டடம் நிறைவுபெற தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். கல்லூரிக்கு பணமாகவோ அல்லது கல்லூரி கட்டடத்திற்கு தேவையான கம்பி, ஜல்லி, மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றையோ தாராளமாக வழங்க வேண்டுகிறோம்.

வங்கி விபரம் :

**Name:** AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST
**INDIAN BANK** : A/c. No. 429079510
**BRANCH** : Madurai KARUPPAYURANI
**IFSC Code** : IDIB000K136

பணம் அனுப்பிய விபரத்தை கீழ்வரும் செல் நம்பருக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் அனுப்பி வையுங்கள்.

# J.M.S.ARABIC COLLEGE

Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,
MADURAI - 625020.

தலைவர் 94430 66539
செயலாளர் 97900 64365
பொருளாளர் 99948 57786

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM
## *Travel & Tours India (p) Ltd*
**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,
**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

''நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்.''

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவர்களுக்காக மதரஸா மற்றும் பள்ளிவாசலின் கட்டுமானம்

## மதரஸா-யே-இம்தாதியா மற்றும் அல்-மஸ்ஜிதுல் ஜமீல்

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவர் தங்களுடைய இடத்தை நமது மதரஸாவிற்காக வக்ஃப் செய்தார்கள். இந்த இடத்தின் மொத்த பரப்பளவு 4275 சதுர அடி ஆகும். இதில் நபி (ஸல்) அவர்களின் விருந்தினர்களான பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவர்கள் சகல வசதிகளுடன் தீனுடைய கல்வியை பெறும் வகையில் பள்ளிவாசல், வகுப்பறைகள், நூலகம், விடுதி, விருந்தினர் அறை மற்றும் கழிப்பறைகள் ஆகியவை இரண்டு தளங்களில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒரு சதுர அடியின் கட்டுமான செலவு ரூ.1500/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

எனவே, தாங்கள் அனைவரும் தங்களின் சார்பாகவும், குறிப்பாக, மறைந்த தங்கள் குடும்பத்தினரின் நன்மைக்காகவும் ஸதகத்துல் ஜாரியாவாக இந்த நற்செயலில் அதிக அளவில் பங்கு எடுத்துக் கொள்ளுங்கள். مَنْ بَنَى لِلّٰهِ مَسْجِدًا بَنَى اللّٰهُ لَهُ فِي الْجَنَّةِ مِثْلَهُ

அல்லாஹ்வின் திருப்தியை நாடி பள்ளிவாசலைக் கட்டுகிறவருக்கு அது போன்ற ஒன்றைச் சுவர்க்கத்தில் அவருக்காக அல்லாஹ் கட்டுகிறான் என நபி (ஸல்) கூறினார்கள். (ஹதீஸ்).

மூன்று செயல்களின் நன்மை ஒருபோதும் முடிவுக்கு வராது. அவற்றில் ஒன்று, பள்ளிவாசல், மதரஸா போன்றவற்றை எழுப்பி, அவற்றை நிரந்தரமாக தர்மமாக வழங்குவது. (ஹதீஸ்)

⚠ தயவு செய்து ஜகாத் தொகையை இதில் செலுத்த வேண்டாம்

**Name : Imdadiya Educational and Charitable Trust**
**A/C No : 6288904753**
**IFSC : IDIB000M139**
**Branch : Melvisharam 1312**
**UPI Id : imdadiya@indianbnk**

Indian Bank

SCAN & PAY

Donation's are Eligible for Deduction U/s. 80G of Income Tax Act. 1961
Vide U.R.No. AABTI2052FF20241 Dated: 09/02/2024

**Donate Us**
**Per Sq.Ft Rs.1500**

8000 x 1500 1,20,00,000

**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**
539, Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N)-632509
Contact : +91-9952120340

# இஸ்லாம் கூறும் கனவின் தாத்பரியம்

தொகுப்பு : செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை

அல்லாஹுதஆலா இப்பிரபஞ்சத்தில் எண்ணிலடங்கா உயிரினங்களை படைத்து, பின்னர் அல்லாஹ் மனிதனைப் படைப்பில் சிறந்தவனாகவும், பூமியில் தன் பிரதிநிதித்துவத்தின் உரிமையாளனாகவும் ஆக்கினான்.

எந்தப் படைப்பிற்கும் கிடைக்காத பல பாக்கியங்களை அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ளான். இந்த அருட்கொடைகளில் ஒன்றுதான் கனவு.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை என்னவென்றால், கனவுக்கென்று ஒரு தாத்பரியம் உண்டு.

ஆனால், நபிமார்களின் கனவைப் போல மற்றவர்களின் கனவு ஷரீஅத்தின் ஆதாரமாக ஆகாது. அதனை நபித்துவத்தின் பரக்கத் என்றோ அல்லது வஹீயின் நற்செய்தி என்றோ கூறலாம்.

முஃமினுக்கு கனவு என்பது ஒரு நல்ல செய்தி, சுபச்சோபனமாகும்.

சில நேரங்களில் கனவு எதிர்காலத்தில் நடக்கும் ஒரு நிகழ்வைப் பற்றி தெரிவிக்கலாம்.

திருமறையில் சூரா யூசுஃபில் ஹள்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் காணும் கனவைப் போல...

**'யூஸுஃப், தம் தந்தையாரிடம் "என் அருமைத் தந்தையே! பதினோரு நட்சத்திரங்களும், சூரியனும், சந்திரனும் (இவையாவும்) எனக்கு சிரம் பணிவதை மெய்யாகவே (கனவில்) நான் கண்டேன்" என்று கூறியபொழுது...'**

– அல்குர்ஆன் (12 : 4)

அறிஞர் பெருமக்களின் கருத்து : கனவு உறுதியாக நம்பத் தகுந்ததல்ல. காரணம் கனவு என்பதே அனுமானமானது.

நமது எண்ணங்கள், கவலைகள், சூழ்நிலைகள், போக்குகள் காரணமாக பல கனவுகள் நமக்குத் தோன்றுகின்றன. அவற்றில் பலவற்றில் அர்த்தமே இருக்காது.

1) கனவை கண்டவர் பொய் சொல்லலாம்.
2) கனவு தெளிவில்லாமல் மூடலாக இருக்கலாம்.
3) கனவுக்கு விளக்கம் கேட்கப்படுபவர், தகுதியில்லாதவராக இருக்கலாம்.

4) கனவுக்கு விளக்கம் தருபவர் தகுதியானவராக இருந்தாலும், அவரும் சில சமயங்களில் தவறான விளக்கம் தர வாய்ப்புள்ளது.

கனவுக்கு விளக்கம் தருபவரின் தகுதி என்ன?

கல்விமானாகவும், உண்மையாளராகவும், கனவின் விளக்கம் அறிந்தவராகவும் இருப்பதாகும்.

இறை விசுவாசிகளுக்கு சில நேரங்களில் இடையூறு விளைவிக்க சில கனவுகளும் ஷைத்தான்களால் ஏற்படுகின்றன.

கனவின் வகைகள் அறிஞர் பெருமக்களின் கூற்றுப்படி :

நான்கு வகையான கனவுகள் உள்ளன.

**1. மேலோங்கும் எண்ணம் :**

ஒருவன் அதிகமாக ஈடுபடும் அலுவல்களும், சூழல்களும் அவன் உள்ளத்தில் ஒரு தாக்கத்தை உண்டாக்கி, அவன் உறங்கும்போது புலன்கள் அனைத்தும் ஓய்வு கொள்ளும் போது இதயத்தில் மேலோங்கிய எண்ணங்களும், நினைவுகளின் கற்பனை வடிவமாக மனிதர்களின் ஆழ்மனதில் இருக்கும் நினைவுகளும் கனவுகளாக வெளிப்படும். இதற்கு மேலோங்கும் எண்ணம் எனப்படும்.

**2. ஷைத்தானின் தூண்டுதலால் உண்டாகும் கனவு :**

மனித குல விரோதியான ஷைத்தான் மனிதனை பயமுறுத்த கனவில் அவனுடன் விளையாடுவான். இத்தீய கனவுகள் மனிதனுக்கு தீங்கு விளைவிக்காது. ஆனால் ஒரே நிபந்தனை அதை யாரிடமும் சொல்லக் கூடாது என்பது நபி (ஸல்) அவர்களின் கட்டளை. அத்தகைய தீய கனவை நீங்கள் கண்டால், அதற்கான தீர்வு ஹதீஸில் உள்ளது.

**நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "உங்களில் ஒருவர் தமக்கு விருப்பமான கனவொன்றைக் கண்டால் அது அல்லாஹ்விடமிருந்தே வந்தது [என்று தெரிந்து] அதற்காக அவர் அல்லாஹ்வைப் போற்றட்டும். அதை [தமக்கு விருப்பமானவர்களிடம் மட்டும்] தெரிவிக்கட்டும். அதற்கு மாறாக தமக்கு விருப்பமில்லாத கனவு கண்டால் அது ஷைத்தானிடமிருந்தே வந்தது [என அறிந்து] அதன் தீங்கிலிருந்து [அல்லாஹ்விடம்] பாதுகாப்புக் கோரட்டும். ஏனெனில், அப்போது அக்கனவு அவருக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திட முடியாது.**

இதை ஹள்ரத் அபூ சயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

### 3. நல்ல கனவு :

இது அல்லாஹ்வின் புறத்திலிருந்து அடியானுக்கு கிடைக்கும் ஒரு நற்செய்தியாகும்.

இது கடந்த கால, நிகழ் கால, எதிர் கால இவற்றில் மறைவானதை காட்டுகிறது. ஆனால், இதற்கான விளக்கம் விளங்குவதற்கு எளிதாகவோ அல்லது சிரமமாகவோ இருக்கலாம். எனவே கனவின் விளக்கம் சொல்பவரிடம் கேட்டு தெரிந்து கொள்வது சிறந்ததாகும்.

### 4. அல்லாஹுதஆலா நேரடியாகவே கனவில் ஒரு விஷயத்தை வெளிப்படுத்தி காட்டி விடுவதாகும்.

இது தெளிவானதாகவும், விளக்கத்தின் தேவையற்றதாகவும் இருக்கும்.

இறைதூதுவர்களான நபிமார்களின் கனவுகள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

நபிமார்களின் கனவு அல்லாஹ்விடமிருந்து இறக்கியருளப்பட்ட தூதுச் செய்தியேயாகும். அதிலிருந்து பெறப்படும் செய்தி சந்தேகத்திற்கு இடமில்லாமல் உறுதியானதாகும்.

நபிமார்களின் கனவும் வஹீயின் ஒரு வகையே...

நபி (ஸல்) அவர்களுக்கு வந்த வஹீ (இறைச்செய்தி) தூக்கத்தில் தோன்றும் நல்ல கனவுகளாகவே ஆரம்பத்தில் இருந்தது. அவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அதிகாலையின் விடியலைப் போன்று அவை தெளிவாக அப்படியே நடக்கும். பின்னர் தனிமையை விரும்பினார்கள். ஹிரா குகையில் தனித்திருந்து பல இரவுகள் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். பிறகு தனது குடும்பத்தாரிடம் திரும்பி வருவார்கள். இதற்காக உணவையும் தம்மோடு எடுத்துச் செல்வார்கள். உணவு தீர்ந்தவுடன் ஹள்ரத் கதீஜா (ரளி) அவர்களிடம் வந்து மீண்டும் உணவை எடுத்துச் செல்வார்கள். இந்த நிலையில்தான் ஹிரா குகையில் அவர்களுக்கு வஹீ வந்தது. வானவர் நபியவர்களிடம் வந்து, "ஓதுவீராக" என்றார்கள். அதற்கவர்கள் "நான் ஓதத் தெரிந்தவனில்லையே" என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் இந்நிலையைப் பற்றி பின்வருமாறு விவரித்தார்கள். பிறகு அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவுக்கு இறுகக் கட்டியணைத்தார். பிறகு என்னை விட்டு விட்டு "ஓதுவீராக!" என்றார். (அப்போதும்) "நான் ஓதத் தெரிந்தவனில்லையே!" என்றேன். மீண்டும் என்னை இறுக்கட்டியணைத்துவிட்டு "ஓதுவீராக!" என்றார். (அப்போதும்) "நான் ஓதத் தெரிந்த

வனில்லையே!" என்றேன். அவர் என்னைப் பிடித்து மூன்றாவது முறையும் கட்டியணைத்துவிட்டு,

நபியே! நீங்கள் யாவையும் படைத்த உம்முடைய இரட்சகனின் திருப்பெயரால் ஓதுங்கள்! அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். நீர் ஓதும். உங்களது இறைவன் தான் மகாப் பெரும் கொடையாளி. அவன்தான் எழுதுகோலைக் கொண்டு [எழுதக்] கற்றுக் கொடுத்தான். அன்றி மனிதன் அறியாதவற்றை எல்லாம் அவனுக்கு கற்றுக் கொடுக்கிறான். [அல்குர்ஆன் 96 : 1 – 5] என்ற வசனங்களை ஓதிக் காட்டினார்கள்.

## நபி இப்ராஹீம் (அலை) அவர்கள்

பின் [அம்மகன்] அவருடன் நடமாடக்கூடிய[வயதை அடைந்த] போது அவர் கூறினார்: "என் அருமை மகனே! நான் உன்னை அறுத்து பலியிடுவதாக நிச்சயமாக கனவு கண்டேன். இதைப் பற்றி உம் கருத்து என்ன? என்பதைச் சிந்திப்பீராக!" [மகன்] கூறினான் : "என்னருமைத் தந்தையே! நீங்கள் ஏவியப்படியே செய்யுங்கள். அல்லாஹ் நாடினால் என்னை பொறுமையாளர்களில் நின்றுமுள்ளவனாகவே காண்பீர்கள்."

– அல்குர்ஆன் (37 : 102)

கனவை யாரிடமாவது கூறலாமா? கனவின் விளக்கத்தை எவரிடமாவது கேட்கலாமா?

கனவின் விளக்கம் கூற தகுதியானவர் : முதலில் அவர் குர்ஆன், ஹதீஸை நன்கு பயின்ற ஆலிமாக இருந்து கனவின் விளக்கம் குறித்த கலையில் தேர்ச்சிப் பெற்றவராக இருக்க வேண்டும்.

அல்லாமா முஹம்மதிப்னு ஸீரீன் (ரஹ்) அவர்கள் கனவிற்கென்று தஃஃப்ஸீருல் அஹ்லாம் என்ற தனி நூலையே எழுதியுள்ளார்கள்.

அதில் இமாம் அவர்களின் கூற்று : நல்ல கனவைக் கூட பொதுவாக யாரிடமும் சொல்லாமல் இருப்பதே சிறந்தது.

கெட்டக் கனவை அறவே யாரிடமும் கூறக் கூடாது. ஹதீஸில் வருவதைப் போல அஊது ஓதி இடது புறம் மூன்று முறை துப்பிக் கொண்டாலே அக்கனவு எந்த தீங்கையும் விளைவிக்காது.

ஆனால் நல்ல, கெட்ட எந்த கனவாக இருந்தாலும் அதனை பிறரிடம் தெரிவித்து, அதற்கு அவர் நல்ல, கெட்ட எந்த பலனை கூறினாலும் அது பலிக்க வாய்ப்புண்டு. எனவே எந்தக் கனவாக இருப்பினும் அதனை எவரிடமும் சொல்லாமல் இருப்பதே நல்லது.

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு

4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

சிறப்பு சிகிச்சைகள் :

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! என் தலை துண்டிக்கப் படுவதைப் போன்று கனவு கண்டேன்" அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். "உங்களில் யாரிடமாவது கனவில் ஷைத்தான் விளையாடினால் அதை மக்களுக்கு மத்தியில் சொல்ல வேண்டாம்."

## கனவின் ஒழுக்கங்கள் :

அல்லாமா இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் நல்ல, கெட்ட கனவுகளின் ஒழுக்கங்களை கூறியுள்ளார்கள்.

நல்ல கனவு கண்டால் பேண வேண்டிய ஒழுக்கங்கள் மூன்று :

1) நல்ல கனவிற்காக அல்லாஹ்வை புகழ்வது.
2) அதனால் நல்ல பலன் கிடைக்க அல்லாஹ்விடம் துஆ செய்தல்.
3) நம் நலம் விரும்புபவரிடம் கனவை சொல்வது. நம்மை வெறுப்பவரிடம் கனவை சொல்லாமல் இருப்பது.

தீய கனவு கண்டால்...

1) அக்கனவின் தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவது.
2) ஷைத்தானின் தீங்கை விட்டும் பாதுகாவல் தேடுவது.
3) தீய கனவு கண்டு தூக்கத்திலிருந்து விழித்தால் இடது புறம் மூன்று முறை துப்பிக் கொள்வது.
4) கெட்ட கனவை அறவே யாரிடமும் சொல்வதை தவிர்ப்பது.
5) இரண்டு ரக்அத் தொழுவது.

இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் நூலில் ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்களின் அறிவிப்பில், "தீய கனவு கண்டால் அதனை யாரிடமும் சொல்ல வேண்டாம். அவர் எழுந்து இரண்டு ரக்அத் தொழுது கொள்ளட்டும்" என நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

6) தீய கனவு கண்டவர் ஒருக்கணித்து படுத்திருந்தால் நிமிர்ந்து நேராக படுத்துக் கொள்ளவும்.

அல்லாமா ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் திஹ்லவி (ரஹ்) அவர்கள், நல்ல சிறந்த கனவுகளாக ஒன்பது கனவுகளை கூறியுள்ளார்கள்.

1) நம் உயிரினும் மேலான கண்மணி நாயகம் (ஸல்) அவர்களை கனவில் காண்பது.
2) சுவனத்தை கனவில் காண்பது.
3) நல்லோர்களை, நபிமார்களை கனவில் காண்பது.
4) பரக்கத் பொருந்திய புனித இடங்களை காண்பது. கஅபதுல்லாஹ்வை கனவில் காணுவதைப் போல.

5) வருங்காலத்தில் நடக்கும் நிகழ்வை கனவில் காண்பது.

ஒரு பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறப்பது போல கனவு கண்டு, பின் நாட்களில் அப்பெண் ஆண் குழந்தை யைப் பெற்றெடுப்பதை போல.

6) கடந்த கால நிகழ்வுகளை கனவில் நிஜமாகப் பார்ப்பது.

ஒருவர் இறந்து விட்டதை போல கனவு கண்டு பின்னர் உண்மையிலேயே அவர் இறப்பு செய்தி வருவது.

7) நம் குறைபாட்டை தெரிவிக்கும் ஒன்றை கனவில் காண்பது.

ஒரு நாய் ஒருவரைக்கடிப்ப தாக அவர் கனவு கண்டார் என்றால் அவர் கோபமாக இருக்கிறார். அவர் கோபத்தை குறைக்க வேண்டும் என்பது அதன் விளக்கம்.

8) ஒளி, வெளிச்சம் மற்றும் ஆரோக்கியமான உணவு களான பால், தேன் மற்றும் நெய் போன்றவற்றைக் கனவில் காண்பது.

9) மலக்குமார்களை கனவில் காண்பது.

## உஹத் போர் பற்றி

இறைத் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"நான் ஒரு கனவு கண்டேன். (அதில்) நான் ஒரு வாளை அசைத்தேன். அதன் முனை முறிந்து விட்டது. உஹுதுப் போரின்போது இறை நம்பிக்கை யாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பை அது குறித்தது. பிறகு மீண்டு மொரு முறை அதை நான் அசைத்தேன். அது முன்பிருந் ததை விட மிக அழகாக மாறி விட்டது. அது அல்லாஹ் (அதே உஹுதுப் போரில்) கொணர்ந்த உறுதிப்பாட்டையும், (சிதறி ஓடிய) இறைநம்பிக்கையாளர் கள் (மீண்டும்) ஒன்று திரண்ட தையும் குறித்தது. அந்தக் கன வில் நான் சில காளை மாடு களை (அவை அறுக்கப்படுவது போல்) கண்டேன். (உஹுதுப் போரில் கொல்லப்பட்டவர் களுக்கு) அல்லாஹ் வழங்கிய அந்தஸ்து (அவர்கள் இவ்வுல கில் இருந்த நிலையைவிட அவர்களுக்குச்) சிறந்ததாகும். எனவே, (அந்த மாடுகள்) உஹுத் நாளில் கொல்லப்பட்ட இறை நம்பிக்கையாளர்களைக் குறிப்பவையாகும்" என ஹள்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரளி) அவர்கள் அறிவித்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி : 4081)

## ஸஹர் நேரம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"ஸஹர் வேளையில் காணும் கனவு உண்மையான தாகும்"** அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஸஈதுல் குத்ரீ (ரளி) அவர்கள்

ஸஹர் நேரம் என்பது பெரும் பாலும் அந்த நேரத்தில் எண்ணங்கள் ஒருமுகப் பட்டு

சிந்தனைகள் சிதறாமல் அமைதியாக இருக்கும் வேளை. மேலும் தொழுகைக்காக மலக்குமார்கள் இறங்கும் நேரம், துஆகள் கபூலாகும் நேரம் என்பதால் ஸஹர் நேரக் கனவு நல்ல உண்மையான கனவாகும்.

இருப்பினும் ஒரு கனவை உண்மையானது, அதன் நிகழ்வு நிச்சயமானது என்று ஒரு கனவைப் பற்றி உறுதியாகக் கூற முடியாது.

ஏனெனில் ஒரு நல்ல கனவு என்பது அல்லாஹ்வின் வழிகாட்டுதலே தவிர ஷரீஅத்தின் ஆதாரம் அல்ல.

கனவில் கண்ட விஷயம் நிகழ்வில் நடக்கும்போது, அந்த கனவு உண்மையானது என்பது உறுதியாகும்.

ஆனால், அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களை யாராவது கனவில் கண்டால் அந்தகனவுஉறுதியாகஉண்மையாகவும், சரியாகவும் இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அது பொய்யோ அல்லது ஏமாற்றமோ என்கிற சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

## கனவில் நபியை பார்ப்பது

இறைத் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"(கனவில்) யார் என்னைக் கண்டாரோ நிச்சயமாக அவர் நிஜத்தையே கண்டார். ஏனெனில், ஷைத்தான் என் உருவத்தில் (காட்சியளிப்பவனாக) இருக்கமாட்டான்" என ஹள்ரத் அபூ ஸயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் அறிவித்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி - 6997)

**கனவில் என்னை காண்கிறவர் விழிப்பிலும் என்னைக் காண்பார், [ஏனெனில்] ஷைத்தான் என் உருவத்தில் காட்சியளிக்கமாட்டான் என்று இறைத்தூதர் நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள் என ஹள்ரத் அபூஹுரைரா [ரளி] அவர்கள் அறிவித்தார்கள்.**

நபி (ஸல்) அவர்களுக்குரிய தோற்றத்தில் (அவர்களின் அங்க இலட்சணங்களுடன்) அவர்களைக்கண்டால் தான் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டதாகக் கருதப்படும்" என்று ஹள்ரத் இப்னு சீரின் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹுத ஆலா கண்மணி நாயகம் (ஸல்) அவர்களை கனவில் தரிசிக்கும் பாக்கியத்தையும், அன்னவர்களின் ரவ்ளாவை ஜியாரத் செய்யும் வாய்ப்பையும் நமக்கு தந்தருள் புரிவானாக!

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

## ஓர் ஆலிம் கலெக்டர் ஆகிறார்!

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் பரப்பனங்காடியைச் சேர்ந்த பாவா - அஷ்ரஃபி தம்பதியரின் மகனார் பி.வி.அப்துல் ஃபஸல்.

பத்தாம் வகுப்பு வரை சொந்த ஊரில் பயின்ற அப்துல் ஃபஸல் பின்னர் உலகக் கல்வியும், மார்க்கக் கல்வியும் இணைந்து போதிக்கும் கோழிக்கோடு ஜாமிஆ மதீனத்துன் நூர் அரபிக் கல்லூரியில் சேர்ந்து அரபுப் பாடத்துடன் மேல்நிலைப் படிப்பும் படித்து வந்தார். +2வுக்குப் பின்னர் அங்கேயே இளங்கலைப் பட்டப் படிப்பையும் தொடர்ந்தவர் 2021ஆம் ஆண்டு பி.ஏ வரலாறு பட்டத்துடன் மார்க்கக் கல்வியில் தேர்ச்சி பெற்று "நூறானி" ஆலிம் பட்டமும் பெற்றார்.

அரபிக் கல்லூரியில் படிக்கும் போதே சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி கலெக்டர் ஆக வேண்டும் எனும் ஆர்வம் காரணமாக மார்கஸ் சிவில் சர்வீஸ் அகாடமியில் முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சிகள் பெற்றார். பின்னர் டெல்லி ஜாமிஆ மில்லியா இஸ்லாமியாவில் முதுகலை வகுப்பில் சேர்ந்ததோடு, அங்கேயே சிவில் சர்வீஸ் அகாடமியிலும் பயிற்சி பெற்றார். கடந்த ஆண்டு சிவில் சர்வீஸ் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத நிலையிலும் தளராது இந்த ஆண்டு இரண்டாவது முயற்சியில் அகில இந்திய அளவில் 507ஆவது ரேங்குடன் தேர்ச்சி பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

வருகிற ஆகஸ்ட் மாதம் உத்தரகாண்ட முசோரியில் தொடங்கும் பயிற்சிக்குப் பின்னர் அப்துல் ஃபஸல் "நூறானி" எனும் கௌரவத்துடன் ஆட்சிப் பணியில் சேர உள்ளார். ஆலிம் கலெக்டருக்கு வாழ்த்துகள்!

## நேர்மைக்கு முன்னுதாரணமாக விளங்கிய இந்திய சிறுவன் : முஹம்மது அயன் யூனுஸுக்கு துபாய் காவல்துறை பாராட்டு!

இந்திய சிறுவன் முஹம்மது அயன் யூனுஸுக்கு துபாய் சுற்றுலா காவல் துறை இயக்குநர், துபாய் சுற்றுலா மகிழ்ச்சி பிரிவின் தலைவர் உள்ளிட்டோர் இணைந்து பாராட்டு சான்றிதழ் வழங்கினர்.

துபாயில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், தொலைந்த பொருட்களை எளிதில் கண்டுபிடிக்கவும் "ஸ்மார்ட் காவல்நிலையம்" என்ற ஆன்லைன் சேவையை

காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன்பு தனது தந்தையோடு துபாய் வீதிகளில் சிறுவன் முஹம்மது அயன் யூனுஸ் உலாவியபோது விலையுயர்ந்த கைக்கடிகாரம் ஒன்றை வழியில் கண்டான். உடனே 'ஸ்மார்ட் காவல்நிலையம்' இணையதளத்தில் இதுகுறித்து பதிவிட்டான். இதையடுத்து துபாய் காவல் துறை அதிகாரிகள் முஹம்மது அயனிடமிருந்து கைக்கடிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர். அதனை துபாய்க்குச் சுற்றுலா வந்த போது தொலைத்த பயணிக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து துபாய் சுற்றுலா காவல்துறை வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நேர்மைக்கு முன்னுதாரணமாக விளங்கிய இந்திய சிறுவன் முஹம்மது அயன் யூனுஸை துபாய் காவல்துறை மனதார பாராட்டி கௌரவிக்கிறது" என்று கூறியுள்ளனர்.

## தமிழ்நாட்டில் மஸ்ஜிதுகள் உள்ளிட்ட மதவழிபாட்டுத் தலங்கள் கட்ட 30 நாட்களுக்குள் விசாரணை செய்து அனுமதி வழங்க வேண்டும்

தமிழகத்தில் புதிதாக மஸ்ஜிதுகள், தேவாலயங்கள் உள்ளிட்ட மதவழிபாட்டுத் தலங்கள் கட்ட உரிய விசாரணை நடத்தி முப்பது நாட்களுக்குள் அனுமதி வழங்க வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் செயலாளர் கே.நந்தகுமார் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர், காவல் துறை ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், தமிழகத்தில் புதிதாக வழிபாட்டுத் தலங்கள் கட்டுவதற்கும், ஏற்கனவே உள்ள வழிபாட்டுத் தலங்களை விரிவுபடுத்துவதற்கும் அனுமதி கோரி அளிக்கப்பட்டுள்ள மனுக்கள் நீண்ட நாட்களாக பரிசீலனை செய்யாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருப்பதாகவும், இப்போது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். எந்த விதக் காரணமும் இல்லாமல் இது போன்று கிடப்பில் போடப்பட்டிருப்பதுசரியல்லஎன்றுகூறியுள்ள அவர், இது தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், மத அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு தடையில்லாச் சான்றிதழ் கொடுக்க மாவட்ட நிர்வாகம் மறுப்பதால், இந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் கிடப்பில் இருப்பது குறித்தும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசின் சார்பில், விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டு, அனைத்து துறைகளுக்கும் தடையில்லா சான்றிதழ் வழங்க அனுமதி அளிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் அரசின்விதிகள் குறித்துகவனத்தில் எடுத்துக் கொண்டு விவாதம் மற்றும் ஆலோசனை செய்தபிறகு இந்த விவகாரத்தில் புதிதாக மதவழிபாட்டுத் தலங்களை கட்ட அனுமதி கேட்கும்போது, அதன் பணிகள் குறித்து விரிவாக முடிவெடுக்க வேண்டும் என்றும், தனியார் நிலங்களில் வழிபாட்டுத் தலங்கள் கட்ட அனுமதி கேட்கும் நிலையில், தடையில்லா சான்றிதழை மாவட்ட நிர்வாகம் உரிய பரிசீலனை செய்து அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சியர் தனிப்பட்ட முறையில் அறிக்கையை பெற்று முடிவெடுக்கலாம் என்றும், வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகளிடம் சட்டம் ஒழுங்கு பிரச்சனை குறித்து ஆலோசனை பெறலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும் புதிதாக கட்டடம் கட்ட மற்றும் ஏற்கனவே உள்ள கட்டடங்களை புனரமைப்புச் செய்ய 30 நாட்களுக்குள் முடிவெடுத்து அனைத்து விண்ணப்பங்களையும் நிலுவையில் வைக்காமல் உடனடியாக தீர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேபோன்று கட்டடம் கட்டுவதற்காக உள்ளாட்சித் துறை அமைப்புகளிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது கட்டட வரைப்படம் உள்ளிட்டவற்றிற்கு அரசின் நெறிமுறை மற்றும் விதிகளுக்கேற்ப உடனடியாக அனுமதி வழங்க வேண்டும்என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள பழைய வழிபாட்டுத் தலக் கட்டடங்களை புனரமைப்புச் செய்ய புதிதாக அனுமதி பெற தேவையில்லை என்றும், அதே நேரத்தில் விரிவாக்கம் செய்தால் அதற்கு சம்பந்தப்பட்டவர்கள், உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிய அனுமதி பெற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த அனுமதி பெற்று ஆன்லைன் மூலம் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம் என்றும் அரசு செயலாளர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

## கோவேக்ஸின் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களில் 30 சதவிதம் பேருக்கு உடல் நலக் கோளாறு!

கொரோனா தீநுண்மிக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்

களில் சுமார் 30 சதவீதம் பேருக்கு ஓராண்டுக்குப் பின்னர் உடல்நலக்கோளாறுகள் ஏற்பட்டதாக ஆய்விதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 'ஸ்பிரிங்கர் நேச்சர்' என்ற ஆய்விதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

கொரோனா தீநுண்மிக்கு (வைரஸ்) எதிராக செலுத்திக் கொள்ளப்பட்ட பிபிவி152 கோவேக்ஸின் தடுப்பூசியின் பக்கவிளைவுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தடுப்பூசி செலுத்திக் கொள்ளப்பட்டு ஓராண்டான பின்னர் ஏற்பட்ட நீண்டகால பக்கவிளைவுகள் குறித்து 2022ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியிலுள்ள பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

வளரிளம் பருவத்தைச் சேர்ந்த 635 பேர், 18 வயதுக்கு மேற்பட்ட 291 பேர் என மொத்தம் 926 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் சுமார் 50 சதவீதம் பேர் கோவேக்ஸின் செலுத்திக் கொண்ட பின்னர், தங்களுக்கு தொற்று பாதிப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவித்தனர். அவர்களில் பெரும்பாலானோருக்கு மேல் சுவாசக் குழாய் தீநுண்மி தொற்று ஏற்பட்டுள்ளது.

கோவேக்ஸின் செலுத்திக் கொண்டவர்களில் சுமார் 30 சதவீதம் பேருக்கு ஓராண்டுக்குப் பின்னர் உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசி செலுத்திக் கொண்ட வளரிளம் பருவத்தைச் சேர்ந்தவர்களில் 10.5 சதவீதம் பேருக்கு தோல்சார்ந்த பிரச்சனைகளும், 10.2 சதவீதம் பேருக்கு பொதுவான உடல் நலக் கோளாறுகளும், 47 சதவீதம் பேருக்கு நரம்பு மண்டல கோளாறுகளும் ஏற்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 89 சதவீதம் பேருக்கு பொதுவான உடல்நலக் கோளாறுகள், 55 சதவீதம் பேருக்கு நரம்பு மண்டல கோளாறுகள் ஏற்பட்டுள்ளன. 58 சதவீதம் பேர் தசைகள், எலும்புகள், மூட்டுகள், தசை, நாண்கள், தசைநார்கள் மற்றும் குறுத்தெலும்பு மண்டலம் சார்ந்த கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோவேக்ஸின் செலுத்திக் கொண்ட பெண்களில் 46 சதவீதம் பேருக்கு மாதவிடாய் பாதிப்புகளும், 27 சதவீதம் பேருக்கு கண்விழி பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. கேடயச் சுரப்பில் (தைராய்டு கிளாண்ட்) இருந்து சுரக்கக்கூடிய ஹார்மோன் குறைவாக சுரப்பதன் மூலம் உடலில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் 6 சதவீதம் பேருக்கு ஏற்பட்டுள்ளன.

shabnamsilks@ymail.com www.facebook/shabnamsilk.com

# Shabnam

SILKS & READYMADE

No.74, J.N.STREET, PUDUCHERRY - 1.

Ph : 0413-2222600, 2333600

# Sagar Foot Wear



269, M.G.ROAD, PUDUCHERRY - 1.

Ph : 0413-2344600

"பாங்கின்போது வானத்தின் கதவுகள் திறக்கப்பட்டு, துஆ அங்கீரிக்கப்படுகிறது" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அனஸ் (ரளி) அவர்கள்

# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,

பட்டுக்கோட்டை – 1.

04373-254354; 253339; 99444 54354

ஒரு சதவீதம் பேருக்கு கோவேக்ஸின் செலுத்திக் கொண்ட பின்னர் “கில்லன் பாரே சிண்ட்ரோம்” என்ற அதிவிரைவான நரம்பு தளர்ச்சி, பக்கவாதம் உள்ளிட்ட தீவிர பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கோவேக்ஸின் செலுத்திக் கொண்ட பின்னர் 3 பெண்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். அவர்களுக்கு சர்க்கரை நோய் இருந்துள்ளது. அவர்களில் இருவருக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கோவிஷீல்டு தடுப்பூசிசெலுத்திக்கொண்டவர் களுக்கு அரிதாக இரத்தம், உடல், இரத்த தட்டு களின் எண்ணிக்கை, குடல் ஆகிய வற்றில் பக்கவிளைவுகள் ஏற்பட லாம் என்று அந்தத் தடுப்பூசி யைத் தயாரித்த பிரிட்டனின் அஸ்ட்ராஸெனகா நிறுவனம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## பள்ளபட்டியில் குர்ஆனை மனனம் செய்து ஹாஃபிழாக வாழ்ந்த சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்!

சுமார் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த முஸ்லிம்கள் நிறைந்து வாழும் கரூர் மாவட்டம் பள்ளபட்டியில் குர்ஆனையும், ஹதீஸ்களை யும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பற்றிய பைத்களையும் மனனம் செய்தவர்கள் ஏராளம். குர்ஆனை மனனம் செய்தவர் களை “ஹாஃபிழ்” என்று பட்டம் வழங்கி அழைப்பது வழக்கம்.

முஸ்லிம்கள் மட்டும்தான் ஹாஃபிழாக இருப்பார்கள். ஆனால் பள்ளபட்டியில் பிறந்து வாழ்ந்து மறைந்த சகோதர சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பெரியவர் குர்ஆனையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பற்றிய பைத்களையும் மனனம் செய்து ஹாஃபிழாகவும் விளங்கி சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து மறைந்தார்.

சுமார் 300 ஆண்டுகளாக அந்த ஊர் மக்களின் கல்விக் கண்ணை திறந்து, கடந்த பத்து தலைமுறைகளாக கல்வி சேவையையே குறிக்கோளாகக் கொண்டு, எந்த கட்டணமும் பெறாமல் இலவசக் கல்வி நிலையமாக பள்ளபட்டியின் “முத்து வாத்தியார் ஸ்கூல்” என்றழைக்கப்படும் “மருதா முஸ்லிம் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி” என்ற ஒரு பள்ளிக் கூடம் நடந்து வருகிறது.

அந்தப் பள்ளியில் அன்று முதல் இன்று வரை பல்லாயிரம் பேர்கள் படித்து இன்று சமூகத் தில் பெரும் தொழிலதிபர்களா கவும், மருத்துவர்களாகவும், சமூக சேவகர்களாகவும், அரசியல்வாதிகளாகவும் இன்

னும் பிற துறைகளின் வல்லுனர்களாகவும் நல்ல நிலையில் வலம் வருகிறார்கள். அதில் பல பேர்கள் மறைந்தும் விட்டார்கள்.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் சப்பாணி வாத்தியார் என்ற ஆசிரியர் மூலம் துவக்கப்பட்ட பள்ளியில் அவரைத் தொடர்ந்து அவரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தொடர்ந்து அந்தப் பள்ளியை நடத்தி வருகிறார்கள். அந்த வரிசையில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் மருதா கவுண்டர் என்ற பெரியவர் அந்தப் பள்ளியை நடத்தினார். இந்தநிலையில், மருதா கவுண்டர் அவர்கள், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் புகழ் மாலையை மனப்பாடம் செய்ததுடன், குர்ஆனையும் மனனம் செய்த ஹாஃபிழாக இருந்தார்கள்.

இருப்பினும் மனதளவில் முஸ்லிமாகவும், தோற்றத்திலும், தன் பெயரை மாற்றாமலும் தான் சார்ந்த சமூகத்திலேயே தன் குடும்பத்துடன் வாழ்ந்துவந்தார்.

இவர் கடைவீதிகளிலும், கந்தூரி கமிட்டி கல்லிலும் அமர்ந்து தினசரி மாலை நேரங்களில் தன் கம்பீர குரலில் குர்ஆனின் வசனங்களையும், பைதகளையும் ராகமாக பாடுவார்.

இவர் குரலை கேட்டவுடன் ரோட்டில் நடந்து செல்பவர்கள்


எங்கள் நோக்கம் எல்லா புகழும் இறைவனுக்கே உங்கள் மனநிறைவு

**மீரா டாக்குமெண்டேஷன் & லா அசோசியேட்ஸ்**

சட்ட ஆலோசனைகள் வழங்கி பத்திர பதிவிற்கு தேவையான அனைத்து விதமான ஆவணங்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து தரப்படும்.

**M.ஷேக் பரீத் அலீ, M.Com.,M.L., அட்வகேட்,**

100, சார்பதிவாளர் அலுவலக தெரு, அரவக்குறிச்சி – 639201. கரூர் Dt.

9940787789 / 04320-231789



எங்கள் இதர நிறுவனம் :

**மீரா இன்ஃபோநெட் இ-சேவை மையம்**

அனைத்து விதமான ஆன்லைன் சேவைகளும் செய்து தரப்படும்

100/2, S.R.O. தெரு, அரவக்குறிச்சி.

9843062785 / 8148148177

**MEERA DIGITAL HUB மீரா டிஜிட்டல் ஹப்**



அனைத்து விதமான கம்ப்யூட்டர், லேப்டாப், பிரிண்டர்ஸ், மொபைல் போன், CCTV கேமரா அனைத்தும் குறைந்த விலையில் கிடைக்கும்.

72, A.R.S. பில்டிங், கரூர் மெயின் ரோடு, அரவக்குறிச்சி.

8248522455 / 9080360049

அப்படியே மெய் மறந்து நின்று விடுவார்கள்.

அதே போல் இவர் ரோட்டில் நடந்து போனால் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை எழுந்து நின்று தங்கள் குருவுக்கு மரியாதை செலுத்துவார்கள். மருதா கவுண்டர் அவர்கள் பெரும்பாலும் மூத்த உலமா பெருமக்கள் மத்தியிலேயே அமர்ந்து இருப்பார். உலமா பெருமக்களும் வேற்றுமை இல்லாமல் இவரிடம் உரையாடு வார்கள். இப்படி மனதளவில் முஸ்லிமாக வாழ்ந்த மருதா கவுண்டர் இறைவன் நாட்டப்படி ஒரு நாள் காலமானார்.

அவர்கள் குடும்ப வழக்கப்படி இறந்தவர்களை எரியூட்டும் வழக்கமுடையவர்களாக இருந் துள்ளனர். அதே போல் மருதா கவுண்டர் சடலத்தையும் எரி யூட்ட சடங்குகள் நடைபெற்ற நேரத்தில் பள்ளபட்டியின் மூத்த உலமாபெருமக்கள் அவர்கள் இல்லம் சென்று இறந்தவருக்கு அஞ்சலி செய்து விட்டு மருதா கவுண்டர் குர்ஆனையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புகழ் மாலையையும் மனப்பாடம் செய்தவர்; குர்ஆனை மனதில் சுமந்தவர். அவரை எரித்தால் குர்ஆனையும், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் புகழ் மாலையையும் எரித்தது போல் ஆகிவிடும்.

அதனால் அவரை எரியூட்ட வேண்டாம். அடக்கம் செய்யுங் கள்; மீதியை அல்லாஹ் பார்த்துக் கொள்வான் என்று ஆலிம்கள் கேட்டுக் கொண்டனர். அவர் களின் வேண்டுகோளை ஏற்ற இக்குடும்பத்தினர் அவரை நங்காஞ்சி நதிக்கரை ஓரம் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தனர்.

ஊர்மக்கள் அனைவரும் இறுதி அஞ்சலி செலுத்தி உலமாபெருமக்கள் முன்னிலை யில் அடக்கம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இவர்கள் குடும்பத்தில் யார் இறந்தாலும் அடக்கம் செய்யும் முறையை கடைபிடிக்கிறார்கள்.

சோழவந்தான் என்ற ஊரை பூர்வீகமாகக் கொண்டு பள்ளபட்டிக்கு குடியேறி நம் இஸ்லாமிய சொந்தங்களுடன் இணைந்தே வாழ்க்கையை அமைத்தவர்கள் இந்த குடும்பத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றிலிருந்து இன்று வரை கோவில் தெருவில் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு சமய நல்லிணக்கத் திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருகிறார்கள்.

சமய ஒற்றுமைக்கு இதைவிட வேறு எதையும் எடுத்துக்காட் டாகக் கூற முடியாது.

செய்தி :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## தொழுகை

ஒரு பெரியாரின் குழந்தை இறந்து விட்டது. துக்கம் விசாரித்து பல பேர்கள் வந்தனர். ஒருவர் வந்தார். குழந்தையை பறி கொடுத்தவர் மிகவும் துக்கத்தில் இருந்ததால் "நீங்கள் பெரியவர்தானே. நீங்கள் குழந்தை இறந்ததற்கு இப்படி கவலைப்படலாமா?" எனக் கேட்டபோது, பெரியவர் சொன்னார்: "நண்பரே! நான் என் குழந்தை இறந்ததற்கு கவலைப்படவில்லை. இன்றைய அஸர் தொழுகையின் ஜமாஅத் கிடைக்கவில்லை. அதை நினைத்துதான் அழுது கொண்டிருக்கிறேன்" என்றார்.

## கர்பலா மைதானத்தில்

ஹள்ரத் ஹுஸைன் (ரளி) அவர்கள் கர்பலா மைதானத்தில் தாகத்தால் துவண்டு துடிக்கின்றார்கள். இறுதியில் ஃபுராத் நதிக்கு தன் குதிரையை ஓட்டி வந்து முதலில் குதிரைக்கு தண்ணீர் புகட்டி விட்டு, அதன்பின் தான் நீர் அருந்தும்போது சரியாக அம்பு அவர்களின் வாயில் பாய்ந்து, வாயிலிருந்து வந்த இரத்தம் கையிலிருந்த தண்ணீர் மீது பட்டு தண்ணீர் இரத்தமாக மாறி விடுகிறது. கையிலிருந்த இரத்தமான தண்ணீரை கீழே கொட்டி விடுகிறார்கள். அதன்பின் சரமாரியாக அம்பு அவர்களின் உடலில் பாய்கிறது. கீழே விழுந்து விடுகிறார்கள். கண்ணீர் தாரைத் தாரையாக ஓடுகிறது.

பக்கத்தில் அவர் குடும்பத்திலுள்ள பெரியார் "எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பேரரே! ஏன் அழுகின்றீர்? நீர் இறந்தவுடன் பெருமானார் (ஸல்) அவர்களையும், உம் அருமை தந்தையாரை யும், அருமை தாயாரையும் சந்திக்கலாமே! ஏன் அழுகின்றீர்? இந்த உலகத்திலிருந்து போக போகின்றோமே என அழுகின்றீரா? குடும்பத்தை விட்டுச் செல்கின்றோமே என அழுகின்றீரா? அரசப் பதவியை ஆளவில்லையே என எண்ணுகின்றீரோ? ஏன் அழுகிறீர்?" என வினவப்பட்டபோது,

"நான் என் வாழ்நாளில் ஒரு வக்து தொழுகையைகூட விட்டதே கிடையாது. ஆனால், இப்போது என்னால் அஸர் தொழுக முடியவில்லை. அதனால்தான் அழுகிறேன்" என்றார்களாம்.

## உயிரினங்களும், உன்னத இஸ்லாமும்

நான் நபிமணி (ஸல்) அவர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தபோது திடீரென ஓர் ஒட்டகம் ஓடோடி வந்து, "அல்அமான் யாரஸூலல்லாஹ்! எனக்கு பாதுகாப்புத் தாருங்கள்" எனக் கூறி நின்றது. அதைப் பின்தொடர்ந்து ஒரு காட்டரபியும் கையில் உருவிய வாளுடன் வந்து சேர்ந்தார்.

உடனே உத்தமத் திருநபி (ஸல்) அவர்கள், "தோழரே! இதை என்ன செய்யப் போகிறீர்?" எனக் கேட்க, அதற்கவர், "யாரஸூலல்லாஹ்! அதிக விலை கொடுத்து வாங்கியும் அது எனக்கு வழிபட்டு நடக்காததால் அதனை அறுத்து அதன் மாமிசத்தைப் புசிக்கப் போகிறேன்" என்றார்.

இது கேட்ட இறுதித் திருநபியவர்கள் ஒட்டகத்தை நோக்கி "நீ இப்படிச் செய்தாயா?" எனக் கேட்க, "ஆம்! நான் அப்படித்தான் செய்தேன். முடியாததாலோ, முரட்டுத்தனத்தாலோ அல்ல. நான் வாழும் கூட்டத்தவர் இஷாத் தொழாமல் தூங்கி விடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஏற்படும் தண்டனை என்னையும் தாக்கி விடக் கூடாதே என்ற அச்சத்தால் தான் அப்படிச் செய்தேன். என் எஜமானரான அவர் இனிமேல் நான் இஷாத் தொழுகையை விடாது தொழுவேன் என்று வாக்களித்தால், நான் அவருக்கு வழி பட்டு நடக்க சித்தமாயிருக்கிறேன்" என அது கூறியது. அதன்பிறகு அந்தக் காட்டரபியிடம் அவ்விதம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வாக்குறுதி வாங்கிவிட்டு ஒட்டகத்தை உடன் அனுப்பி வைத்தனர்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் உகைல் இப்னு அபீதாலிப் (ரளி) அவர்கள்.

## மலத்தை உருட்டிச் சென்ற வண்டு

"உலகிலுள்ள எல்லா வஸ்துகளையுமே அல்லாஹ் மனிதனுக்காகத்தான் படைத்திருக்கிறான்" என ஓர் ஊரில் ஓர் ஆலிம் பயான் செய்யும்போது சொன்னார்.

அந்த பயானைக் கேட்டவர்களில் ஒருவர் மறுநாள் காலையில் மலம் கழிக்க கடற்கரைப் பக்கம் சென்றார். அங்கே இரண்டு மல வண்டுகள் மலத்தை உருட்டிக் கொண்டே ஓடுவதைக் கண்டார். அப்போது அவர் நினைத்தார். "நேற்று பயான் செய்த ஆலிம் உலகிலுள்ள எல்லா வஸ்துக்களுமே மனிதனுக்காகப் படைக்கப் பட்டிருப்பதாகச் சொன்னாரே அப்படியானால் இது கூடவா?"

இந்நிலையில் –

அந்த மனிதருக்கு ஒற்றை தலைவலியும், கண்ணில் நீர் வடிவதும் ஆரம்பமாயிற்று. எவ்வளவோ மருத்துவங்கள் செய்தும் குணம் பெறவில்லை. அப்போது ஒருநாள் அவரைச் சந்தித்த

வழிப்போக்கர் ஒருவர் அவருடைய உபாதையைப் பற்றிக் கேட்டு விட்டுச் சொன்னார். மல வண்டைப்பிடித்து நன்றாகக்கழுவி விட்டு அதன் தலைப் பகுதியைக் கழற்றி எடுங்கள். அதன் உள்ளே முத்து போல்திரவம் நிற்கும். நீர் வடியும் கண்ணில் அந்த திரவத்தை விடுங்கள். நாளொன்றுக்கு இரு வேளை இப்படிச் செய்யுங்கள். தலைவலியும் நின்றுவிடும். கண்ணில் நீர்வடிவதும் நின்றுவிடும்.

அந்த வழிப்போக்கர் சொன்னபடியே அந்த மனிதர் செய்தார். என்ன ஆச்சரியம்! தலைவலியும், கண்ணில் நீர்வடிவதும் நின்று விட்டது. அப்போதுதான் அந்த மனிதர் சொன்னார்: "யா அல்லாஹ்! நீ எதையெதையோ யார் யாருக்கோ படைத்தாய்; மல வண்டை எனக்கே படைத்தாய்."

இது சிரிப்பதற்காகச் சொல்லப்படுவதல்ல. உண்மையும் அது தான். எந்த வஸ்துவையும் அல்லாஹ் வீணாகப் படைக்க வில்லை. பாம்பின் விஷத்திலிருந்துதான் புற்று நோய்க்கான மருந்து தயாரிக்கப்படுகிறது.

## பண்டிதரும் – படகோட்டியும்!

கணித விஞ்ஞானத்தைக் கற்றறிந்த பண்டிதர் ஒருவர் மிகப் பெரிய நதி ஒன்றைக் கடந்து செல்ல படகு ஒன்றைக் கூலிக்கு அமர்த்தினார். கையில் பெரிய பெரிய புத்தகக் கட்டுடன் கன கம்பீரமாக வீற்றிருந்தார் படகினில். பண்டிதர் இருந்த இருப்பிலேயே அவர் "மகாமேதை" எனத் தெரிந்தது. அவர் அணிந்திருந்த நீண்ட பட்டு அங்கியும், நீலநிறத் தொப்பியின் குஞ்சமும், மருதாணி தடவி சிங்காரமாய் வாரிவிடப்பட்ட பொன் னிறத் தாடியும், காற்றில் அசைந்தாடி பண்டிதரின் கம்பீரத்தைப் பன்மடங்கு எடுத்துக் காட்டின. இயற்கையின் அழகை, மனோகர மான மாலை நேரத்தை அனுபவித்துக் கொண்டு அமர்ந்திருந்தார் பண்டிதர். அவர் கை மட்டும் ஆடி ஆடி ஏதோ 'கணக்கு' போட்டுக் கொண்டிருந்தது. இதைக் கண்ணுற்ற படகோட்டி "ஐயா! ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர்கள் போல் தெரிகிறது. ஆனால் தங்கள் கை மட்டும் எதையோ தட்டுவது போல் தாளமிட்டுக் கொண்டிருக்கிறதே" என்று அன்புடன் கேட்டான்.

பெருமையுடன் தலையை அசைத்து அலட்சியப் பார்வையை வீசினார் பண்டிதர்.

"நான் போடுவது தாளமல்ல அப்பனே! அது ஒரு கணக்கு" என்றார் பண்டிதர் பெருமிதத்துடன். அதோடு விட்டாரா?

"ஏ படகோட்டி! உனக்கு என்னனென்ன கணக்குகள் தெரியும்?" என்றார் ஏளனமாக. பாவம்! ஏழைப் படகோட்டிக்குத்

தெரியுமா எண் சுவடியும், எட்டாம் வாய்ப்பாடும்? அவன் முகம் சுருங்கியது என்றாலும், சமாளித்துக் கொண்டு "கணக்குன்னு, ஒரு படிப்பு இருக்குதுங்களா பண்டிதர் ஐயா! நான் ஏழை. பத்து வயசுலே படகோட்ட வந்ததுங்க. நான் எந்தக் கணக்கை கண்டேனுங்க" என்று ஏங்கிய குரலில் பதிலளித்தான்.

"என்ன! கணக்கு என்பதே தெரியாதா உனக்கு! அடப்பாவி முட்டாளே! அப்படியானால் உன் வாழ்நாளில் பாதியை வீணாக்கி விட்டாயே! கைசேதம், கைசேதம்" எனக் கேலிச் சிரிப்பு சிரித்தார் பண்டிதர்.

படகோட்டியின் மனதில் சுள்ளுன்னு தைத்தன பண்டிதரின் வார்த்தைகள், அவரின் கேலிச் சிரிப்போ உலகமே அவனை நோக்கி உருப்படாத மடையனே" என்று உரக்கக் கூவுவது போலிருந்தது.

மிகவும் நாணி மனச்சலிப்படைந்தான் படகோட்டி. ஒன்றும் பேசவில்லை. மௌனியானான். இடையிடையே பெருமூச்சு விட்டு படகை வலித்தான்.

நட்டாற்றை விட்டுப் படகு நகர்ந்தது. கார்மேகம் கூடி திடீரென கனமழை வரும் போலிருந்தது. ஙொய் ஙொய் என்றடித்த சுழல் காற்றினால் படகு சுற்றத் துவங்கியது. ஆற்றின் சிற்றலைகள் பேய் காற்றினால் பேரலைகளாக மாறின.

படகோட்டி சற்று தடுமாறினான். சமாளிக்க முடியுமோ என்ற சந்தேகம் அவனுக்கு!

"ஐயா பண்டிதரே! தங்களுக்கு நீச்சல் தெரியுமல்லவா? நிலைமை மோசமாக உள்ளது" என்று உரக்கக் கத்தினான் படகோட்டி.

"நீச்சலா? எனக்கு அது தெரியாதே தம்பி! என்ன செய்வேன் இப்போது?" எனக் கூறி பரக்கப் பரக்க விழித்தார் பண்டிதர். தன் தாடியை பிடித்திழுத்துக் கொண்டு அவர் படபடப்புடன் அங்குமிங்கும் ஆடியதால் படகின் உள்ளேயும் நீர் ஏறியது.

"ஓஹோ! நீச்சல் தெரியாதா உமக்கு! நன்று நன்று பண்டிதரே! அப்படீன்னா உங்கள் வாழ்க்கை முழுவதையும் பாழாக்கிட்டீங்களே. இதோ சுழலில் சிக்கி நீரில் படகு மூழ்கப் போகிறதே. நீச்சல் தெரியலைன்னா நீங்களும் இந்நீரில் மூழ்கணுமே! அந்தோ!" என்று கத்தினான் படகோட்டி.

ஒரு கணம்...

சரேலென்று படகு கவிழ்ந்தது. அவ்வளவுதான் "குபு குபு" என்றோடும் நீரிடையே படகோட்டியின் தலையும், கையும் மிக வேகமாக நீச்சலடித்து கரை நோக்கி வந்து கொண்டிருந்தது. பண்டிதர்....?

(தொடரும்)

# ஜனாஸாவை அடக்கம் செய்வதில் தாமதம் செய்யலாமா?

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தி

இறந்து போனபிரேதத்தின் (ஜனாஸாவின், உறவினர் அல்லது வாரிசுதாரர் வெளி நாட்டிலோ அல்லது உள்நாட்டில் வெகு தொலைவிலோ இருந்து கொண்டிருக்கிறார். அவர் வீடு திரும்பும் வரை ஒரு நாளோ அல்லது இரண்டு, மூன்று நாட்களோ ஜனாஸாவை குளிரூட்டப் பட்ட ஐஸ் பெட்டியில் வைத்து, அவர் வந்த பிறகுதான் அடக்கம் செய்ய வேண்டுமா? இது குறித்து இஸ்லாம் என்ன கூறு கிறது? கொஞ்சம் விரிவாக அல் குர்ஆன், அல்ஹதீஸ் வெளிச்சத் தில் தீர்வை காண்போம்...

"இறந்தவரின் எலும்பை முறிப்பது, அவர் உயிருடன்இருக் கும்போது உடைத்ததுபோன்றா கும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்

(நூல் : முஅத்தா மாலிக், அபூதாவூத், இப்னுமாஜா)

மேற்கூறப்பட்டஹதீஸுக்கு ஹதீஸ் கலை வல்லுனர்களின் விளக்கங்களை காண்போம்.

உயிருடன் இருக்கும் ஓர் உடல் அனுபவிக்கும் யாவையும் இறந்துபோனஉடலும்(ஜனாஸா வும்) அனுபவிக்கும்" - ஹள்ரத் இப்னுஹஜர் (ரஹ்) அவர்கள்.

இறந்துபோன ஒரு முஃமி னுக்கு நோவினை கொடுப்பது அவர் உயிருடன்இருக்கும்போது கொடுக்கப்படும் நோவினைக்குச் சமமாகும்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊது (ரளி) அவர்கள்

(நூல் : இப்னு அபீஷைபா)

"இறந்துபோன உடலும் நோவினை பெறும்"

ஹள்ரத் இப்னுல் மலிக் (ரஹ்) அவர்கள்

"உயிருடன் இருப்பவரை அவமரியாதை செய்யாதிருப்பது போன்று இறந்தவரையும் அவ மரியாதை செய்யக்கூடாது"

ஹள்ரத் தீபி (ரஹ்) அவர்கள்

உயிருடன் இருக்கும் உட லுக்கு நோவினை தரும் யாவும் இறந்த உடலுக்கும், நோவினை தரும் என்ற கருத்து ஹதீஸின் மூலமும்,ஹதீஸ்கலைவல்லுனர் களின் கருத்துரை மூலமும் அறிய முடிகிறது.

உயிருடன் இருப்பவர் ஒரு கையில் ஐஸ் கட்டியை அப்படியே மாற்றாமல் ஒரு மணி நேரம் வைக்க முடியுமா? அல்லது அவரால் ஒரு நாள் முழுவதும் ஐஸ் பெட்டியில் படுத்து கிடக்க முடியுமா? இதை

நாம் ஒரு கேள்வியாக எழுப்ப வில்லை. ஒரு சவாலாக விடுகிறோம். இது சாத்தியமா? இது சாத்தியம் இல்லாத போது... ஜனாஸாவை ஒரு நாள், இரண்டு, மூன்று நாட்கள் ஐஸ் பெட்டியில் வைப்பது எப்படி சாத்தியமாகும்? இறந்தவர் உலகப் பார்வையில் இறந்து போனாலும் இறைவனின் பார்வையில் அடுத்த கட்ட வாழ்வுக்கு (மறுமைக்கு) அவர் தயாராகிவிட்டார். மரணம் என்பது உலக வாழ்வின் முடிவாக இருந்தாலும், அது மறுமை வாழ்வின் துவக்கமாக கருதப்படுகிறது.

உடலுக்கு நெருப்பு நோவினை தருவது போன்று குளிரும் நோவினை தரவல்லது. எனவேதான் சுவனவாசிகளைப் பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகிறான் :

**"அவர்கள் அங்குள்ள ஆசனங்களில் சாய்ந்து இருப்பார்கள்; சூரியனையோ, கடுங் குளிரையோ அதில் அவர்கள் காணமாட்டார்கள்"**

- அல்குர்ஆன் (76 : 13)

## இறந்த உடல் எப்படி நோவினை பெறும்?

இறந்து போனது உடல்... என்றாலும் அதன் தோலில் தான் நோவினை பெறும் மற்றும் நோவினையை உணரும் நரம்புகள் உள்ளதாக சமீபத்திய விஞ்ஞான கண்டுபிடிப்பு கூறுவதை அல்குர்ஆன் முன்பே கூறிவிட்டது.

**"யார் நம் வேத வசனங்களை நிராகரிக்கிறார்களோ அவர்களை நாம் நிச்சயம் நரகில் புகுத்துவோம்; அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லாத (வேறு) தோல்களை, அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம்"**

- அல்குர்ஆன் (4 : 56)

இறந்த உடலை ஐஸ்கட்டி வேதனையிலிருந்து காப்பாற்ற நாம் பின்பற்ற வேண்டியது நபிமொழியின் அடிப்படையில் ஜனாஸாவை வெகு விரைவாக நல்லடக்கம் செய்ய வேண்டும்.

"ஜனாஸாவை வெகு விரைவாக கொண்டு செல்லுங்கள்.. அது சீதேவியாக இருந்தால் அதற்கு நன்மை கிடைக்கும். அந்த நலவை அது அடைவதற்கு நீங்கள் முற்படுத்துங்கள். அது பாவியாக இருந்தால் அதற்கு தீங்கு கிடைக்கும். பாவியை உங்களின் பிடரிகளிலிருந்து (சீக்கிரம்) இறக்கி விடுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி - 1315)

"உங்களில் ஒருவர் மரணித்து விட்டால், அவரை நீங்கள் தடுத்துக் கொள்ள வேண்டாம். அவரை வெகு

விரைவில் மண்ணறை நோக்கி விரைந்து கொண்டு செல்லுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் :

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானீ)

ஜனாஸா சீதேவியாக இருந்தால் என்னை சீக்கிரம் கொண்டு செல்லுங்கள் என்று முறையிடுகிறது; அது பாவியாக இருந்தால், கைசேதமே! என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள்? என்றும் முறையிடுகிறது. இந்த சப்தத்தை மனிதனைத் தவிர மற்றவை கேட்கின்றன. இதை மனிதன் கேட்டால் அவன் மூர்ச்சையாகி கீழே விழுந்து விடுவான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரளி) அவர்கள் (நூல் : புகாரி)

இறந்தவரின் முகத்தை குழந்தைகளும், நெருங்கிய உறவினர்களும் எப்படியாவது பார்த்துதான் ஆக வேண்டுமா? எத்தனை நாட்களானாலும் பரவாயில்லை. அவர்கள் வந்த பிறகுதான் நல்லடக்கம் செய்ய வேண்டுமா? இவை இஸ்லாத்தில் கிடையாது. ஒரு வாரிசுதாரர் இருந்தால் போதும். அவரின் அனுமதியின் பேரில் ஜனாஸாவை உடனடியாக தூக்கி விட வேண்டும். ஜனாஸாவின் முகத்தை பார்ப்பதைவிட அதற்காக துஆ செய்வதே மேலானது. இவ்வாறுதான் நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்டார்கள்.

"இரவில் அடக்கம் செய்யப்பட்ட ஒரு மண்ணறையை நபி (ஸல்) அவர்கள் கடக்க நேரிட்ட போது "இவர் எப்போது அடக்கம் செய்யப்பட்டார்?" என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். "நேற்றிரவு" என நபித் தோழர்கள் பதிலுரைத்தார்கள்.

உடனே நபி (ஸல்) அவர்கள் "எனக்கு நீங்கள் தகவல் சொல்லியிருக்கக் கூடாதா?" என்றார்கள். "அவரை இரவில் நாங்கள் அடக்கம் செய்தோம். தங்களை நாங்கள் எழுப்புவதை வெறுத்தோம்" என நபித் தோழர்கள் கூறினார்கள்.

உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். அவர்களுக்கு பின்னால் நாங்கள் அணிவகுத்து நின்றோம். ஜனாஸாவிற்கு நபி (ஸல்) அவர்கள் தொழ வைத்தார்கள். (துஆ செய்தார்கள்)"

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் (நூல் : புகாரி)

இந்த நபிமொழியிலிருந்து சில சட்டங்கள் எடுக்கப்படுகின்றன.

1. இறந்தவரை உடனடியாக நல்லடக்கம் செய்ய வேண்டும். முக்கியமானவர்களின் வருகைக்காக காத்திருக்கக் கூடாது.

2. இரவிலும் நல்லடக்கம் செய்யலாம்.
3. அடக்கம் செய்யப்பட்ட பிறகும் ஜனாஸா தொழுகை நடத்தலாம்.
4. ஜமாஅத்துடன் சேர்ந்து ஜனாஸா தொழலாம்.

## நபி (ஸல்) அவர்களின் உடலை நல்லடக்கம் செய்வதில் ஏன் தாமதம்?

இந்த கேள்வி இங்கே எழுகிறது. இது நியாயமான கேள்வி.

"நபி (ஸல்) அவர்கள் திங்கள் தினத்தன்று இறந்தார்கள்; புதன் தினத்தன்று நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஸலமா பின் அப்தூர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ)

1. நபி (ஸல்) அவர்களின் உடல் ஐஸ் பெட்டியில் வைக்கப்படவில்லை. அண்ணலாரின் உடலும், நமது உடலும் ஒன்றல்ல. உடல் விஷயத்தில் நபியவர்கள் மற்றவர்களை காட்டிலும் அவர்கள் மாறுபடுகிறார்கள். இது அவர்களின் தனித்தன்மை; தனிச்சிறப்பு.

நாம் இறந்தால் நமது உடல் அசுத்தமாகிவிடும். தாமதம் ஆக ஆக உடலில் துர்நாற்றம்வீச ஆரம்பித்துவிடும். உயிருடன் இருக்கும் போது ஏற்படாத மாற்றம் நாம் இறந்த பிறகு நமது உடலில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துவிடும். இந்த நிலைகளில் எந்த ஒன்றும் நபிகளாருக்கு ஏற்படாது. இதை பின்வரும் நிகழ்வு உறுதிப்படுத்துகிறது.

**"நபி [ஸல்] அவர்கள் இறந்தபோது அபூபக்ர் [ரளி] அங்கே வந்து, நபியைப் போர்த்தியிருந்த போர்வையை விலக்கி, அவர்களை [நெற்றியில்] முத்தமிட்டு "தங்களுக்கு என் தந்தையும், தாயும் அர்ப்பணமாகட்டும்! நீங்கள் உயிருடன் இருந்தபோதும் நறுமணம் கமழ்ந்தீர்கள். இறந்த நிலையிலும் மணம் கமழ்கிறீர்கள்" என கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : புகாரி 3667)

2. நபி (ஸல்) அவர்களின் ஜனாஸா அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அந்த இல்லம் ஆறுக்கு ஆறு அடி கூட இல்லை. இலட்சக்கணக்கான நபித்தோழர்களும், நபித்தோழியர்களும், சிறுவர்களும் அந்த இல்லத்திற்குச் சென்று பத்து பத்து நபராக இமாம் ஜமாஅத் இல்லாமல் தனித்தனியாக தொழுதார்கள். இதற்கு கிட்டதட்ட இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் கால அவகாசம் தேவைப்பட்டது.

நபி (ஸல்) அவர்களின் ஜனாஸா தொழுகையை இமாம் ஜமாஅத் இல்லாமல் தனித்தனியாக நபித்தோழர்கள் தொழுது வந்தார்கள். இருந்த போதும் அவர்கள் தான் இமாம்; இறந்த பிறகும் அவர்கள் தான் இமாம் என்பது குறிப்பிடத்தக்கது.

3. நபி (ஸல்) அவர்கள் இறந்த பிறகு ஓர் அசாதாரண சூழ்நிலை நிலவியது. நபித்தோழர்களில் ஒரு சாரார் நபி (ஸல் அவர்களின் மரணத்தை நம்பினர். ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் போன்றோர் நபி (ஸல்) அவர்களின் மரணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அது தற்காலிகமானது என்றனர். இத்தகைய பிரச்சனையை சுமூகமாக தீர்த்து வைப்பதற்கு கொஞ்ச கால அவகாசம் தேவைப்பட்டது. எனவேதான் நபி (ஸல்) அவர்களின் நல்லடக்கம் தாமதமானது.

4. நபி (ஸல்) அவர்களின் ஜனாஸாவை எங்கே அடக்கம் செய்வது? என்ற பிரச்சனை. அதையும் ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் தீர்த்து வைத்தார்கள்.

"இறைத்தூதர்களின் உயிர் எங்கே பிரிகிறதோ அங்கு தான் அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள் என நான் நபி (ஸல்) அவர்கள் கூற கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : முஅத்தா மாலிக்)

5. நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு உலகளாவிய அளவில் முஸ்லிம்களுக்கு ஒரு தலைமை தேவைப்பட்டது. அந்தத் தலைமையை ஏகோபித்த முடிவின்படி தேர்ந்தெடுக்கும் ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்களின் தலைமையாக முடிவு செய்யப்பட்டது. இது போன்ற தவிர்க்க முடியாத சில காரணங்களால் தான் நபி (ஸல்) அவர்களின் நல்லடக்கம் தாமதமானதே தவிர, வேறு ஒன்றுமல்ல.


நாம் ஒவ்வொருவரும் மரணிக்கும்முன்பு மரண சாசனம் எழுத வேண்டும்.

அதில்... "நான் மரணமானால் குழந்தைகளே! என்னை சீக்கிரம் நல்லடக்கம் செய்து விடுங்கள். நீங்கள் வெகு தொலைவிலிருந்தால். நீங்கள் வரும்வரை என்னை நல்லடக்கம் செய்வதை தாமதிக்காதீர்கள். எனது முகத்தை பார்ப்பதைவிட உங்களின் துஆதான் எனக்கும், உங்களுக்கும் முக்கியம்"

இது மரண உயிலாக இடம் பெற வேண்டும்.

# காலக்கண்ணாடி

– தென்காசி மஸ்ஊது



## தேன் – தேனீ!

கஷ்மீர் இளைஞர் நசீம் என்பவர் அரசிடம் ரூ. 5 இலட்சம் கடன் வாங்கி தேனீ வளர்ப்புத் திட்டம் மூலம் பெரிய சாதனை படைத்துள்ளார். தினமும் 2 பெட்டிகள் தேன் மட்டும் விற்பனை செய்து வந்த இவர், அரசின் கடனுதவித் திட்டத் தால் இப்போது 200 பெட்டிகள் வரை தேன் விற்பனை செய்து வரு கிறார். பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி மாதிரி தேனீ வளர்ப்பு மூலம் "இனிமைப்புரட்சி" செய்துள்ளதாக மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார். – இந்து தமிழ்த் திசை (09.03.24)

"உமது இறைவன் தேனீக்கு உள்ளுணர்ச்சி உண்டாக்கி னான். மலைகளிலும், மரங்களிலும், உயர்ந்த கட்டடங்களி லும் நீ கூடுகளை அமைத்துக் கொள்."

"அன்றி நீ எல்லாவிதமான கனி(களின் மலர்)களிலிருந் தும் அருந்தி, உனது இறைவனின் எளிதான வழிகளில் (உன் னுடைய கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல்" இதனால் அதன் வயிற்றி லிருந்து பல நிறங்களையுடைய ஒரு பானம் (தேனீ) புறப்படு கின்றது. அதில் மனிதர்களுக்கு குணப்படுத்துதலுண்டு. நிச்சயமாக இதிலும் சிந்தித்து அறியக்கூடிய மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது" – அல்குர்ஆன் (16 : 68, 69)

## பெரும் பாவங்களின் பட்டியல்!

நபி (ஸல்) அவர்கள், "பேரழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங் களைத் தவிர்த்துவிடுங்கள்" என்று கூறினார்கள். மக்கள், "அல்லாஹ்வின் தூதரே! அவை யாவை?" என்று கேட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதும், சூனியம் செய்வதும், நியாயமின்றி கொல்லக் கூடாது என்று அல்லாஹ் தடை செய்துள்ள உயிரைக் கொல்வதும், வட்டி மூலம் வருவதை உண்பதும், அநாதைகளின் செல்வத்தை உண்பதும், போரின்போது புறமுதுகிட்டு ஓடுவதும், அப்பாவிகளான, இறைநம்பிக்கை கொண்ட, கற்புள்ள பெண் களின் மீது அவதூறு கூறுவதும்தான் (அந்தப் பெரும் பாவங்கள்)" என்று (பதில்) கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : ஸஹீஹுல் புகாரி)

# பழரசம் பருகி நீரிழப்பைத் தவிர்ப்போம்!

டாக்டர் இ. சுப்பராயன்

நம் உடல் 60% நீரால் நிரப்பப் பட்டுள்ளது. உடலின் ஒவ்வோர் அணுவும், அது சார்ந்த உறுப்பு களும் நீரின் உதவியுடன் ஒரு தொழிற்சாலையைப் போல் இயங்குகின்றன. இரத்தத்தில் உள்ள பிளாஸ்மா திரவத்தில் நீர் 90% உள்ளது. இரத்தத்தின் ஓட்டம் சீராக செயல்பட நீர் அத்தியாவசியமானது. சருமத் தில் நீரின் பங்கு 64%. இதனால், கோடையில் சுற்றுப்புற வெப்பம் உடலைத் தாக்காமல் சருமம் பாதுகாக்கிறது.

குழந்தைகள், முதியவர்களே நீர்ச் சத்துக் குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். முதுமையில் தாகம் ஏற்படும் உணர்வு குறையும்; பொதுவாக 'வாசோபிரசின்' என்கிற நாள மில்லாச் சுரப்பி ஹார்மோன், சிறுநீரகம் வழியாக அதிக நீரிழப்பு ஏற்படுவதைத் தடுக் கும். இந்த ஹார்மோன் முதியவர் களுக்குக் குறைவாகச் சுரப்ப தால் அவர்களுக்கு அதிகச் சிறுநீர் வெளியேறி உடலில் நீரிழப்பு அதிகரிக்கும். இத் துடன் சருமத்தின் வழியாகவும் கோடையில் வியர்வையாக நீர் வெளியேறுவதால் நீரிழப்பு பன்மடங்கு அதிகரித்து உடல் வற்றி பல பாதிப்புகளுக்கு முதியவர்கள் உள்ளாகின்றனர்.

**நீர் வெளியேறும் வழிகள்**

சிறுநீர், வியர்வை, மலம், கண்ணீர், சளி போன்றவற் றுடன் நுரையீரல் வெளி சுவாசத் தின் மூலம் நீராவியாக உடலிலிருந்து நீர் வெளி யேற்றப்படுகிறது.

சிறுநீரின் நிறம் இயல்பாக, வெளிர் எலுமிச்சைப் பழ நிறத் தில் தோன்றாமல் ஆப்பிள் பழ ரசநிறத்தில் இருந்தால் உடலில்

**உடல் உபாதைகள்**

ஆண்கள் ஒரு நாளைக்குச் சராசரியாக 3.7 லிட்டர் நீரும், பெண்கள் 2.5 லிட்டர் நீரும் பருக வேண்டும். கோடையில் குறைவாக நீர் அருந்தினால் உடலில் நீர் வற்றி தலைவலி, தலைச்சுற்றல், வாந்தி, குமட்டல், மயக்கம், உடல்வலி, சோர்வு, அசதி போன்ற தொல்லைகள் எளிதில் ஏற்படும். மேலும், உட லில் வறட்சி ஏற்பட்டு, இரத்த அழுத்தம் குறையும். உடல்வலி, தலைவலி உண்டாகும்.

நீரிழப்பு ஏற்பட்டுள்ளதை உணரலாம். இதைச் சரிசெய்ய பருகும் நீரின் அளவை அதிகரித்து உடல்நலம் பேண வேண்டும்.

## நீரிழப்பைத் தவிர்ப்பது எப்படி?

குறைந்தபட்சம் ஒருவர் ஒரு நாளைக்கு எட்டு டம்ளர் நீர் பருக வேண்டும் என்கிற நிலை போய், அவரவர் செய்யும் வேலை, வாழ்விடம், பணிச் சூழல், உணவுமுறை, தட்ப வெப்ப நிலை, அணிந்துள்ள ஆடை, உடல் உழைப்பு போன்றவற்றைப் பொறுத்து அருந்தும் நீரின் அளவு அதிகரிக்கவோ, குறையவோ செய்கிறது. 60 கிலோ எடையுள்ள ஒருவர் குறைந்த பட்சம் 2 லிட்டர் நீர் பருக வேண்டும் என்கிறது உலக சுகாதார நிறுவனம். எத்தனைப் பேர் இதைக் கடைபிடிக்கிறார்கள்?

## தேநீர் வேண்டாம்

கோடையில் அதிகமாக தேநீர் அருந்துவதைக் குறைக்க வேண்டும். இல்லையேல் தேநீரின் அளவைக் குறைக்க வேண்டும். தேநீர் அருந்துவதன் மூலம் சிறுநீர் கழிப்பது அதிகரித்து உடலில் நீரிழப்பு ஏற்படும். மேலும் காபியிலுள்ள கஃபின் என்கிற மூலக்கூறு உடலில் நீரிழப்பை ஏற்படுத்தி அயர்ச்சியை உண்டாக்கும்.

## பால் நல்லது

கோடையில் பசும்பால் உட்கொள்வதால் நீர்ச் சத்து கூடி,

## பழரசம் பருகலாம்

அனைத்துப் பழரசங்களையும் சர்க்கரை சேர்க்காமல் அருந்தும் பட்சத்தில் அவற்றிலுள்ள நீர்ச்சத்து, உயிர்ச்சத்து, நார்ச் சத்து, தாது உப்புகள், எதிர் ஆக்ஸிகரணிகள் போன்றவை உடலுக்கு நன்மை பயக்கும். தர்பூசணி, நீர் நிறைந்த பழம். கோடையில் நீரிழப்பை எளிதில் ஈடு செய்யும். திராட்சை, தக்காளி, ஆரஞ்சு, ஆப்பிள் அனைத்தும் எதிர் ஆக்ஸிகரணி நிறைந்தவை. நீரிழிவு நோய் பாதிப்புக்கு உள்ளனவர்கள், குறைந்த சர்க்கரையின் பின் விளைவைத் தவிர்க்க பழச்சாறு பருகுவது சிறந்த அணுகுமுறை. கடைகளில் புட்டியில் அடைத்து விற்கப்படும் பழரசங்களில் சர்க்கரையின் அளவு அதிகமாக உள்ளதால் அவை உடல் பருமனை அதிகரிக்கும். அதற்கு மாறாக மோர், அரிசிக் கஞ்சி, பழைய சாதம் போன்றவை சிறந்த நீராகாரங்கள்.

எலுமிச்சைச் சாறில் உயிர்ச் சத்து “சி” நிறைந்துள்ளது. இதில் சிறிதளவு உப்பைச் சேர்த்து அருந்தினால் கோடையில் ஏற்படும் உப்பு இழப்பை இது ஈடு செய்யும்.

நீரிழப்பு ஏற்படாமல் தடுக்கும். காரணம் : பாலை ஜீரணிக்க உடல் அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். பொதுவாகத் திரவ மாகப் பருகினால் அது உடனடி யாக உடலில் இருந்து வெளி யேற்றப்படும். ஆனால், பால் அதிக திரவத்தை உடலில் உறிஞ்சும் திறன் கொண்டது. பால் பருகுவதால் குறைந்தது நான்கு மணிநேரம் உடலில் நீர்ச் சத்தை தக்க வைத்து, சிறுநீர் கழிப்பது குறையும். கோடையில் குளிர்ந்த, கொழுப்பு அகற்றிய பாலைப் பருகினால் நீரிழப்பு தடுக்கப்படும். தேநீருக்கு மாற்றாக, கோடையில் குளிர்ந்த பாலைப் பருகலாம். மோரைத் தேவைக்கேற்ப குறைந்தபட்ச உப்பு கலந்து பருகினால், கோடையில் நீர் - உப்பு இழப்பு உடனடியாகச் சீராகி கோடைச் சோர்வு அகலும். மோர் ஒரு சிறந்த பானம். இதில் உயிர்ச் சத்தான வைட்டமின் டி, தாது உப்பு, கால்சியம், புரதம், மாவுச் சத்து, கொழுப்பு போன்ற அனைத்தும் உள்ளதால் கோடையில் உடல் சோர்வு எளிதில் சரிசெய்யப்படும்.

இளநீர், நுங்கு, பதநீர் போன்ற வற்றில் உடலுக்கு வேண்டிய பொட்டசியம், மக்னீசியம், சோடியம் போனற தாது உப்புகள் இணைந்திருப்பதால் கோடைச் சோர்வைப் போக்கி நன்மை பயக் கும். இளநீரில் வாழைப்பழத்தை விட மிக அதிகளவில் பொட்டா சியம் உப்புச் சத்து உள்ளது.

**சோயா பால்**

சோயா பீன்ஸ் பால், குறைந்த கலோரியுடன் கூடிய கொழுப்பு குறைந்த நீர் ஆகாரமாகும். இது பசும்பாலுக்கு இணை யான திரவமாகும். ஒரு கப் பசும்பாலில் 8 கிராம் புரதம் உள்ளது. என்றால், ஒரு கப் சோயா பாலில் 6 கிராம் புரதம் உள்ளது. சோயா பால், பாதாம் பால் போன்றவை உடலில் ஏற் படும் நீரிழப்பை ஈடு செய்யும்.

**எலும்பு சூப்**

அசைவ உணவில் எலும்பு சூப் தயார் செய்து பருகலாம். அதிலுள்ள அமினோ அமிலங் கள் எலும்பிலிருந்து கரைந்து சாறில் இறங்கும். அவை உடலில் ஏற்படும் உப்புக் குறைபாட்டை சீர் செய்யலாம். ஆனால், உடல் பருமன் உள்ளவர், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இதைத் தவிர்க்கலாம்.

**முதியோருக்கு முதலுதவி**

கோடையின் தீவிர வெயிலால் முதியவர்களுக்கு நாவறட்சி, கருவிழி உலர்தல், தோல் வறட்சி போன்றவை கடுமையான சோர்வை அளிக்கும். இவற்றைத் தடுக்க ஒரு டம்ளர் குடிநீரில் ஒரு தேக்கரண்டி சர்க்கரை, ஒரு சிட்டிகை உப்பு, ஓர் எலுமிச்சையின் பழச்சாறு கலந்து பருக வைத்தால் மயக்கம், சோர்வு போன்றவை தவிர்க்கப்படும்.

# அறிவுக்களஞ்சியம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கிராமவாசிக்கு செய்த உபதேசங்கள் :-

★ "போதுமென்ற தன்மையை உருவாக்கிக் கொள். செல்வந்தராக ஆகி விடுவாய்.

★ இறையச்சத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள். ஆலிமாக ஆகி விடுவாய்.

★ மனிதர்களுக்கு நலவை அடையச் செய். நீ சிறந்த மனிதனாக ஆகி விடுவாய்.

★ மற்றவர்களிடம் உம் தேவைக்காக கை நீட்டாதே; கண்ணியவானாக ஆகி விடுவாய்.

★ நீ விரும்புகிற நல்லதையே மற்றவர்களுக்கும் விரும்பு. நீ நீதமானவனாக ஆகி விடுவாய்.

★ அல்லாஹ்வின் மீது அதிகம் நம்பிக்கை வை; நீ வலிமையானவானாக ஆகி விடுவாய்.

★ அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய். அவனிடத்தில் முக்கிய மனிதராக ஆகி விடுவாய்.

★ உன்னுடைய ரிஜ்க் விசாலமாக எப்பொழுதும் ஒளுவுடன் இருப்பீராக.

★ உனது குணங்களை அழகாக்கிக் கொள். உன் இறை நம்பிக்கை பூரணமடையும்.

நூல் : கன்ஜுல் உம்மா முஸ்னத் அஹ்மத்

தருபவர் : **பா.ஹாஜி முஹம்மது,** சேந்தமங்கலம்.

---

## உழைப்பவர்களே உன்னதமானவர்கள்...!

"(மனிதர்களே!) உங்கள் இறைவன் எப்படிப்பட்டவன் என்றால் அவனுடைய அருட்கொடைகளை நீங்கள் தேடிச் சம்பாதித்துக் கொள்ளும் பொருட்டுக் கப்பலை அவனே கடலில் செலுத்துகிறான்.'' – அல்குர்ஆன் (17:66)

"ஒருவர் தம் கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒரு போதும் உண்ண முடியாது. தாவூத் நபி அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தனர்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி - 2072)

# மனைவி எனும் மந்திரி

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

எவரும் எழுந்து காரியம் ஆற்றாததைக் கண்ட இறைத் தூதர் கவலைப்பட்டார்கள். அது ஒரு பொறுப்புள்ள தந்தையின் நியாயமான கவலையாக இருந்தது. அக்கவலையைச் சுமந்து கொண்டு தம் கூடாரத்திற்குள் நுழைந்தார்கள். அங்கு அவர்களின் அன்பின் வாழ்க்கைத் துணைவி உம்முஸல்மா (ரளி) இருந்தார்கள். இறைத்தூதரின் சோகம் கண்டு துடித்திட்ட அப் பெண்ணரசி, "அண்ணலே! என்ன சோகம்? ஏன்? என்ன நடந்தது? முகமெல்லாம் வாடி இருக்கின்றதே!" ஒரு நல்ல மனைவியின் இலக்கணமான அப்பெருமகள் பரிவுடன் கேட்டார். நடந்தவற்றை எடுத்துக் கூறிய நபிகளார், "எனது பேச்சு எவரது செவியிலும் விழுந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் அப்படியே உறைந்துவிட்டாற்போல் இருக்கின்றனர்" என வருத்தத்துடன் கூறினார்கள்.

"அப்படியா! என வியந்த அண்ணலின் வாழ்க்கைத் துணைவியாம் உம்முஸல்மா (ரளி) அண்ணலே! அல்லாஹ்வின் தூதரே! இப்போதே செல்லுங்கள். எவரிடத்தும் எதுவும் பேசாதீர்கள். முதலில் உங்களது பிராணியை இறைவனுக்காக அறுத்து குர்பான் செய்யுங்கள்" என உரிமையுடன் ஆலோசனை கூறினார்.

எழுந்தார்கள் அண்ணலார். ஹுதைபிய்யாவின் திறந்த வெளிக்கு வந்தார்கள். அடையாளமிடப்பட்டுக் கட்டப்பட்டிருந்த தமது ஒட்டகத்தைப் பற்றினார்கள். மகத்தானவனும் மாபெரியோனுமாகிய எல்லாம் வல்ல ஏக இறைவனாம் அல்லாஹ்வின் திருப்பெயரால் எனும் பொருள் பொதிந்த "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" எனும் வாசகத்தை உரத்துக் கூறி ஒட்டகத்தை அறுக்கத் துவங்கினார்கள்.

அண்ணலின் உரத்த முழக்கத்தைக் கேட்டு உத்தமத் தோழர்கள் அப்படியப்படியே எழுந்தார்கள். அண்ணலை எப்படிக் கண்டார்களோ அவ்வாறே தத்தம் ஒட்டகங்களை அறுத்து குர்பான் (அர்ப்பணம்)

செய்ய ஆரம்பித்தார்கள். எல்லாரின் நாவும் "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர், பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என முழங்கிக் கொண்டிருந்தது. முந்தைய மகிழ்ச்சி, பெருமிதம், உற்சாகம் களை கட்டியது. திரும்பிப் பார்த்த இறைத்தூதர் பூரித்துப் போனார்கள். தம் தோழர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியது இறைத் தூதருக்குப் பெரிதும் உற்சாகத்தைத் தந்தது.

ஹுதைபிய்யாவே குர்பானிக் களமாகக் காட்சியளித்தது. உணர்ச்சிமிக்க உத்தமர்களால் ஓங்கி முழங்கப் பட்ட இறை மகத்துவப் பெரு முழக்கம் தக்பீர் எல்லாத் திசைகளிலும் எதிரொலித்தது. ஹுதைபிய்யாவின் குன்றுகளில் பட்டுத் தெறித்தது. பெருமானாருக்கோ பெருமிதம் தாங்க முடியவில்லை. இறைவனுக்கு நன்றி கூறித் துதித்துக் கொண்டிருந்தார்கள். அல்ஹம்து லில்லாஹ்... அஷ்ஷுக்ருலில்லாஹ்...

தோழர்களிடத்தில் நல்ல மாற்றங்களைக் கண்ட நபிகளார் மனதிற்குள் தம் மனைவியைப் பெரிதும் பாராட்டிக் கொண்டார்கள். உண்மையில் மனைவி ஒரு மந்திரிதான். இவ்வுலகைப் பொறுத்தவரை நல்ல மனைவியைக் காட்டிலும் சிறந்த பொருள் வேறில்லை என்பது அண்ணலாரின் கருத்தாகும். பொதுவாக பெண்கள் நான்கு காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகின்றனர். அந்தப் பெண்ணின் பணம் - அழகு - குலம் - மார்க்க நெறி ஆகியவற்றுக்காக. இளைஞனே! மார்க்க நெறியுள்ள நற்குண மிக்க மங்கை நல்லாளை மணந்து வாழ்வில் வெற்றி பெறுவாயாக! என இறைத்தூதர் ஆலோசனை வழங்கினார்கள்.

"நல்ல மனைவியைப் பெற்றவர் ஈருலகப் பேற்றைப் பெற்றுவிட்டார்" எனவும் நவின்றார்கள். ஆக நல்ல மனைவிக்கு நபிகளார் தந்துள்ள முக்கியத்துவத்தின் கருத்து இதுதான். மனைவி ஆணின் வாழ்க்கையில் அனைத்து நிலைகளிலும் தவிர்க்க முடியாததும் அவசியமானதுமான உயிரிலும், உணர்விலும், உள்ளத்திலும் இரண்டறக் கலக்கும் ஜீவன். நற்பண்பும், நற்குணமும், மார்க்க நெறியும் உள்ளவராக இருந்தாலொழிய இது சாத்தியமாகாது.

"நான் மனைவியின் பேச்சைக் கேட்கவே மாட்டேன்" என்று வறட்டுப் பிடிவாதம் செய்து, முரட்டுத்தனமாக இருந்து பெரிதாகப் பேசிக் கொள்வர் சிலர். இவர்கள் மனைவியிடம் சிரித்துக் கூடப் பேசமாட்டார்கள். குடும்பத்தினிடம் மனம் விட்டு கலகலப்

பாக இருக்க மாட்டார்கள். எப்போது பார்த்தாலும் வீட்டில் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு சிடுசிடுவென்று சீரியஸாகவே இருப்பர். இவர்கள் சிரித்துப் பேசுவது என்பது வெளியில் மற்றவர்களிடம் தான் இருக்கும். காலப்போக்கில் மனைவியும், பிள்ளைகளும் இவரை வெறுத்துவிடுவர். இவர்கள் வீட்டுக்குள் வருவதையே எரிச்சலாக பிரச்சனை போல் எண்ணுவர். இன்னும் சிலர் இருக்கின்றனர் "மனைவி சொல்லே மந்திரம்" என நம்பிக்கை கொண்டு மனைவி எது சொன்னாலும் அதை அப்படியே செய்திடும் இயல்பினர். "ஏன் வீண் பிரச்சனை? அனுசரித்துப் போவோம்" என எண்ணிக் கொண்டு எல்லாவற்றிற்கும் தலையாட்டிக் கொண்டு அஞ்சி, அநியாயத்திற்கு அடிபணிந்து செல்லும் அடிமைத்துவ மனநிலையினர். வாழ்க்கையில் விட்டுக் கொடுக்க வேண்டியது தான். அனுசரித்துப் போக வேண்டும் தான். ஆனால் அது ஆண்மைக்கு இழுக்குத் தேடித் தரும் அளவுக்கு இருந்திடல் கூடாது. ஆணின் தோற்றம் அவமானப்படும் வகையில் அமைந்திடல் அழகாகாது.

ஆனால் இதில் ஓர் உண்மையைப் பெண்கள் மறந்திடல் கூடாது. கணவனை மதிப்பில்லாமல் நடத்தும் பெண்ணை ஏனைய பெண்கள் மட்டுமல்ல. எவரும் மதிக்க மாட்டார்கள் என்பதுதான் அந்த உண்மை. கணவனின் பணிவை பலவீனமாக, அவரது அடக்கத்தை அடிமைத்தனமாகக் கருதி, அலட்சியப்படுத்தி, அடக்கி ஆள நினைக்கும் பெண், பெருமைக்குரியவளல்லள். ஆணோ, பெண்ணோ யாராயினும் நடுநிலைப்போக்குடன் நடந்து கொள்வதே அவரவருக்கு சிறப்பைத் தரும். நடுநிலையுடன் நடந்து கொண்டதில் நபிகளார் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள். உரிய நேரத்தில் தனது மனைவி வழங்கிய சமயோசிதமான ஆலோசனையை அப்படியே ஏற்றதால் பெரும்பலன் விளைந்தது. மனைவி சொல்லி நாம் கேட்பதா எனும் மனநிலை மாநபியிடம் இருக்கவில்லை என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

ஒட்டகங்கள் அனைத்தும் அறுத்து குர்பான் செய்யப்பட்டன. பலர் தலைமுடியை மழித்துக் கொண்டனர். சிலர் சிறிதளவு முடியை வெட்டிக் கொண்டனர். இதுவும் அனுமதிக்கப்பட்டிருந்த மரபாக இருந்தது. அனைவரும் அணிந்திருந்த இஹ்ராம் ஆடையைக் களைந்து இயல்பான வேற்றுடைகளை அணிந்து கொண்டனர். மழிக்கப்பட்ட - கத்தரிக்கப்பட்ட கருமை முடிக்

கற்றைகள் பெருங்குவியலாய் குவிந்திருந்தன. அங்கு குழுமியிருந்தோர் ஆயிரத்து நானூறுக்கும் மேற்பட்ட புனிதப் பயணிகளல்லவா?

திடீரென்று ஒரு பெருங் காற்று வீசியது. அந்த அதிசய மான பாலைவனக்காற்று ஆங்கு குவிந்து கிடந்த முடிக்கற்றை களை அள்ளிக் கொண்டு புனித ஆலய வளாக எல்லை யின் திசை நோக்கி அடித்துச் சென்றது. இதைக் கண்ணுற்ற தோழர்கள் மன நிறைவு அடைந்தனர். தமது புனிதப் பயணம் இறைவனால் அங்கீகரிக்கப்பட்டதற்கான அறிகுறியாக ஒரு வேளை இது இருக்கலாம் என எண்ணினர். புனித ஆலய வளாக எல்லைக்கு வெளியே கடமையாற்று கின்றோமே! இதை இறைவன் ஏற்றுக் கொள்வானா? எனும் சலன சஞ்சலம் பெரும்பாலோ ரின் இதயத்தில் இருந்தது. அந்த சலன சஞ்சலத்தை வீசிய காற்று அடித்துக் கொண்டு போயிற்று. ஓரளவு அமைதியடைந்தனர்.

மதீனாவை நோக்கிப் பயணம் தொடங்கியது. அண்ணலின் - அவர்களின் தோழர்களின் பயணம் எப் போதுமே முறையாக கண்ணியமாக இருக்கும். உண்மையில் தோழர்களுக்கு ஓரளவு நிம்மதிதான். முந்தைய சலனமோ சஞ்சலமோ எதுவுமே அவர்களின் உள்ளத்தில் துளி யும் இருக்கவில்லை. எல்லா ரும் உற்சாகத்துடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் ஹள்ரத் உமரின் (ரளி) முகம் இன்னும் சோகமாகவே இருந்தது. அவரது உள்ளத்தில் ஒருவிதக் கவலை அவரைப் போட்டுத் துளைத்து எடுத்துக் கொண்டிருந்தது. உள்ளம் பிழிந்தது. உள்ளுணர்வு கவலையால் துடித்தது.

இறைத்தூதரிடம் நாம் அப்படிக் கேட்டிருக்கக் கூடாது. என்னதான் நடந்திருந்தாலும் நான் அப்படி நடந்திருக்கக் கூடாது. உமரின் அடிமனதும் முடிமனதும் அப்படியே பிழிந்து கொண்டிருந்தது. பெரும் போர்க்களமாய், போராட்டத் திடலாய் அவரைப் பெரும் பாடு படுத்தியது. இனி இறைத்தூதர் நம்மோடு முகம் கொடுத்துப் பேசுவார்களோ.... பேச மாட்டார் களோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி விம்ம ஆரம்பித்தார்.

பயணத்தினூடே பெருமா னாரைப் பார்க்க முடிந்தது. ஆனால் அண்ணலார் உமரைக்

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**

**94420 56547**

கண்டு கொள்ளவில்லை. இது யதார்த்தமாய் நடந்தது. ஆனால், இது உமரின் உள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. அவரது எண்ணத்தை மென்மேலும் அதிகப்படுத்தி விட்டது. தன்னைத்தானே நொந்து கொண்டார். பயணம் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. சில மணித்துளிகள் கழிந்தன.

விரைந்து வந்த ஒருவர் "உமரே! உன்னை இறைத் தூதர் அழைக்கின்றார்கள்" என்றார். அவ்வளவுதான் உமரின் உள்ளத்தில் யாரோ ஈட்டி கொண்டு இடித்தது போல, விழிகளில் நெடிய ஊசி கொண்டு குத்தியது போல இருந்தது. "உமரே இத்தோடு நீ தொலைந்தாய்! இனி உனக்கு என்ன இருக்கிறது?" என தனக்குள் சொல்லிக் கொண்டு உத்தமரிடம் சென்றார்.

அண்ணலின் முகம் பளிச்சென வெளிச்சமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது. ஒளிமயமாய் இலங்கிய அவர்களது நிலவு வதனம் உமரை மகிழ்ச்சியின் வெள்ளத்தில் ஆழ்த்தியது. "உமரே! இப்போது இறைவன் சில திரு வசனங்களை எனக்கு அருளினான். அது இந்த உலகமனைத்தைக் காட்டிலும் பெரும் மதிப்புள்ளது" என பெருமானார் பூரித்தார்கள்.

## மகத்தான வெற்றிக்கு கட்டியம் கூறிய மாமறை வசனங்கள்

உமரின் விழிகளும், செவிகளும் விந்தையில் மயங்கிக் கிடந்தன. எதிரில் தென்படுவது கனவா! நனவா! எனத் தெரியாது. அப்படியே இயங்கமறந்து நின்றன. துளியும் வெறுப்பைக் காட்டாது இறைத்தூதர் இயல்பு நிலைக்குத் திரும்பியது மனந்திறந்து அளவளாவிப் பேசியது உமரை திகைக்க வைத்தது. படிந்த இடம் தெரியாமல் உமரின் கவலை பறந்தோடியது. அப்போது உமர் (ரளி) அடைந்த மகிழ்ச்சியை எழுத்தில் வடித்திடல் எளிதல்ல.

உண்மைப் பாசம் - உள்ளன்புள்ளோர் - தமக்கு நெருக்கமான - பிரியமான நட்புக்குரியோர் எவரேனும் திடீரென்று பேசாமலோ, முகம் சுளித்துக் கொண்டோ, திருப்பிக் கொண்டோ சென்றால் மிகவும் வருத்தப்படுவர். கவலையால் அவர்களது உள்ளம் பிழியும்; வாடிவிடுவர். ஏனோதானோவென பேசுவோர்.... நட்பு கொண்டிருப்பது போல பாவனை செய்வோர்... அன்பு, பாசம் எதுவுமில்லாமல் பழகுவோர் எவர் பேசினாலும் பேசாவிட்டாலும் கவலைப்படமாட்டார்கள்... கண்டுகொள்ளவு மாட்டார்கள்.

ஆனால், அண்ணலிடம் தோழர்கள் வைத்திருந்த

அன்பும், நட்பும், பாசமும் வியக்கத்தக்கவை. உலக வரலாற்றில் எங்கும் காண முடியாதவை. அதிலும் உமர் (ரளி) போன்ற தோழர்கள் உத்தமர் மீது உரிமையுடன் கூடிய உள்ளன்பு வைத்திருந்தார்கள். தங்களின் உயிர், உடைமை, மனைவி, மக்கள், இவ்வுலகின் எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமான நேசம் வைத்திருந்தார்கள். இத்தகு நேசத்திற்குரியவர் பேசாதிருப்பதை எவர்தான் விரும்புவர்? யாரால் தாங்க முடியும்?

உள்ளம் மகிழ்ச்சியில் துள்ள, முகம் ரோஜாவாய் மலர, பெருமிதப் புன்னகையோடு உமர் அண்ணலை நோக்கினார். அடேயப்பா! கவலைக்குப்பின் வரும் மகிழ்ச்சி எத்தகு இதமானது! சோகத்திற்குப்பின் கிடைக்கும் சந்தோஷம் எத்தகு சுகமானது!

இறைவனால் அருளப்பட்ட திருமறை வசனங்களை இறைத்தூதர் ஓதிக் காட்டினார்கள்.

**("தூதரே!) நாம் உமக்கு பகிரங்கமான வெற்றியை அளித்து விட்டிருக்கின்றோம்? உம்முடைய முந்திய பிந்திய குறைகளை அல்லாஹ் மன்னிப்பதற்காகவும், அவன் தனது அருட்கொடையை உம் மீது நிறைவு செய்து உமக்கு நேர்வழியைக் காட்டுவதற்காகவும், மகத்தான உதவியை உமக்கு வழங்குவதற்காகவும் தெளிவான இவ்வெற்றியை அளித்தான். இறை நம்பிக்கையாளர்களின் இதயங்களில் நிம்மதியை [ஸகீனத்] இறக்கியருளினான். அவர்கள் தங்கள் நம்பிக்கையுடன் இன்னும் அதிகமான நம்பிக்கையை [ஈமான்] ஏற்படுத்திக் கொள்வதற்காக, வானங்கள் [பூமியிலுள்ள படைகள் யாவும் அல்லாஹ்வின் அதிகாரத்தின் கீழ் உள்ளன. மேலும் அவன் மிக அறிந்தவனும், நுண்ணறிவாளனாகவும் இருக்கிறான்.**

- அல்குர்ஆன் (48 : 1-4)

மாபெரும் தோல்வி அடைந்து விட்டோம், ஜீரணிக்க முடியாத கோழைத்தனத்தில் வீழ்ந்து விட்டோம், ஏற்றுக் கொள்ள முடியாத அநீதிக்கு அடிபணிந்து விட்டோம் எனும் மனநிலையுடன் பயணப்பட்டுக் கொண்டிருந்த இறை நம்பிக்கையாளர்களுக்கு "தெளிவான வெற்றியைத் தந்து விட்டோம்" என இறை மறை வசனம் தொடங்குகிறது. தோழர்கள் வியந்து போயினர். நடந்து முடிந்த ஹுதைபிய்யா உடன்படிக்கையை நாம் பெரும் தோல்வி என எண்ணிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் எல்லாம் வல்ல இறைவனோ மகத்தான வெற்றி என அறிவிக்கின்றானே! உமர் துளி நேரம் உறைந்து போனார்.

இறைத்தூதரால் இறை வசனங்கள் தொடர்ந்து ஓதப் பட்டன.

"இறை நம்பிக்கையாளர்கள் உம்மிடம் அந்தக் கருவேல மரத்திற்குக் கீழே சத்தியப் பிரமாணம் செய்து கொண்டிருந்த போது அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தி கொண்டான். அவர்களின் உள்ளங்களின் நிலையை அறிந்திருந்தான். இதனால், அவன் அவர்கள் மீது "ஸகீனத்" எனும் நிம்மதியை இறக்கியருளினான். விரைவில் கிடைக்கும் வெற்றியையும் அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான். ஏராளமான போர்ச்செல்வங்களையும் அவர்களுக்கு வழங்கி னான். அவற்றை அவர்கள் விரைவில் பெற்றிடுவார்கள். அல்லாஹ் மிக வல்லமை மிக்கவனாகவும் நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான்"

- அல்குர்ஆன் (48 : 18, 19)

இறைத்தூதரின் செயல்களனைத்தும் இறை அறிவிப்பின் அடிப்படையில், அங்கீகாரத்திலேயே நடைபெற்றிருக்கின்றன என்பதை இத்திருவசனம் எடுத்துக்காட்டுகின்றது. கருவேல மரத்திற்கடியில் இறைத்தூதரின் திருக்கரங்களில் கரம் பதித்து உடன்படிக்கை செய்து கொண்ட அனைவரும் இறைப் பொருத்தத்திற்குரியவர்களே! எனவும் இவ்வசனம் சுட்டு கிறது. அடுத்துக் கிடைக்கவிருக்கும் கைபர் வெற்றி, முஸ்லிம்கள் அடையவிருக்கும் போர்ச் செல்வங்கள் பற்றியும் உணர்த்தி முன்னறிவிப்பு செய்கிறது.

இதில் பெரிய விந்தை என்னவென்றால், எதற்கெடுத்தாலும்வாளைத்தூக்கி சண்டை போடுவதும், போர்வெறி கொண்டு அலைவதும் இயல்பாகிப் போன குறைஷியரின் உள்ளத்தில் தமது நகருக்கருகில் துணிச்சலுடன் கூடாரமடித்துத் தங்கியிருந்த முஸ்லிம்களைத் தாக்கவோ சண்டையிடவோ முன்வராதது தான்! ஒருவேளை இந்தக் கோழைத்தனம் அவர்களது உள்ளத்தில் இறைவன் போட்டதாக இருக்கலாம். உண்மையில் முஸ்லிம்களைக் காட்டிலும் அந்த மக்காவாசிகள் அனைத்து நிலையிலும் பலமிக்கவர்களாகவே இருந்தனர். அப்படி இருந்தும் உடன்பாட்டிற்கு ஸுஹைலை அனுப்பி வைத்தனர்.

முஸ்லிம்களின் வீர எழுச்சியும், தன்மான உணர்ச்சியும் பொங்கிக் கொண்டிருந்தாலும் அவை கட்டுப்படுத்தப் பட்டிருந்தன.

புனித ஆலயத்தில் நுழைவதாக அண்ணல் கண்ட கனவு என்ன ஆனது? அதன்

பொருள் என்ன? இந்தக் கேள்வி தோழர்களின் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. இதற்கான விளக்கமாக இந்த வசனம் அமைந்தது.

"அல்லாஹ் தன் தூதருக்கு உண்மையான கனவையே காட்டியிருந்தான். அதுவோ முற்றிலும் சத்தியத்திற்கு ஏற்பவே இருந்தது. அல்லாஹ் நாடினால் நிச்சயம் நீங்கள் புனிதப் பள்ளிவாசலில் நுழைவீர்கள். உங்கள் தலை முடியை மழிப்பீர்கள் அல்லது குறைப்பீர்கள். மேலும் உங்களுக்கு எந்த அச்சமும் இருக்காது. நீங்கள் எதை அறியாதிருந்தீர்களோ அதை அவன் அறிந்திருந்தான். எனவே அந்தக் கனவு நிறைவேறுவதற்கு முன்பாக அண்மையிலுள்ள இந்த வெற்றியை அவன் உங்களுக்கு வழங்கியுள்ளான்"

– அல்குர்ஆன் (48 : 27)

தோழர்களனைவரும் பெரும் மகிழ்வெய்தினர். தூயோன் அல்லாஹ்வுக்கு நன்றி கூறினர். நல்ல வேளை தன்னைக் குறித்து கண்டனம் எதுவும் வரவில்லை என உமர் (ரளி) நிம்மதி அடைந்தார். மக்கா வெற்றியின் முன்னறிவிப்பாகவும் இது அமைந்தது என்றும் கொள்ளலாம்.

(தொடரும்)


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி** (ரஹ்)
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ** (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்



**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

**அலுவலக அலைபேசி எண் :**
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com



**ஓராண்டு சந்தா ரூ.300/-**
**தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :**
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
**M.MOHAMED ISMAIL**
S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
**M.MOHAMED ISMAIL**
S.B. A/c No. 175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

தொடர் : 5

# இஸ்லாம் கூறும் நாவடக்கம்

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

ஒருவர் பேசும்போது அவர் பேசி முடிக்கும்வரை மற்றவர்கள் குறுக்கிட்டு பேசக் கூடாது என்று மாணவர்களுக்கு மிச்சிகன் மாநில பல்கலைக் கழகம் (Michigan State University) பயிற்சியளித்துவருகிறது. ஆனால்,இந்த முறையை 1400 ஆண்டுகளுக்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் கடைபிடித்திருக்கிறார்கள்.

“நபி (ஸல்) அவர்கள் நன்மையானவற்றைத் தவிர வேறெதுவும் பேசமாட்டார்கள். யாராவது பேசத் தொடங்கினால் அவர் முடிக்கும் வரை அவருக்காக அமைதி காப்பார்கள்”

(ஆதாரம் : ஷமாயிலுத் திர்மிதீ, அஷ்ஷிஃபா)

ஒருவர் பேசும்போது மற்றவர் குறுக்கிட்டு பேசுவது ஒழுக்கமின்மையை குறிக்கின்றது. அவ்வாறு குறுக்கிட்டால் பேசிக் கொண்டிருப்பவரின் எண்ண வோட்டம் (flow of thoughts) தடைபடும். பேசுபவர் சொல்ல வருவதை மறந்து விடக்கூடும். ஒருவர் பேசுவது மற்றவருக்கு பாதகமாக இருந்தால் பேசுபவரை திசை திருப்ப சிலர் குறுக்கிட்டு பேசுவார்கள் அல்லது யாரையாவது குறுக்கிட்டு பேச தூண்டி விடுவார்கள். இது ஒரு தந்திரமாகும். ஒருவருடைய பேச்சு மற்றவர்களால் பாராட்டும்படியாக இருக்கும்போது பொறாமையில் மற்றவர் குறுக்கிட்டு பேசும் சாத்தியக்கூறு இருக்கின்றது. சிலர் தங்களை அறிவாளியாக காட்டிக் கொள்வதற்கு ஒருவர் பேசும்போது குறுக்கிட்டு கேள்விகளை கேட்பதும் உண்டு. இதனால் ஒருவர் பேசி முடிந்ததும் கேள்வி நேரம் என்று ஒரு நேரம் ஒதுக்கப்படுகிறது என்று மென் திறன் நிபுணர் கேப்ரியல் லாரன்ஸ் கூறியுள்ளார்.

ஆகவே, ஒருவர் பேசும் போது அவர் பேசி முடிக்கும் வரை மற்றவர்கள் குறுக்கிட்டு பேசுவதற்கு இஸ்லாத்தில் அனுமதி கிடையாது.

வசவு சொற்கள் என்று சொல்லப்படும் கெட்ட வார்த்தைகளை பேசுவது ஒரு வகையான ஒழுக்கக் கேடாகும். கெட்ட வார்த்தைகளை பேசுபவர்கள் நாகரீக சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகிறார்கள். அந்த

ஆளை கூப்பிட வேண்டாம். நமக்கு தெரிந்த நாலு பேர் வரு வாங்க. அவங்க முன்னாலே அந்த ஆள் கன்னா பின்னான்னு பேசினா நல்லா இருக்காது என்று மற்றவர்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். கௌரவ மான மனிதர்கள் கூடுமிடத்தில் குதர்க்கமாய் இழிவாக பேசுபவர் களை யாரும் அழைப்பதில்லை. கெட்ட வார்த்தைகளைப் பேசி திரிபவர்களுக்கு சமூகத்தில் கண்ணியம் இருப்பதில்லை. கெட்டவார்த்தைகளை பேசுபவர் கள் சுய கௌரவம் இல்லாதவர் களாக இருப்பார்கள் என்று உளவியல் நிபுணர் டேவிட் லோகன் கூறுகிறார். மேலும் கெட்ட வார்த்தைகளைக் கொண்டு குழந்தைகளை திட்டு வது அவர்களின் சிந்தனை வளர்ச்சியைப் பாதிக்கும்.

மூளையின் முன் மடல்கள் (Brain's frontal lobes) என்ற பகுதியில் அமைந்திருக்கும் பகுத்தாய்வு மையங்கள் (reasoning centers) கெட்ட வார்த்தை களினால் திட்டுவதால் பாதிக்கப் படுகின்றன. மேலும் கெட்ட வார்த்தைகள் மூளையிலுள்ள அமிக்டாலா (Amygdala) என்ற உறுப்பில் அமைந்திருக்கும் மூளையின் பயம் மையத்தில் (fear center of the brain) செயல் பாடுகள் அதிகரிப்பதால் குழந்தைகள் சுயமாக சிந்திக் கும் திறனில் பாதிப்பு ஏற்படும். குழந்தைகளுக்கு தாழ்வு மனப்பான்மை உண்டாகும். நேர்மறையான வார்த்தைகள் மூளையிலுள்ள பகுத்தாய்வு மையங்களை வளப்படுத்துவ தால் குழந்தைகளின் சிந்தனை சக்தியும் வளமாகும் என்று மூளை சிகிச்சை நிபுணர் டாக்டர் க்ரேஸ் ஒலிவியா கூறியுள்ளார். உதாரணமாக இப்படியெல் லாம் செய்தால் நீ உருப்படாமல் போய் விடுவாய் என்று சொல் வதை விட இப்படியெல்லாம் நீ செய்யாமல் இருந்தால் நீ வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வருவாய் என்று நேர்மறை வார்த்தைகளை பயன்படுத்துவது குழந்தைகளின் மனவளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் டாக்டர் க்ரேஸ் ஒலிவியா கூறியுள்ளார்.

நபி(ஸல்) அவர்கள் எப்போதும் கெட்ட வார்த்தைகளை பேசிய தும் இல்லை. யாரையும் கெட்ட வார்த்தைகளால் ஏசியதும் இல்லை. அவர்கள் யார் மேலும் சாபமிட்டதும் இல்லை.

**“நபி (ஸல்) அவர்கள் ஏசுபவ ராகவோ, கெட்டவார்த்தைகள் பேசுபவராகவோ, சாபமிடுபவ ராகவோ இருக்கவில்லை. எங் களில் ஒருவரை கண்டிக்கும் போது கூட ‘அவருக்கு என்ன நேர்ந்தது? அவரின் நெற்றி மண்ணில் படட்டும்’ என்றே கூறுவார்கள்”**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள்
(ஸஹீஹ் புகாரி 6031)

நபி (ஸல்) அவர்கள் எப்போதும் யாரையும் சாபமிடுபவர்களாக இருக்கவில்லை. தவ்ஸ் குலத்தார் இஸ்லாத்தை ஏற்க மறுத்துவிட்டனர். அவர்களுக்கெதிராகத் தாங்கள் பிரார்த்தியுங்கள்" என்று நபி (ஸல்) அவர்களிடம் ஹள்ரத் துஃபைல் பின் அம்ர் (ரளி) அவர்கள் கேட்டுக்கொண்டபோது தவ்ஸ் குலத்தாருக்கு எதிராக பிரார்த்தனை செய்யாமல் அவர்கள் நேர்வழி பெற வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள்.

"[தவ்ஸ் குலத்தைச் சேர்ந்த] துஃபைல் பின் அம்ர் [ரளி] அவர்கள் அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! தவ்ஸ் குலத்தார் [இறைவனுக்கு] மாறு செய்து [இஸ்லாத்தை ஏற்க] மறுத்துவிட்டனர். அவர்களுக்கெதிராகத் தாங்கள் பிரார்த்தியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே அவர்களுக்கெதிராக நபி [ஸல்] அவர்கள் பிரார்த்திப்பார்கள் என்று மக்களும் எண்ணினர். [ஆனால்] நபி [ஸல்] அவர்கள், இறைவா! தவ்ஸ் குலத்தாரை நேர்வழியில் செலுத்துவாயாக! அவர்களை [எம்மிடம்] கொண்டு வந்துவிடுவாயாக" என்று [நல்வழி வேண்டிப்] பிராத்தித்தார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(ஸஹீஹ் புகாரி 6397)

ஒரு கிராமவாசி பள்ளிவாசலுக்குள் சிறுநீர் கழித்துவிட்டார். உடனே மக்கள் அவரைக் கண்டித்தனர். ஆனால் நபி (ஸல்) அவர்கள் அந்த கிராமவாசியை கடிந்து கொள்ளவில்லை. அவரைத் திட்டவும் இல்லை. அவரை விட்டு விடுங்கள். சிறுநீர் மீது தண்ணீரை ஊற்றி சுத்தம் செய்யுங்கள் என்று கூறி, கடினமாக நடந்து கொள்ள வேண்டாம்; நளினமாக நடந்து கொள்ளுங்கள் என்று மக்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். இப்படிப்பட்ட பொறுமைமிக்க நாவடக்கத்தை நபி (ஸல்) அவர்கள் கடைபிடித்திருக்கிறார்கள்.

"ஒரு கிராமவாசி எழுந்து பள்ளிவாசலுக்குள் சிறுநீர் கழித்துவிட்டார். உடனே மக்கள் அவரைக் கண்டித்தனர். நபி [ஸல்] அவர்கள், 'அவரை விட்டு விடுங்கள்; அவர் கழித்த சிறுநீர் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றி விடுங்கள்.

நளினமாக நடந்து கொள்ளவே நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள். கடினமாக நடந்து கொள்ள நீங்கள் அனுப்பபடவில்லை" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(ஸஹீஹ் புகாரி 220)

(தொடரும்)

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

**மாபார் கலகம்**

டெல்லிக்கு வெகு தூரத்திலுள்ள மாபாரில் நடைபெறும் கலகத்தைக் கட்டுப்படுத்த தொலைவிலிருந்த அரசால் இயலாத நிலை ஏற்பட்டது.

**தக்காணத்து குர்ஸ்ஹாஸ்ப்**

பஹாவுத்தீன் குர்ஸ்ஹாஸ்ப் முதலில் கலகத்தை ஆரம்பித்தார். அதனைத் தக்காணத்தில் அடக்கினார் முஹம்மது பின் துக்ளக். அப்போதே திறமையாகச் செயலாற்ற பேரரசின் மையத்தில் தலைநகரை அமைக்க முடிவெடுத்தார்.

**உயரிய நோக்கு**

உயரிய நோக்குடன் தலைநகர் மாற்றும் திட்டத்தை முஹம்மது பின் துக்ளக் மேற்கொண்டார்.

**அவசர முடிவல்ல**

அவசர அவசரமாக தலைநகரை மாற்றும் திட்டத்தை முஹம்மது பின் துக்ளக் நிறைவேற்றவில்லை.

**ஆலோசனை**

தலைநகரை மாற்றுவது குறித்து முஹம்மது பின் துக்ளக் தனது ஆலோசகர்களை அழைத்து அவர்களது யோசனைகளைக் கேட்டார். அவரது அமைச்சர்கள் தௌலதாபாத்தை விட உஜ்ஜயினி பொருத்தமாக இருக்கும் என்றனர். ஆனால் அதனை முஹம்மது பின் துக்ளக் நிராகரித்தார் என்கிறார் பெரிஷ்டா. தேவகிரியை நன்கு அறிந்த முஹம்மது பின் துக்ளக் அதனை மற்றுமொரு தலைநகராக்க முயன்றார்.

**இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டம்**

தேவகிரிக்கு மக்கள் குடிபெயர்ந்து சென்றது ஹிஜ்ரி 727ஆம் ஆண்டு அதாவது கி.பி.1326 - 1327ஆம் ஆண்டுகளில் துவங்கியது, இத்திட்டம் படிப்படியாக இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரே அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

It appears that the idea was conceived at least two years before it was actually executed.

**இரண்டாவது தலைநகர்**

தேவகிரியை (தௌலதாபாத்) டெல்லி சுல்தானியத்தின் இரண்டாவது தலைநகராக்க வேண்டும். டெல்லிக்கும், புதிய தலைநகருக்கு

மிடையேயான செய்தி மற்றும் பொருள் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும். தௌலதாபாத் தலைநகருக் குரிய அந்தஸ்தைப் பெற வேண்டும். வளர வேண்டும். தென்னிந்தியாவை கட்டுப் படுத்தினால் டெல்லி சுல்தானி யத்தின் வளங்கள் அதிகரிக்கும். எனவே தௌலதாபாத்தை மேம்படுத்திட வேண்டும் என்று முஹம்மது பின் துக்ளக் எண்ணினார்.

## முன்னேற்பாடான முற்போக்குத் திட்டங்கள்

அலாவுதீன் கில்ஜி தேவகிரிக்கும் (1296 - 1316), டெல்லிக்கும் இடையே 700 மைல் (5 மைல் 8 கி.மீ.) நீளமுள்ள நெடுஞ்சாலையை முன்னரே அமைத்திருந்தார். அச்சாலை பலப்படுத்தப் பட்டது. அச்சாலையில் தங்குமிடங்களை அமைக்கச் செய்தார். வழி நெடுகிலும் சாலையின் இரு ஓரங்களிலும் மரங்களை நட்டிடச் செய்தார். சாலையின் இரு புறங்களிலும் மக்களைக் குடியேறச் செய்தார்.

## தேவகிரிக்குச் செல்லும் மக்களுக்கு உதவி

தேவகிரிக்கும், டெல்லிக் கும் இடையில் சிலரை குடியமர்த்தினார். அவர்கள் தேவகிரிக்குச் செல்லும் மக்களுக்கு வேண்டிய பொருள் களைக் கொடுத்தனர். இடை யில் வாழ்ந்திடும் மக்களுக்கு நிலங்களையும் கொடுத்தார். டெல்லியில் வீட்டை விட்டு விட்டு தேவகிரிக்குச் செல்பவர் களுக்கு அவற்றின் மதிப்பிற்கு ஏற்றவாறு பணம் வழங்கினார். டெல்லியை விட்டுச் செல்லும் எவரும் பொருள் நஷ்டம் அடையக் கூடாது என்றும் முஹம்மது பின் துக்ளக் விரும்பினார்.

தேவகிரிக்குச் செல்லும் மக்களுக்கு பிரயாணத்திற் கான வசதிகளையும், அவர்கள் தேவகிரியை அடைந்தவுடன் அவர்களுக்கு உணவு, இருப் பிடம் ஆகியவற்றையும் இலவச மாக அளிக்க உத்தரவிட்டார்.

### சத்தியத்தை முந்தும் சாட்சியம்

“மக்களில் சிறந்தவர்கள் என் தலை முறையினர். அவர்களுக்குப் பிறகு (சிறந்தவர்கள்) அவர்களை யடுத்து வருபவர்கள். அவர்களுக்குப் பிறகு (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வருபவர்கள். பின்னர் ஒரு சமுதாயத்தார் வருவார்கள். அவர்களுடைய சாட்சியம் அவர்களுடைய சத்தியத்தை முந்திக் கொள்ளும். அவர்களுடைய சத்தியம் அவர்களுடைய சாட்சியத்தை முந்திக் கொள்ளும்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள்.

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

### பரிசுப் பொருட்கள்

டெல்லியை விட்டு மக்கள் புறப்படும்போதும், தௌலதாபாத்தை (தேவகிரியை) அவர்கள் அடைந்தபோதும் முஹம்மது பின் துக்ளக் அவர்களுக்கு ஏராளமான பரிசுப் பொருட்களை வழங்கினார்.

### மஹ்துமா-ஐ-ஜஹான்

முஹம்மது பின் துக்ளக்கின் தாயார் மஹ்துமா - ஐ - ஜஹான், அரச குடும்பத்தவர்கள், அமீர்கள், மலிக்குகள், அடிமைகள், குதிரைகள், யானைகள், கருவூலங்கள் டெல்லியிலிருந்து முதலில் தேவகிரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து மார்க்க மேதைகள் செய்யதுகள், ஷேக்குகள், உலமா பெருமக்கள், பெருங்குடிமக்கள், உயர் பதவியாளர்கள் தேவகிரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### வணிகக் குழுக்கள்

இஸாமியின் கூற்றுப்படி, ஆறு வணிகக் குழுக்கள் தௌலதாபாத்திற்கு அனுப்பப்பட்டனர்.

### கி.பி. 1328 - 1329

யஹ்யா சிர் கிந்தி, கி.பி.1328 -1329ஆம் ஆண்டுகளில் (ஹிஜ்ரி 729) முஹம்மது பின் துக்ளக் தேவகிரிக்கு மக்கள் மாறிச் செல்ல உத்தரவிட்டதாகக் குறிப்பிடுகிறார்.

### எல்லோரையும் தேவகிரிக்கு அனுப்பவில்லை

டெல்லியில் கட்டடங்களில் ஒரு நாய் அல்லது பூனையைக் கூட காண இயலாது போயிற்று என்று பரனி கூறுகிறார். தாம் டெல்லி நகருக்குள் நுழைந்தபோது அது வெறுமையாக இருந்தது. அங்குமிங்குமாக சிலரே வாழ்ந்து வந்தனர் என்று இப்னு பதூதா கூறுகிறார். ஆனால், உண்மை நிலை என்ன? எல்லோரையும் டெல்லியிலிருந்து முஹம்மது பின் துக்ளக் தேவகிரிக்கு அனுப்பவில்லை.

### இந்துக்களை அனுப்பவில்லை

டெல்லியிலிருந்து இந்துக்களை தேவகிரிக்கு முஹம்மது பின் துக்ளக் அனுப்பி வைக்கவில்லை. இந்துக்கள் தலைநகர் மாற்றத்தால் பாதிக்கப்படவில்லை.

It follows that the common people, that is the mass of the Hindus, were not affected by the forced emigration to deogir

### இரண்டு கல்வெட்டுக்கள்

டெல்லியில் கி.பி.1327-1328ஆம் ஆண்டுகளில் இந்துக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு வரலாற்று ரீதியான சான்றாக இரண்டு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

**6-8-1327 வியாழன்**

விக்கிரம ஆண்டு 1384 பிரபோத்ரபதி மூன்றாம் நாள் டெல்லிக்கு அருகேயுள்ள நதயனா (தற்காலத்தில் நாரெய்னா) கிராமத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீதரர் என்ற பிராமணர் ஒருவர் கிணறு தோண்டிய செய்தியை கல் வெட்டு கூறுகிறது. 21 வரி களைக் கொண்ட இக்கல்வெட் டில் சிதிலமடைந்து கிடைக்கா தது போக எஞ்சிய 16 வரிகள் நமக்குகிடைக்கிறது. 18" அளவில் 13" இன்ச் உயரத்தில் இக்கல் வெட்டு உள்ளது. இந்தக் கல் வெட்டில் முதல் நான்கு வரிகள் முழுவதுமாக அழிந்து விட்டன.

**முஹம்மது பின் துக்ளக் அங்கீகாரம்**

கல்வெட்டில் 5வது வரியில் முஹம்மது பின் துக்ளக் நதயனா கிராமத்து பிராமணர் ஸ்ரீதரருக்கு கிணறு வெட்ட அங்கீகாரம் வழங்கிய வரலாற்றுச் செய்தி கூறப்பட்டுள்ளது.

**இந்துக்கள் வாழ்ந்த டெல்லி**

முஹம்மது பின் துக்ளக் ஆட்சியின் கீழ் இந்துக்கள் டெல்லியில் வாழ்ந்தார்கள் என்பதனை நதயனா கிராமத் தில் கிடைத்த கல்வெட்டின் 10வது வரி (Verse) அறிவிக்கிறது.

(தொடரும்)


வாழ்த்துக்களுடன் ...!

☎ 04175 - 223786
222528 (E)

மலைவலம் வரும் நகரில்
கலை நயம் பொருந்திய

பூம்புகார்

துணியகம் & ஆடையகம்!

55 தேரடி வீதி திருவண்ணாமலை - 606 601

தொடர் : 2

# ஹஜ் பயண வரலாறு

**பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

1556ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஆட்சியாளர், நான்காவது இவான் என்பவர் வோல்காந்தி தீரத்தில் இருக்கும் அஸ்ட்ராகான் (Astrakhan) என்ற பிராந்தியத்தை கைப்பற்றி அதன் வழியாக மக்கா நகருக்கு செல்லும் பாதையை மூடினார். இதனால் ஆப்கானிஸ்தான், கஜகிஸ்தான, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய மத்திய ஆசியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஹஜ் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் போயினர். 1573ஆம் ஆண்டில் பேரரசர் அக்பர் போர்ச்சுக்கீசிய மன்னரான செபாஸ்டின் ஜோ ஆ மானுவேல் என்பவருடன் ஓர் ஒப்பந்தத்தை செய்து இந்து மஹா சமுத்திரம் வழியாக ஹஜ் பயணம் நடைபெறுவதற்கு வழி செய்தார்.

பேரரசர் அக்பருக்கும், அவருடைய மனைவி ஜோதா அக்பருக்கும் பிறந்தவர் சலீம் என்றழைக்கப்பட்ட நூருத்தீன் முஹம்மது ஜஹாங்கீர். இவர் பிறந்தவுடன் தன் மகன் பேரரசர் அக்பரைப் போல் மாபெரும் மன்னராக விளங்க வேண்டும் அன்று ஆசைப்பட்ட ஜோதா அக்பர், இந்துசமயகுருக்களை அழைத்து அவர்களுடன் ஆலோசித்தார். சலீம் பெயரில் நிறைய தர்மம் செய்ய வேண்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறினர். அதன்படி அவர் கோவில்களுக்கு மானியம் வழங்கியதோடு, அன்னதானம் போன்ற தானங்களை செய்தார். அதற்குப்பின் உலமாபெருமக்களை அழைத்து ஆலோசனை கேட்டார். அவர்களும் நிறைய தர்மம் செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறினர்.

ஜோதா அக்பர் வேறெந்த விதமான தர்மம் செய்வது? என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தார். ஒரு முறை ஹஜ் பயணிகளுக்கு பயண ஏற்பாடு நடந்து கொண்டிருந்த போது நிறைய பேர் அழுது கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் வயதானவர்கள். இதைக் கேள்விப்பட்ட ஜோதா அக்பர், அவர்களை அழைத்து விசாரித்தார். "மகாராணியாரே!

கப்பல்களில் ஹஜ் பயணிகள் நிறைந்து விட்டதால் எங்களுக்கு இடமில்லை என்று அரசாங்க அலுவலர்கள் கூறு கிறார்கள். எங்களை அடுத்த ஆண்டுக்கு வரச் சொல்கிறார் கள். நாங்கள் வயதானவர்கள் அடுத்த ஆண்டில் நாங்கள் உயிரோடு இருப்போமா என்று எங்களுக்கே தெரியாது" என்று கூறி அவர்கள் கண்ணீர் விட்டார்கள்.

அப்போது ஜோதா அக்பருக்கு ஒரு யோசனை வந்தது. தன்னுடைய மகனின் எதிர்கால நல்வாழ்வைக் கருதி, ஒரு கப்பலை ஹஜ் பயணத் திற்கு தயார் செய்தால் அது ஒரு பெரிய தர்மம் என்று எண்ணி தன்னுடைய மகன் பெயரில் சலீமி என்ற ஒரு பிரம்மாண்ட மான கப்பலை கட்டி முடித்தார். ஏறத்தாழ 1,700 ஹஜ் பயணிகள் பயணம் செய்யுமளவிற்கு அந்தக் கப்பலில் இடம் இருந்தது. கடல் கொள்ளைக்காரர்கள் கப்பலின் மீது தாக்குதல் நடத் தாமல் இருக்க ஆயுதங்கள் ஏந்திய காவலர்களையும் அதில் நியமித்தார். மிகப் பெரிய உணவுக் கிடங்கும் அந்தக் கப்பலுக்குள் அமைக்கப்பட் டது. அடுத்தாண்டு எல்லா ஹஜ் பயணிகளுக்கும் அந்தக் கப்பலில் இடம் கிடைத்தது.

சலீமி கப்பல் புறப்படுவ தற்கு முன் உலமாபெரு மக்களை அழைத்து துஆ செய் யும்படி ஜோதா அக்பர் கூறினார். இது மிகப் பெரிய தர்ம காரியம் என்று உலமா பெருமக்கள் கூறி துஆ செய்து அந்தக் கப்பலை புறப்பட வைத்தார்கள்.

சலீமி கப்பலை வணிகத் திற்கு பயன்படுத்தாமல் ஹஜ் பயணத்திற்கு மட்டும் பயன் படுத்தினார் ஜோதா அக்பர். அந்தக் காலத்தில் மதத்தின் அடிப்படையில் துவேஷம் இருந்ததில்லை. அதைத் தூண்டுவதற்கு யாரும் அந்தக் காலத்தில் இருந்ததில்லை.

ஆரம்பத்தில் பேரரசர் அக்பர் போர்ச்சுக்கீசியர்கள் மீது படையெடுக்க எண்ணினார். அவர்கள் ஹஜ் பயணிகளுக்கு வழி விட ஒப்புக்கொண்டதால் அக்பர் படையெடுக்கும் எண்ணத்தை கைவிட்டார். இந்து மகா சமுத்திரத்தின் மீது போர்ச்சுக்கீசியர்கள் செலுத்திய ஆதிக்கம் முகலாய பேரரசை பாதிக்கவில்லை. இதனால் பேரரசர் அக்பர் அவர்களை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார்.

முகலாய பேரரசர் அக்பர் ஹஜ் பயணிகளுக்காக பிரத்தி யேகமான கப்பல்களை அமைத்து ஆண்டுதோறும் அரசாங்க செலவில் ஹஜ் பயணி களை மக்கா நகருக்கு அனுப்பி வைத்தார். ரஹீமி, க்ரீமி, சலாரி என்ற மூன்று கப்பல் களை ஹஜ் பயணிகளுக்காக ஒதுக்கி வைக்கும்படி பேரரசர்

அக்பர் அவருடைய இராஜ பிரதானி அப்துல் ரஹ்மான் கான் ஏகாணான் என்பவருக்கு உத்தர விட்டார். ஹஜ் பயணிகளின் பிரயாணங்களை நிர்வகிப்பதற் காக மீர் ஹஜ் என்ற ஒரு தலைமை அதிகாரியை நியமித்தார். ஹஜ் பயணிகள் பயணம் செய்யும் கப்பலுடன் ஒரு சரக்கு கப்பலையும் பேரரசர் அக்பர் அனுப்பி வைப்பார். ஹஜ் பயணிகளுக்கு தேவையான உணவுகள், குடி நீர், உடைகள், போர்வைகள், தலையணைகள், படுக்கைகள் ஆகிய அத்தியாவசியத் தேவை யான பொருட்கள் சரக்கு கப்பலில் ஏற்றப்பட்டன. ஜித்தா துறைமுகத்தில் இறங்கி மக்கா நகருக்குள் பயணம் செய்வதற் காக ஒட்டகங்களும் சரக்கு கப்பலில் ஏற்றப்பட்டன. பேரரசர் அக்பரின் காலத்தில் வாழ்ந்த சரித்திர ஆய்வாளர் காஜா நிஜாமுத்தீன் அஹ்மது பக்ஷி என்பவர் இந்த விபரங்களை பதிவு செய்துள்ளார். பேரரசர் அக்பரின் மரணத்திற்கு பின் ஆட்சி செய்த மாமன்னர்களான ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கஜீப் ஆஜம் ஷா ஆகி யோரும் ஹஜ் பயணத்திற்கு பெரும் உதவிகளை செய்து வந்தனர்.

பேரரசர் ஔரங்கஜீப் காலத் தில் ஹாஜிகளுக்கு பெரும் மரியாதை வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அவ ருடைய இரண்டு அரசாங்க கப்பல்கள் நூற்றுக்கணக்கான யாத்ரீகர்களை இலவசமாக ஏற்றிக்கொண்டு செங்கடல்வழி யாக ஜித்தா துறைமுகத்தை அடைந்தன. ஹஜ் பயணிகளை நெஞ்சார தழுவி வழி அனுப்பி வைப்பார் பேரரசர் ஔரங்கஜீப். ஹஜ் கடமையை நிறைவேற்றி வரும ஹாஜிகளை நெஞ்சார தழுவி வரவேற்பது பேரரசர் ஔரங்கஜீப்பின் வழக்கமாக இருந்தது. இராஜ தர்பார் நடை பெறுகின்றபோது ஹாஜிகள் அமர்வதற்கு தனி இடத்தை ஏற்பாடு செய்தார் பேரரசர் ஔரங்கஜீப். அவர் அவ்வப்போது ஹாஜிகளை வரவழைத்து அவர் களுடன் அளவளாவுவார். அவர் களின் ஹஜ் பயண அனுபவங் களை கேட்டு அகமகிழ்வார். அரசாங்கத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அவர் ஹாஜி களுக்கு நேரிடையாக விளக்கி சொல்வார். அவர் ஹாஜிகளை பக்கத்தில் நிற்க வைத்து வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை தொழுவதில் மகிழ்ச்சியடைந்தார்.

பேரரசர் ஔரங்கஜீப்பின் ஆட்சியில் ஹாஜிகள் மரணிக் கும்வரை அவர்களுக்கு அரசாங்க செலவில் உணவு, உடை, மருந்துகள் இலவசமாக வழங்கப் பட்டன. அரசாங்க வீடுகள் வழங்கப்பட்டன. அவர்கள் வெளியில் சென்று வருவதற்கு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி

களும், அந்த வண்டிகளை ஓட்டுவதற்கு ஆட்களும் வழங்கப்பட்டன. குதிரைகள் ஓட்டத் தெரிந்த ஹாஜிகளுக்கு வெண்மையான குதிரைகள் வழங்கப்பட்டன. நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கின்ற போது நீதிபதி களின் அருகில் ஹாஜிகளுக்கு இடமளிக்கப் பட்டது. ஔரங்கஜீப்பின் மகள் ஜெய்புன்னிசாவும் ஹஜ் பயணிகளுக்கு ஆதரவை வழங்கினார். இவர் 1676ஆம் ஆண்டில் சாஃபி பின் வலி அல்-கஸ்னவி என்ற அறிஞரை ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா நகருக்கு அனுப்பி வைத்தார். தன்னுடைய ஹஜ் பயண அனுபவங்களை கஸ்னவி அனிஸ் அல்-ஹஜ் என்ற நூலில் விபரமாக குறிப்பிட்டுள்ளார். இந்த நூல் மும்பையில் உள்ள பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் என்ற அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

முகலாய இறுதி மன்னரான இரண்டாம் பகதூர்ஷா ஜாஃபர் என்பவருடைய ஆட்சியின் காலத்தில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் தலை விரித்து ஆடியது. பகதூர்ஷா ஆட்சியின் கீழ் இருந்த பெரும் பகுதிகளை ஆங்கிலேயர்கள் ஆக்கிரமித்து வரியை அவர்களே வசூலித்துக் கொண்டதால் பகதூர்ஷாவுக்கு நிதி நெருக்கடி கடுமையாக இருந்தது. இருந்தாலும் ஆண்டு தோறும் மூன்று கப்பல்களில் ஹஜ் பயணிகளை மக்கா நகருக்கு அனுப்பி வைப்பார்.

முகலாய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இராஜ குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றியிருக்கிறார்கள். முகலாய மன்னர் பாபரின் மகள் குல்பதன்பேகம்53வயதில்ஹஜ் கடமையை நிறைவேற்றினார். 11 பெண்கள் இவர்களுடன் சென்றனர். இவர்கள் நான்கு ஆண்டுகள் அரபு நாட்டில் தங்கியிருந்தனர். இவர்கள் ஹஜ் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கு திரும்ப ஆறு ஆண்டுகளாயின. இந்தியாவிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றிய முதல் பெண்மணி இவரேயாவார்.

இந்து மகா சமுத்திரம் வழியாக பயணம் செய்வதற்கு போர்ச்சுக்கீசியர்களிடம் அனுமதி கேட்டபோது அவர்கள் ஓராண்டு கழித்து குல்பதன் பேகம் அவர்களுக்கு அனுமதி கொடுத்தனர். அந்த ஓராண்டு குல்பதன் பேகம் சூரத் துறைமுகத்தில் காத்திருந்தார். போர்ச்சுக்கீசியர்களிடமிருந்து பயண அனுமதி கிடைத்ததும் குல்பதன் பேகம் சூரத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு அரபிக் கடலில் நான்கு வாரங்கள் பயணம் செய்து ஜித்தா துறைமுகத்தை அடைந்தார். அங்கிருந்து பல்லக்குகளிலும், குதிரைகளிலும் பயணம் செய்து மக்கா

நகரை அடைந்தார். 12,000 உடைகளையும், பெட்டி நிறைய தங்கத்தையும், வெள்ளியையும் கொண்டு சென்று அங்கிருந்த பழங்குடி மக்களுக்கு அவற்றை வழங்கினார்.

முகலாய இராஜ குடும்பத்தைச் சேர்ந்த பேகா பேகம் என்பவர் ஹஜ் கடமையை நிறைவேற்றினார். பின்னர் இவர் ஹாஜி பேகம் என்றும் அழைக்கப்பட்டார். இவர் முகலாய மன்னர் ஹுமாயூனை திருமணம்முடித்துக் கொண்டார். 1576ஆம் ஆண்டில் முகலாய பேரரசர் அக்பரின் மனைவி சலீமா சுல்தான் பேகம் சலீமி என்ற கப்பலில் பயணம் செய்து ஹஜ் கடமையை நிறைவேற்றினார். இவருடன் 40 பெண்களும் பயணம் செய்து ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள். சலீமா சுல்தான் பேகத்திற்கு பாதுகாப்பாக இலாஹி என்ற ஒருகப்பலில் அக்பரின் அலுவலர்கள் பயணம் செய் தனர். இவர் சில ஆண்டுகள் மக்காவில் தங்கி நான்கு முறை ஹஜ் கடமையை நிறைவேற்றினர். மேலும் பல முறை உம்ரா செய்தார். 1582ஆம் ஆண்டு இவர் இந்தியாவுக்கு திரும்பினார்.

பழங்காலத்தில் சீனாவிலிருந்துஹஜ் பயணம் செய்பவர்கள் ஆறு மாதத்திற்கு முன்னரே புறப்பட வேண்டும். இவர்களுடைய ஊர்களில் இருந்து ஏறத்தாழ 2,000 மைல் தொலைவிலுள்ள குன்லுன் என்ற மலைகளின் சரிவுக்கு வர வேண்டும். இந்த மலைகளின் நீளம் ஏறத்தாழ 1,800 மைல்கள். இந்த மலைகளை கடக்க இரண்டு பாதைகள் இருக்கின்றன. ஒரு பாதை வழியாக சென்றால் கிராமங்கள் இருக்கும். குடிநீர், உணவுகள் இந்த வழிப் பாதையில் கிடைக்கும். ஆனால் இந்த பாதையை கடக்க மூன்று மாதங்களாகும். இன்னொரு பாதையைக் கடக்க ஒரு மாதமாகும். ஆனால் இந்த வழியில் குடிநீரோ, உணவுகளோ கிடைக்காது. இவர்கள் குதிரைகளில் சவாரி செய்து வர வேண்டும். இந்த மலைகளைக் கடந்து கஷ்மீரை அடைய வேண்டும். கஷ்மீரிலிருந்து இவர்கள் மும்பைக்கு வந்து அவர்களுடைய குதிரைகளை விற்றுவிட்டு கடல்மார்க்கம் வழியாக ஜித்தா துறைமுகத்தை அடைய வேண்டும். அல்லது கஷ்மீரை அடைந்தவுடன் சிந்து மாகாணம் வழியாக கராச்சி துறைமுகத்திற்கு வந்து, அங்கிருந்து கடல் மார்க்கமாக ஜித்தா துறைமுகத்தை அடைய வேண்டும். ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட்டு இவர்கள் தங்களின் தாயகம் திரும்ப ஒரு வருடமும் ஆகலாம். இந்த வழிப் பாதை ஏறத்தாழ 300 முதல் 500 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்ட வழிப்பாதையாகும். இவர்கள் சீனாவிலிருந்து

கடல் மார்க்கமாக வந்தால் பயணம் செய்யும் நாட்கள் இன்னும் அதிகமாகும்.

ஏமன் நாட்டிலிருந்து மக்கா நகருக்கு தரை மார்க்கமாக பயணம் செய்து வருபவர்கள் ஆசிர் மலைகளை கடந்தாக வேண்டும். ஏமன் நாட்டிலிருந்து மக்கா நகரம் ஏறத்தாழ 700 மைல்கள் தூரத்தில் இருக்கிறது. சவூதி அரேபியாவில் அதிகப்படியாக மழை பொழியும் பகுதி இதுதான். இந்த மலைப் பகுதி கடினமான பாறைகளைக் கொண்டதாகும். சுண்ணாம்பு கற்களும் இந்த மலைப் பகுதியில் நிறைந்திருக்கும். பகல் வேளையில் கடினமான மலைப் பாறைகளிலிருந்து வெப்பம் வீசும். மேலும் சுண்ணாம்பு கற்கள் உடலில் எரிச்சலை உண்டாக்கும்.

இதனால் தீப்பந்தங்களை ஏந்திக் கொண்டு இரவு நேரங்களில் ஹஜ் பயணிகள் ஒட்டகங்களிலும், குதிரைகளிலும் பயணம் செய்து மக்கா நகரை அடைவார்கள்.

1914ஆம் ஆண்டில் முதலாம் உலகப்போா தொடங்கிய கால கட்டத்தில் உதுமானிய பேரரசிற்கு எதிராக இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் போர் தொடுத்தன. பிரிட்டிஷ் மற்றும் உதுமானிய பேரரசுகளுக்கிடையே ஏற்பட்ட பகைமை ஹஜ் பயணிகளைப் பாதிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து வரும் யாத்ரீகர்களுக்கு இடையூறுகள் ஏற்படாது என்றும், பிரிட்டிஷ் கடற்படை மற்றும் இராணுவப் படைகள் அரேபியா மற்றும் ஜித்தாவின் புனிதத்தலங்கள் மீது தாக்குதல்கள் நடத்தாது என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியளித்தது. இதேபோன்ற உறுதிமொழிகளை பிரான்ஸ் மற்றும் ரஷ்யா அரசுகள் அளித்தன. போர்க் காலத்தில் முஸ்லிம்கள் ஹஜ் பயணத்தை மேற்கொள்ளக் கூடாது என்று பிரிட்டிஷ் படை தளபதிகள் கூறினார்கள். ஹஜ் பயணத்தை தடை செய்வது முஸ்லிம்களின் மனதை புண்படுத்தும். ஆகவே ஹஜ் பயணம் அனுமதிக்கபடும்.

ஆனால் பாதுகாப்பைக் கருதி, முஸ்லிம்கள் ஹஜ் பயணத்தை தவிர்த்துக் கொள்வது நல்லது என்று அன்றைய வைஸ்ராய் ஹார்டிஞ்ச் பிரபு கூறினார். போர்க்காலத்தில் பாதுகாப்பில்லாத போதிலும், யாத்ரீகர்கள் இந்தியாவிலிருந்து மக்காவிற்கு புனித யாத்திரை மேற்கொண்டனர். 1917ஆம் ஆண்டு நிலைமைகள் சரியான போது போர்க்கால புனித யாத்திரைக்கு, 1917ஆம் ஆண்டின் பெரிய வெற்றி என்று ஜித்தாவிலிருந்த பிரிட்டிஷ் ஏஜென்சி லெப்டினன்ட் கர்னல் வில்சன் இங்கிலாந்து பிரதமருக்கு கடிதம் எழுதினார்.

(தொடரும்)

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## வாசகர்களே! மறந்து விடாதீர்கள்!

சூழ்ச்சியாளனுக்கெல்லாம் மகா சூழ்ச்சியளானான அல்லாஹ்வே! உனது சூழ்ச்சிகளின் இரகசியம் எங்களுக்கு தெரியாது. எனவே, ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கும் ஆட்சியாளர்களின் அனைத்து தீங்குகளிலிருந்தும் அனைத்து இந்திய மக்களையும், தேசத்தையும் பாதுகாக்க வாசக நேயர்கள் அனைவரும் துஆ செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**- குர்ஆனின் குரல் குழுமம்.**

முஹம்மது காசிம் - லால்குடி; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன் சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; நசீர், மும்தாஜ் - தஞ்சாவூர்; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; ஜரீனா பானு - ஈசநத்தம்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; பாத்திமா நஸ்ருதீன் - ஈசநத்தம்; எம்.எஸ்.முஹம்மது மீரான் ஷாகுல் ஹமீது - ஈசநத்தம்; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; அ.காஜா மைதீன் - நெய்க்காரப்பட்டி; அ.ராபியத் பசரியா - கேரளா; ஜ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; எம்.மதீனா பேகம் - கோவை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; ருக்ஸானா - திருச்சி; ஹஸன் பானு, நூருன்னிஸா - திருச்சி; அ.ஜெய்புன்னிஸா - திருச்சி; பீவி - திருச்சி; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபாணா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; ஜே.ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; அன்சாரி - உடுமலை; குரல் வாசகி - கோவை; சந்தா எண் D 1947 - T.முருங்கப்பட்டி;

குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா - மதுரை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜீ - சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸ்ரீரா, நிலோஃபர் - மதுரை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; சுகர்ணா மவ்லானா - விழுப்புரம்; ஷமியுல்லாஹ், நாஜியா பேகம் - பெங்களூர்; நிஷா - கோவை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது து.ஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், து.ஆ மஜ்லிஸ் குழுவினரும் து.ஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் து.ஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் து.ஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் என் மகளுக்கு திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்! துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் மகிழ்ச்சி கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ.பரக்கத்துன்னிஷா – நாகப்பட்டிணம்.**

## ஈமானின் சுவையைப் பெற்றவர்

“யாரிடம் மூன்று தன்மைகள் அமைந்துவிட்டனவோ அவர் இறைநம்பிக்கையின் சுவையை உணர்ந்து கொள்வார். அவை :

1. அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் ஒருவருக்கு மற்ற அனைத்தையும்விட அதிக நேசத்திற்குரியோர் ஆவது.
2. அல்லாஹ்வுக்காகவே ஓர் அடியாரை ஒருவர் நேசிப்பது.
3. ஒருவரை அல்லாஹ் இறைமறுப்பிலிருந்து காத்தபின், இறைமறுப்புக்குத் திரும்புவதைத் தாம் நெருப்பில் வீசப்படுவதைப் போன்று அவர் வெறுப்பது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்
(ஸஹீஹுல் புகாரி)

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

கேரளா மாநிலம் சுள்ளிமடை மர்ஹூம் சர்புதீன் இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மனைவி ஜனாபா மஹ்மூதா பேகம் அவர்கள் 06.04.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் சிக்கந்தர் இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகளார் ஜனாபா அஜ்மல் நிஸா அவர்கள் 07.04.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு ஜனாப் அப்துல் ரஜாக் அவர்களின் மனைவி ஜனாபா சாலிஹா அம்மாள் அவர்கள் 20.04.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு வீரம்பொத்தை ஜனாப் காசீம் அவர்களின் மனைவி ஜனாபா ஷாஜிதா அவர்கள் 30.04.24 அன்றும்,

குர்ஆனின் குரலின் நீண்டகால வாசகரும், கடலூர் மாவட்டம் பண்ருட்டி "Dr.OEKAR Pharma Exports" உரிமையாளருமான அல்ஹாஜ் O.E.K. அப்துர் ரஹீம் அவர்கள் 01.05.24 அன்றும்,

ஈரோடு மர்ஹூம் ஷேக் அப்துல் காதர் (ரஹ்) (Retd. Post Master) அவர்களின் மகனாரும், பெரிய அக்ரஹாரம் பெரிய பள்ளி வாசலின் இமாம் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் M.E.சிராஜுத்தீன் தாவூதி ஹள்ரத் அவர்களின் சம்பந்தியும், கெமிக்கல் ஜனாப் பாஸித் அவர்களின் தகப்பனாருமான ஜனாப் எஸ்.பரக்கத் அலீ அவர்கள் 25.05.24 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் அப்துல் காதர் (ரஹ்) அவர்களின் மனைவியும், அல்ஹாஜ் A.ஜமாலுதீன் அவர்களின் தாயாருமான ஜனாபா நபீஸா அவர்கள் 27.05.24 அன்றும்,

பெரம்பலூர் "அணுகுண்டு ஹள்ரத்" என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட மாமேதை மவ்லானா மவ்லவீ ஷர்புதீன் பாஜில் மன்பயீ ஹள்ரத் அவர்கள் 28.05.24 அன்றும்,

70 ஆண்டுகளாக உலகின் பல நாடுகளுக்கு சென்று மார்க்க சேவையாற்றி வந்தவரும், தன் கடினமான உழைப்பால் தஅவத் பணிகள் செய்து, பல நூறு பேர்களை தொழுகையாளிகளாக மாற்றிய பெருமைக்கு சொந்தக்காரரும், தன் இறுதி மூச்சு வரை சமுதாயத்தின் நல் வழிக்காக இரவும், பகலும் பாடுபட்டு வந்தவருமான விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் "அமீர் சாஹிப்" அல்ஹாஜ் எஸ்.ஹெச். ஹபீபுர் ரஹ்மான் அவர்கள் 28.05.24 அன்றும்,

சென்னை அமைந்தகரை "தாய் எலக்ட்ரானிக்ஸ்" உரிமையாளரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால வாசகரும்,

பள்ளபட்டி மீர்ரத்த அல்ஹாஜ் மர்ஹூம் முஹம்மது யாகூப் சாஹிப் (ரஹ்) அவர்களின் சகோதரருமான மீர்ரத்த அல்ஹாஜ் அபூபக்கர் அவர்கள் 31.05.24 அன்றும்,

ஈரோடு ஒலகடம் மர்ஹூம் ஷேக் முஹம்மது (ரஹ்) அவர்களின் மகனாரும், ஜம்பை J.S.ஜெய்னுலாப்தீன், J.S.ரஹிமான்ஷா, பெருந்துறை மர்ஹூம் அப்துல் ஹக்கீம் (ரஹ்) ஆகியோரின் மாமனாரும், ஜனாப் T.சையது முஸ்தபா மற்றும் சகோதரர்களின் தகப்பனாரும், ஒலகடம் சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசலின் முத்தவல்லியுமான பட்டேல் S. தஸ்தகீர் அவர்கள் 04.06.24 அன்றும்,

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பள்ளிவாசல் தெருவில் குடியிருந்த புளிக்காரர் மர்ஹூம் அசன் முஹம்மது (ரஹ்) அவர்களின் மகனாரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால வாசகரும், பலசரக்கு வியாபாரியுமான வேடசந்தூர் கவிஞர் ஜனாப் அ.சேக் முஹம்மது அவர்கள் 11.06.24 அன்றும்,

திண்டுக்கல் பேகம்பூர் அல்ஹாஜ் மர்ஹூம் T.S.A. ரஹ்மத்துல்லாஹ் (ரஹ்) அவர்களின் மகனார் "அமீர் சாஹிப்" ஜனாப் முஹம்மது ஜுபைர் அவர்கள் 17.06.24 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி நகர ஐக்கிய ஜமாஅத் தலைவர் மர்ஹூம் கொல்லபட்டி அல்ஹாஜ் முஹம்மது அலீ (ரஹ்) அவர்களின் தம்பி கொல்லபட்டி அல்ஹாஜ் லியாக்கத் அலீ அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றுவிட்டு, ஹஜ்ஜுடைய காரியங்களையெல்லாம் சிறப்பாக முடித்தபின்பு 19.06.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து. அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!


## தாய் என்னும் அழகிய உறவு!

"நபியவர்களிடம் ஒரு மனிதர் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார் ?" என்று கேட்டார். நபியவர்கள் "உன் தாய்" என்றார்கள். அவர் "பிறகு யார் ?" என்று கேட்டார். அப்போது நபியவர்கள் "உன் தாய்" என்றார்கள். அவர் "பிறகு யார் ?" என்று கேட்டார். அப்போது நபியவர்கள் "உன் தாய்" என்றார்கள். அவர் "பிறகு யார்" ? என்று கேட்டார். நபியவர்கள் "உன் தந்தை" என்றார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (ஆதாரம் : புகாரி)

# வாசகர் வட்டம்

ஹஜ் பெருநாள் சிறப்பிதழின் முகப்புப் பக்கத்தில் இடம் பெற்றிருந்த புனித கஃஃபாவைக் கண்டு கண்களும், கல்பும் நிறைந்தன. நினைவுச் சின்னம் எனும் தலைப்பில் வெளியான கட்டுரையில் குர்பானியின் சிறப்புகள், அதன் வரலாறு மற்றும் சட்டங்கள் குறித்து விரிவாக சொல்லப்பட்டிருந்தன. நபி (ஸல்) அவர்கள் அரஃஃபா பெருவெளியில் ஆற்றிய பேருரையில் முஸ்லிம்கள் முழு இஸ்லாமியத்தோடு வாழ்வதற்கு தேவையான அனைத்து விஷயங்களும் சொல்லப்பட்டிருந்தன. அல்ஹம்து லில்லாஹ்!




ஜெ. மொஹம்மது யூசுப்,
பனங்காட்டூர்.

இம்மாத தலையங்கத்தின் இறுதியில் எழுதியிருந்தபடி சீனாவிடமிருந்து நம் நாட்டைக் காக்க மோடி மீண்டும் பிரதமராகக் கூடாது என்பது உண்மையே. மோடியை மீண்டும் பிரதமராக நம் நாட்டு மக்கள் வேண்டா வெறுப்பாக தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை தேர்தல் முடிவுகள் கூறியுள்ளன.

பா. ஹாஜி முஹம்மது,
சேந்தமங்கலம்.

குர்ஆனின் குரல் ஹஜ் பெருநாள் சிறப்பிதழின் அட்டைப் படம் கண்களுக்கு குளிர்ச்சியாக மிக அற்புதமாக இருந்தது. காலத்திற்கேற்றவாறு கட்டுரைகளை மக்களுக்கு பயன்தரக் கூடிய வகையில் வழங்கி வரும் குர்ஆனின் குரல் தொய்வின்றி தொடர்ந்து ஓங்கி ஒலித்திட ஏக இறைவனிடம் துஆ செய்கிறேன். வல்ல ரஹ்மான் நம் துஆகளை கபூலாக்குவானாக.

**கா.முஸ்திரி பேகம்,**
**மதுரை—20.**


“சூஃஃபிகளின் ஹஜ்” என்ற கட்டுரையில் இறைநேசர்கள் ஹஜ்ஜுடைய நாட்களில் தங்கள் இருப்பிடத்தில் இருந்தவாறே எவ்வாறு ஹஜ் செய்தார்கள் என்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது. ஹஜ் செய்ய ஆர்வமுள்ளவர்கள் அவ்வாறு நடந்து கொள்வது மிகவும் ஏற்புடையதாகும்.

**ஷேக் புர்ஹான்,**
**மதுரை.**

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India